பிள்ளை வளர்ப்பு ஓர் ஊழியத் தொடர்

# உங்கள் குழந்தைகளை பயிற்றுவித்தல்

பயிற்ச்சிப்புத்தகம்

## தொகுதி




Craig Caster

FDM
.WORLD

*Train Up Your Children* in Tamil
Parenting Is a Ministry series, Volume 3

## பிள்ளை வளர்ப்பு ஊழியத் தொடரில் இதர தலைப்புகள்

மறுரூபமாக்கும் பிள்ளை வளர்ப்பு (தொகுதி 1)
அன்பான தொடர்புகள் (தொகுதி 2)
வேதாகம சிட்சை (தொகுதி 4)
தலைவரின் வழிகாட்டி

## FDM.world ன் மற்ற பயிற்சிப் புத்தகங்கள்

கிறிஸ்தவ அஸ்திபார உண்மைகள்: கிரேக் காஸ்டரின் சீஷர்களுக்கான ஒரு வலுவான அஸ்திபாரம்
கிரேக் காஸ்டரின்: திருமணம் ஓர் ஊழிய சேவை
கிரேக் காஸ்டரின்: இளம் வாலிபர்களை புரிந்துக்கொள்ளுதல்

FDM.world ன் எல்லா புத்தகங்களும் தனிநபர்கள் வாசிக்க, சிறுகுழுக்களில் சீஷத்துவ உபகரணமாக, மற்றும் ஆலோசணை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கவனிக்கவும்: அசல் பாட புத்தகத்தில் உள்ள அனைத்து வெற்று பக்கங்களும் அகற்றப்பட்டுள்ளது. இந்த காரணத்திற்காக பக்க எண்கள் தவிர்க்கபட்டிருக்கிறது

FAMILY DISCIPLESHIP MINISTRIES
தொலைப்பேசி: (619) 590-1901
மின்னஞ்சல்: info@FDM.world
வலைதளங்கள்: www.FDM.world

உங்கள் குழந்தைகளை பயிற்றுவித்தல், பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு ஊழியம், தொகுப்பு 3, வழங்கியவர் கிரெய் கேஸ்டர்.

ISBN 978-1- 7331045-8-6
பதிப்புரிமை© 2020 கிரேக் காஸ்டர். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை 09012020

குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வசனங்களும் TAOVBSI: பரிசுத்த வேதாகமம் O.V. (BSI) லிருந்து எடுக்கப்பட்டது

பதிப்புரிமையின் கீழ் உள்ள உரிமைகளை வரையறுக்காமல், இந்த வெளியீட்டின் எந்தப் பகுதியும்-அச்சிடப்பட்ட அல்லது மின்-புத்தக வடிவத்தில் அல்லது வேறு எந்த விதத்திலும் வெளியிடப்பட்டவோ - மீண்டும் உருவாக்கவோ, சேமித்து வைக்கவோ அல்லது மீட்டெடுக்கும் அமைப்பில் அறிமுகப்படுத்தவோ, அல்லது எந்த வடிவத்தில் அல்லது எந்த விதத்திலும் (மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு அல்லது வேறு எந்த விதத்திலும்) முன் எழுத்துப்பூர்வ அனுமதி இல்லாமல் அனுப்பவோ முடியாது.

*Translated by*
*Rev. Dr. D. Samuel.DD.*
*Indian Rural Gospel Mission (IRGM)*
*www.irgm.org*
*Email: revdsamuel@gmail.com*
*Whatsapp: 00917904967179.*

# பொருளடக்கம்

முன்னுரை.... 4

அறிமுகம் .... 6

பாடம் - 1: கர்த்தரின் மேலாண்மை முறை.... 10

பாடம் - 2: கர்த்தரின் வார்த்தைக்கு நேராய் நோக்குதல்.... 24

பாடம் - 3: ஒரு தந்தையின் திறன்/ ஆற்றல்.... 36

பாடம் - 4: வீட்டினுள் சீர்குலைவு.... 52

பாடம் - 5: வேதாகம பாத்திரங்கள் .... 62

பாடம் - 6: வேதாகம சத்தியத்தை கற்பித்தல்.... 88

பாடம் - 7: உங்கள் குழந்தைகளை ஒழுங்குபடுத்துதல் .... 100

பாடம் - 8: ஒழுங்கு ஒழுங்குபடுத்துதலுக்கான கொள்கைகள்.... 110

பாடம் - 9: தெய்வீக வீட்டினை அமைத்தல்.... 121

பாடம் -10: ஒன்றுபட்டு இருத்தல் .... 130

பின் இணைப்பு வளங்கள் .... 137

இறுதி குறிப்புகள்.... 186

ஆசிரியரைப் பற்றி.... 190

குடும்ப சீஷத்துவ ஊழியத்தைப் பற்றி .... 193

**முன்னுரை**

பெரும்பாலான பெற்றோர் குறைந்தபட்சம் இரண்டு காரியங்களில்; குழந்தைகளை வளர்ப்பது என்பது அற்புதமாகவும் அதேசமயம் கடினமாகவும் இருக்கும் என்பதை ஒப்புக்கொள்வது உண்டு: ஒவ்வொரு தனித்துவ ஆளுமைக்கு தக்கவாறு மாற்றங்கள் செய்ய வேண்டியது நிர்பந்தம், தொடர்ந்து குழந்தைகளை மகிழ்விப்பது என்பது சவாலான ஒன்றாகும். ஆனால் உண்மையாகவே கடினமானது ஒழுக்கம் கற்பித்தலே. ஒழுக்கம் கற்பிப்பதில் தம்பதிகள் இருவரும் கூட்டணியாக செயல்படவேண்டும். அதே சமயம் தனிப்பெற்றோர் மாற்றுத் திட்டம் இல்லாமல் செயல்படுகின்றனர். குழந்தைப் பருவம் முதல் இளமைப் பருவம் வரை அவர்களை பாதுகாத்து, நல்வழிப்படுத்துவது என்பது எல்லா பெற்றோரும் மேற்கொள்ளும் சவால்கள் ஆகும். அவர்களுடைய பொக்கிஷமான, கீழ்ப்படியாத குழந்தையை உற்றுநோக்கி கேட்கும் சில கேள்விகள்: எப்பொழுது, எங்கே, எப்படி, எவ்வளவு, எத்தனை முறை, எவ்வளவு காலம், இது உண்மையாகவே ஏற்படுகிறதா என்பவை ஆகும். ஆனால் உண்மையிலேயே, பெரும்பாலான பெற்றோர் இன்று எந்த திசையை நோக்கி பார்ப்பதென்று தெரியாமலும், தங்களுடைய பெற்றோர் அவர்களை ஏனோதானோவென்று வளர்த்தியதுபோன்ற பார்வை நிலவுவதும், தங்களுக்கு தேவையான திறன் இல்லை என்றும் எண்ணுகின்றனர்.

ஆனால் செவி சாய்க்கிறவர்களுக்கு உதவி உண்டு. எல்லாவற்றையும் படைத்த நம் தேவன் வழிகாட்டுதல் இல்லாமல் நம்மை விட்டு விடவில்லை. அவரே குடும்பம் என்னும் நிறுவனத்தை உருவாக்கியவர், அவருடைய வேத சத்தியங்கள் வாயிலாக எவ்வாறு வெற்றிகரமாக இருக்க வேண்டும் என்பது குறித்து தெளிவான வழிமுறைகளை வழங்கியுள்ளார். நமக்கு ஒரு எதிரி இருப்பதினால் இதை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். பிசாசாகிய சாத்தான் நமக்கு எதிராக கிரியை செய்கிறான் என்றும், நமது குடும்பத்தின் வலிமையை உடைப்பதற்கு மிகவும் பிரியப்படுகிறான் என்றும், இழந்த நிலையிலான உலகிற்கு சுட்டிக் காட்டுவதற்காக திருச்சபை, சமுதாயம் மற்றும் கிறிஸ்தவ சாட்சிக்கு எதிரான அவனுடைய தாக்குதல் என்றும் வேதாகமம் கூறுகிறது. ஆனால், நம் தேவன் நம்முடைய எல்லா தேவைகளையும் அறிந்து, அவருடைய சத்திய வார்த்தையையும் அவருடைய பரிசுத்த ஆவியையும் தந்தருளுகின்றார். இவ்விரண்டும் கொண்டு எந்தவிதமான போரையும் நாம் எதிர்கொண்டு ஜெயிக்க முடியும்.

ஆனால், கவலைகரமாக, குழந்தைகளை வளர்ப்பதற்கு வேதாகமம் பொருத்தமானது என்று பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு தெரியாமல் இருக்கிறது. ஆகையால் உதவிக்காக அவர்கள் கடந்த கால அனுபவங்களையும், உலக தத்துவங்களையும் நாடுகின்றனர். கர்த்தருடைய ஞானத்தையும் ஆலோசனையையும் கேட்டு, நாடி நம் குடும்பங்களை வலிமை அடைவதற்கு இதுவே சரியான நேரம். நம்மைப் படைத்த கர்த்தருக்கு நம்மை ஒப்புவிக்கவில்லை என்றால் எதிர்காலத்திற்காக நாம் என்னத்தை எதிர்பார்க்க முடியும்? கர்த்தருடைய சித்தத்திற்கு மாறாக நாம் இயங்குவோமேயானால், முடிவு என்பது குழப்பமும் அழிவும்தான். ஒருவேளை அது நிதானமாக வரலாம், நாம் கவனியாமல் போகலாம், ஆனால் முடிவு மிகவும் வேதனையான தாகும்.

பெற்றோராய் இருப்பது என்பது ஒரு ஊழியம் எனும் இத்தொடர் குழந்தைகளை வளர்ப்பதற்கான கர்த்தருடைய திட்டம் என்ன என்பதை கற்றுக்கொள்ள உதவும். பாரம்பரிய குடும்பங்களாக, கலப்பு குடும்பங்களாக, ஒற்றை பெற்றோராக, பேரக்குழந்தைகளை வளர்க்கும் வயது முதிர்ந்தவர்களாக எவ்வகையில் நீங்கள் இயங்கினாலும், பெற்றோருக்கு உரிய கர்த்தரின் கோட்பாடுகள் பயனுள்ளதும் முடிவானதும் ஆகும். நாம் எல்லோரும், பெற்றோரும் குழந்தைகளும், கர்த்தருடைய பிள்ளைகள். மகிழ்ச்சி நிறைந்த, வெற்றிகரமான வாழ்க்கைக்கான சத்தியம் இல்லாமல் அவர் ஒருபோதும் நம்மை விட்டு விலகவே மாட்டார்.

கர்த்தருடைய அற்புதமான, வாழ்வை மாற்றும் கோட்பாடுகளைக் கொண்டு உங்களை ஆசீர்வதித்து, அவர் விரும்பும் பெற்றோராக உங்களை மாற்றுவதற்காக அவரை அனுமதிக்கும்போது உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக.

இந்த ஜெபத்தை சேர்ந்து சொல்லுவோம்

*அன்புள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நாங்கள் உம்மை உயர்த்தி மகிமைப்படுத்தும் பெற்றோர்களாய் இருப்பதற்கு உம்முடைய உதவியையும் ஞானத்தையும் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். உண்மை நம்புவதற்கான விசுவாசத்தையும், நாங்கள் தவறுதலாய் நடப்பிக்கிறவைகளை சரி செய்துகொள்ள கிருபையையும் தந்தருள வேண்டுகிறோம். எங்களுடைய குழந்தைகளை நேசித்து, பயிற்றுவிக்கும் வேலையில் உம்முடைய சித்தத்தைச் செய்வதற்கு உதவியருளும். ஆமென்.*

**அறிமுகம்**

சீடத்துவத்தின் பாதையில், அதாவது கர்த்தரின் கோட்பாடுகளில் உங்களை நடப்பிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது இந்த பயிற்சி புத்தகம். நடப்பது என்ற பதத்தை/ வார்த்தையை நாங்கள் பயன்படுத்திது ஏனென்றால், கர்த்தருடைய கோட்பாடுகளை கொண்டு வாழ்வது என்பது நடக்கக் கற்றுக்கொள்வது போலவே அடிப்படையான ஒன்று என்று புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

**எங்கள் பயிற்சி புத்தகத்தின் இலக்குகள்**

1. பெற்றோராய் இருப்பதற்கான கோட்பாடுகளை தேவன் வழங்குகிறார் என்பதை உங்களுக்கு தெரியப்படுத்துவதற்காக,
2. இந்தக் கோட்பாடுகளை பயன்படுத்திக்கொள்ள நாங்கள் அறிவுறுத்தும் கருவிகளையும் பயன்பாடுகளையும் கொண்டு உங்களைத் தயார் படுத்துவதற்காக,
3. மன்னிப்பு அளித்தல், குணப்படுத்துதல் மற்றும் தேவனுக்குக் கீழ்ப்படிதல் மூலமாய் வரும் ஒற்றுமை வழிகளால் உங்கள் குடும்பங்களுக்கு வழிகாட்டுவதற்காக

குடும்ப சீடத்துவ ஊழியம் ஆனது கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையின் முக்கிய பகுதிகளில் தேவைப்படும் பயிற்சிக்காகவே அமைந்துள்ளது. சீடத்துவத்தில் தோல்வி என்பது பெற்றோராய் இருப்பதில் தோல்விக்கு தொடர்புடையது. இதை நாம் எப்படி அறிந்து கொள்வது? நாம் பார்த்து, அனுபவித்து, நிரூபிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் மூலமாகவே.

**செயல்முறை**

இந்த பயிற்சியானது நான்கு தொகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் தொகுப்பில் இருந்து தொடங்கி அதன்பின் ஒவ்வொன்றாய் வரிசையாக வாசிக்கவும். ஒரு தொகுப்பினை தவிர்த்து உற்சாகம் ஊட்டக்கூடிய பிந்தைய தொகுப்புக்கு முற்படுவது தூண்டுதல் ஊட்டக்கூடிய தாய் காணப்பட்டாலும் அம்முறையை தவிர்ப்பதை அறிவுறுத்துகிறோம், ஏனென்றால் ஒவ்வொரு தொகுப்பும், பாடமும் ஒன்றின் மேல் ஒன்றாய் கட்டியெழுப்புவதாய் அமைந்துள்ளது. உதாரணத்திற்காக, உங்கள் குழந்தையை ஒழுங்குபடுத்துதல் குறித்து தேர்ச்சி பெற நீங்கள் விரும்பி அப்பகுதிக்கு கடந்து செல்லலாம், ஆனால் கர்த்தருடைய வழியில் ஒழுங்குபடுத்துவதற்கு முன்பதாக வேதாகம சத்தியங்களை கற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒரு பாடமாக தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு முன்னேறிச் செல்லுங்கள். ஆவிக்குரிய வெற்றிக்கு தினந்தோறும் சீராக வாசிப்பது என்பது முக்கியம் வாய்ந்ததாகும்.

இந்த சத்தியங்கள் முயற்சி செய்து வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டவைகளாகும். என் வாழ்விலும், என் குடும்பத்தின் மூலமாகவும், கருத்துரை வழங்குதல் மற்றும் பிள்ளை வளர்ப்பு குறித்ததான வகுப்புகளில் எண்ணற்ற மக்களுடைய வாழ்வின் வாயிலாகவும் இவற்றை அனுபவ பூர்வமாய் கூறுகிறேன். உங்களுடைய கனிவான கவனத்திற்கு, இது ' பெற்றோராய் இருப்பதற்கான 5 எளிய வழிகள்' கையேடு அல்ல. வேதாகம சீடத்துவம் என்பது சவாலான ஒரு முயற்சியாகும் எனவே உங்களுடைய சில அணுகுமுறைகளிலும் நடத்தைகளிலும் மாற்றங்கள் இன்றியமையாதவை. இந்த சத்தியங்களை வெற்றிகரமாக செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கும் இந்த செயல்முறைக்கு அர்ப்பணிப்பும் தியாகமும் தேவைப்படுகிறது.

**ஒவ்வொரு நாளைத் துவங்குவது**

- ஒவ்வொரு நாள் பாடத்தையும் கர்த்தரோடு செலவிடும் நேரம் கருதி, அவர் உங்களோடு தம்முடைய வசனத்தின் மூலமாய் பேசுவார் என்று எதிர்பார்த்திருங்கள்

- ஒவ்வொருநாளும் ஜெபத்தோடு துவங்கி எந்தெந்த நிலைகளில் உங்களுக்குள் மாற்றம் வேண்டும் என்று கர்த்தரிடம் வெளிப்படுத்த கோரி, நீங்கள் கற்றுக்கொண்டதை பயன்படுத்த உங்களுக்கு அதிகாரம் வழங்க மன்றாடுங்கள்
- பிரதிபலிப்பு மனநிலை உடையவர்களாய் இருங்கள். இந்த புத்தகத்தை வாசித்து முடித்து விட்டேன் என்று சொல்வதற்காக வேண்டி அவசரமாக வாசித்து முடிக்க வேண்டாம். கர்த்தர் உங்களோடு பேசுவதற்கு நேரம் கொடுத்து, நீங்கள் கற்றுக் கொண்டவைகளின் வாயிலாக தியானியுங்கள்

**கவனிக்க வேண்டிய விஷயங்கள்**

- இந்த வெளிப்பாடு ஒரு புதிய முன்னுரிமையாய் இருப்பதினால் இதற்காக நேரம் அர்ப்பணிப்பு தேவைப்படும். பாடங்களை அன்றாடம் கற்க வேண்டும். ஒருநாள் கற்பதை தவறினாலும், கற்றலை நிறுத்தாமல், எல்லாப் பாடங்களையும் ஒன்றின் பின் ஒன்றாக கற்று முடிக்க கவனமாய் இருங்கள்
- சிலநேரங்களில் உபாயங்களை நாம் துவங்குகிறோம் ஆனால் அவற்றை முடிப்பதில்லை. நீங்கள் பெற்றோராய் இருப்பது என்பது இன்றியமையாத பொறுப்பாக எண்ணி உண்மையுடன் வாசித்து முடிக்க வேண்டும் என்று தீர்மானியுங்கள். உங்களுடைய முன் உரிமைகளுக்காகவும் நீங்கள் முன்நிறுத்தும் இந்த அர்ப்பணிப்புக்காகவும் ஜெபியுங்கள். இந்த கற்றல் மற்றும் ஜெபத்திற்காக வேண்டி ஒரு பொறுப்புள்ள பங்காளரை தேர்வு செய்யுங்கள்
- நீங்கள் திருமணம் ஆனவரா, உங்கள் கணவனோ மனைவியோ இந்த முயற்சியின் இன்றியமையாத ஒரு அங்கம் ஆவார். சேர்ந்தோ அல்லது தனித்தனியே கற்றாலும் எப்பொழுது நீங்கள் கற்றவைகளை விவாதத்தில் வைப்பது அவசியம் ஏனென்றால் திருமண மற்றும் பெற்றோராய் இருப்பது என்பதின் சிக்கல்களை குறித்தும் மாற்றங்களை குறித்தும் இந்த தொகுப்பு விவரிக்கின்றது
- வழங்கப்பட்ட தகவல்களின் அளவுகளில் பாடங்கள் மாறுபடலாம். ஒவ்வொரு பாடத்தை வாசித்து கற்றபின் அடுத்த பாடத்தை உற்றுநோக்கி கர்த்தரோடு உங்கள் நேரத்தை செலவிட திட்டமிட்டு அதிகமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்
- கேள்விகளுக்கான உங்கள் பதில்களையும், உங்கள் எண்ணங்களையும் ஜெபங்களையும் பதிவிடுவதற்காக இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி புத்தகத்தை நீங்கள் பதிவிறக்கம் செய்து அச்சு எடுத்திருந்தால் கூடுதல் வெற்றுத் தாள்களை சேர்த்து மூன்று வளை கட்டுதல் (Spiral Binding) செய்வதை பரிந்துரைக்கிறோம்

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

இந்த பகுதி வேதாகமத்தை படிப்பதற்கும் வழங்கப்பட்ட பாடத்தை தொடர்பு படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகிறது. இந்த சீடத்துவ முறையின் வாயிலாக நீங்கள் வேதாகமத்தையும், பெற்றோராய் இருப்பதற்கு வேதாகம சத்தியங்களையும், கர்த்தர் பெற்றோராகிய உங்களிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதையும் பழக்குவித்துகொள்வீர்கள்.

**சுய பரிசோதனை**

> **உண்மை கோப்பு**
> இந்த மாதிரியான பெட்டிகள் வேதாகமத்தில் உள்ள வார்த்தைகளின் அல்லது சொற்றொடர்களின் வரையறைகளை வழங்குகின்றன. நன்கு அறியப்பட்ட, இறையியல் ரீதியாக சிறந்த வேதாகம அகராதிகள் மற்றும் தெளிவுக்காக வர்ணனைகளை பயன்படுத்த நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம், முடிந்தவரை குறிப்பிடப்படுகிறது. பல வரையறைகள் பின் இணைப்பு T யிலும், சொற் களஞ்சியத்திலும் உள்ளன.

வேதாகம சத்தியங்களை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது, இந்த பகுதியானது சுயபரிசோதனை செய்வதற்காகவும், தனிப்பட்ட முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகளை கண்டறியவும் நேரத்தை வழங்குகிறது. நுண்ணறிவு, அறிக்கையிடுதல், மாற்றங்கள் செய்வதற்கான வலிமையும் ஞானமும் பெற ஜெபங்களை ஏறெடுக்கவும் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. சீடர் ஆகும் செயல்முறையின் ஒரு அம்சம் தனிப்பட்ட பொறுப்பாகும். உங்கள் கணவன் அல்லது மனைவிக்கு எதிராகவோ, உங்கள் குழந்தைகளுக்கு எதிராகவோ நீங்கள் பாவம் செய்ததை கர்த்தர் உணர்த்துவார் ஆனால், அவர்களிடத்தில் அந்தப் பாவத்தை அறிக்கை செய்து மன்னிப்பு கோருங்கள். இது கூறப்படவில்லை என்றாலும் இதனை தவறாமல் பயிற்சி செய்யுங்கள்.

***செயல் திட்டம்***

வேதாகம சத்தியங்களை கற்ற பின்பு, சவால்களைக் கொண்டு நடவடிக்கை எடுத்து கற்றுக் கொண்டவற்றை வாழ்வில் பயன்படுத்த இந்தப் பகுதி உதவுகின்றது. உண்மையான சீடர்களாய் இருக்க நாம் அறிவில் வளருவது மாத்திரம் கர்த்தரின் விருப்பமேயல்லாமல், நாம் அவற்றை வாழ்ந்து காட்டுவதுமே அவருடைய விருப்பம்.

**பின் இணைப்பு வளங்கள்**

இந்த பயிற்சி புத்தகத்தின் இறுதியில் உள்ள பின் இணைப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். அவை உங்கள் முன்னேற்றத்திற்காகவே, அவற்றை இந்த பயிற்சி புத்தகத்தின் முழுமையிலும் குறிப்பிடுகிறோம். இந்த அற்புதமான பயணத்தை தூங்குவதற்கு முன்பாக தொகுப்பு 1ல் பின் இணைப்பு (Appendix A): பெற்றோர் உறுதிப் பாட்டு கடிதத்தினை நிரப்பவும்.

**ஆசிரியரின் வழிகாட்டி**

FDM.worldன் கீழ் இலவச ஊழிய பதிவிறக்கங்களில் ஆசிரியரின் வழிகாட்டி உள்ளது. எங்களுடைய இணையதளத்தில் எல்லா கோப்புகளும் புத்தகங்களும் சீடத்துவத்தை குறித்தே கவனம் செலுத்துகின்றன. இலவசமாகவும் வழங்கப்படுகின்றன.

## பாடம் 1

### கர்த்தரின் மேலாண்மை முறை

பெற்றோருக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் இடையில் ஆரோக்கியமான உறவு நிலவும்போது ஒழுக்கமும் பயிற்சியும் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். இது நம் குழந்தைகளுக்கு பயிற்சியளிப்பதற்கு உறுதுணையாய் இருக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். நமக்கும் அவர்களுக்கும் இடையிலான உறவு பலவீனமாய் காணப்படும் பட்சத்தில், ஆசிரியராகவோ பயிற்சியாளராகவோ பெற்றோர் ஆற்றும் பங்கு தடைபடுகிறது. நேர்மறையான ஒரு உறவு இல்லாமல் அதிகாரத்தின் வாயிலான பயிற்சி உண்மையில் விரோதத்தை உருவாக்குகிறது. இன்றைய நவீன கால தண்டனை முறை, தண்டனையை முதன்மையாகவும் அடிப்படையாகவும் கொண்டது என்பது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தண்டனை மட்டுமே தனி நபர்களின் சீர்திருத்தத்தை கொண்டுவருவதில்லை. புள்ளிவிவரங்களின்படி. பெரும்பாலானவர்கள் தண்டனை காலத்திற்கு பிறகு விடுதலை செய்யப்படும்போது மீண்டும் ஒரு குற்றத்தில் ஈடுபட்டு மீண்டும் சிறைக்கு செல்கின்றனர்.

பயிற்சியின் ஒரு அங்கமாக ஒழுக்கம் கற்பித்தல் இருப்பினும் பயனுள்ள பெற்றோராய் இருப்பது என்பது அன்பினாலேயே கட்டமைக்கப்படுவதாகும். குழந்தைகளையும் பதின்ம வயதினரையும் (இளைஞர்களையும்) ஊக்குவிப்பதற்கான மிக சக்திவாய்ந்த உந்துதல், அன்பேயாகும். அவர்களுக்கு அன்பு காட்டி சரியான முடிவுகளை எடுக்க நாம் முயற்சி செய்யவேண்டும். குழந்தை பருவத்திலிருந்து பதின்ம வயதினை எட்டும் சிறார்கள் தங்கள் சுதந்திரத்திற்காய் போராடினாலும் அவர்களுக்கும் பெற்றோரின் சீரான அன்பு அவசியம். நாம் அவர்களிடத்தில் அன்பில்லாத கருத்துரையாடலை மேற்கொள்வோமேயானால் அவர்கள் தங்களுக்கானவைகளில் தேர்வு செய்யும் திறனை குறைப்பதற்கான தடையாக நாம் இருக்கிறோம். வேதாகமமும் அன்பை குறித்து அநேக காரியங்களை கற்றுத்தருகின்றது. ஏனென்றால் ஒருவருக்கு ஒருவர் அன்புகூறும் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார். இரண்டாம் தொகுப்பில் நாம் கற்றதுபோல, கர்த்தர் அன்பை குறித்து 1 கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தில் தெளிவாக வரையறுக்கிறார். நம்மை நாமே மதிப்பீடு செய்வதற்காகவும், ஏதேனும் தவறுகள் செய்திருந்தால் சரி செய்துகொள்வதற்காகவும், நம் குழந்தைகளுக்கு அன்பை சரியாக தெரிவிப்பதற்காகவும் கர்த்தர் இந்த வழிகாட்டுதல்களை கொடுத்துள்ளார்.

கணவன் மனைவிக்கு இடையிலான ஒற்றுமையை குறிப்பிடாமல் அன்பை குறித்ததான கலந்துரையாடல் நிறைவேறாது. இந்த கணவன் மனைவி உறவில் அன்பு கலந்த கருத்து பரிமாற்றம் முற்றிலும் தேவையான ஒன்றாகும். இதுவே வெற்றிகரமான கூட்டுறவுக்கு மூலமும் அடித்தளமுமாகும். வீட்டில் ஒழுக்கத்தை நிர்வகிப்பதில் இந்த அன்பின் கூட்டுறவே தொடக்க புள்ளியாகும். கணவன் மனைவிக்கு இடையில் ஒப்புக்கொள்ளுதல் இல்லாத நிலை, குழந்தைகளை குழப்பத்திற்கும் ஒழுக்கத்தை குறைத்து மதிப்பிடுகிறதற்கும் உட்படுகின்றது. அன்பின் கருத்து பரிமாற்றத்தை பெற்றோர் சீரான முறையில் தங்களுக்கிடையிலும் குழந்தைகளுக்கு ஒழுக்கம் கற்பிக்கும் செயல்பாட்டின்போதும் உபயோகிக்க வேண்டும்.

நீங்கள் கவனிப்பீர்களேயானால், இந்த பயிற்சி புத்தகம் அன்பை குறித்ததான தொகுப்பை தொடந்து வரும் ஒரு பயிர்ச்சிப்புத்தகம் ஆகும். பயிற்சி மிக அவசியமானதும், பெற்றோருக்கு கர்த்தரிடத்திலிருந்து வரும் ஆணையுமாகும். குழந்தை உங்களுடைய அன்பில் பாதுகாப்பாய் இருக்கும்போது பயிற்சியானது பயனுள்ளதாக இருக்கும். அன்பு கலந்த கருத்து பரிமாற்றமும் பயிற்சியும் ஒன்றாக வேலை செய்து ஒன்றை ஒன்று கட்டி எழுப்புவதாகும். பயிற்சியில்லா

அன்பு பலவீனமான சுயநலமான ஒரு குழந்தையை உருவாக்குகிறது. அன்பு இல்லாத ஒழுக்கம் தூண்டுதலை ஏற்படுத்தி, கிளர்ச்சியை வளர்த்தி குழந்தைகளை உணர்ச்சிரீதியாக முடக்கிவிடும்.

**பயிற்சியானது இரு மடங்காகும்**

**1. உங்கள் குழந்தைகளை ஒழுங்குபடுத்தல்**

குழந்தையை பயிற்றுவிப்பதில் முதன்மையானது சீடத்துவம் - வேதாகம தார்மீகங்களையும் மதிப்புகளையும் கற்பித்தல். நாம் நம்முடைய குழந்தைகளை சீடராக்கும்போது, கர்த்தரின் சத்தியங்களை (தேவ வார்த்தைகளை/ வேத வசனங்களை) அவர்களுடைய இருதயங்களில் எடுத்துக்காட்டு வாயிலாகவும் அறிவுறுத்தல் வழியாகவும் உட்கொள்ள ஊக்குவிக்கின்றோம். ஒரு குழந்தைக்கு சரியான அல்லது தவறான நடத்தையை எவ்வாறு அடையாளம் காண்பது என்பவற்றை கற்பித்தல் பெற்றோரின் பொறுப்பாகும். அது இல்லாமல் எப்படி ஜெபிப்பதென்பதையும், தேவ வார்த்தையை/ வேத வசனங்களை கற்பது எப்படி என்றும் கர்த்தரோடு ஒருநிலையான உறவை வைத்துக்கொள்வது எப்படி என்பதையும் பெற்றோர் கற்பிக்க வேண்டும். வேத தார்மீகங்களோடும் மதிப்புகளோடும் குழந்தை பிறப்பதில்லை; அவைகளை குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டும். கட்டளையாக மட்டுமல்லாமல் பெற்றோர் தங்கள் குழந்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு சலுகையாகவும் கர்த்தர் கருதுகின்றார் (உபாகமம் 11: 19 - 20)

> **உண்மை கோப்பு**
>
> சீடர் (வினைச்சொல்) - உதாரணங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் மூலமாக தேவ வார்த்தை, ஒழுக்கம் மற்றும் மதிப்புகளை நம் குழந்தைகளின் இருதயங்களில் பதித்தல்; ஜெபிப்பது எப்படி என்பதையும் கர்த்தரோடு ஒருநிலையான உறவை வைப்பது எப்படி என்பதனையும் கற்பித்தல் (ஆவிக்குரிய பயிற்சி)
>
> ஒலிக்கும் - முதிர்ச்சி பெற்ற இளைஞர்களின் குணநலன்களாகிய பொறுப்பு மற்றும் சுய கட்டுப் பாட்டினை நம் குழந்தைகளுக்குள் செலுத்துதல் (நடத்தை பயிற்சி)

> கர்த்தர் அபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும் தனக்கு பின் வரும் தன் வீட்டாருக்கும், நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார் (ஆதியாகமம் 18: 19)
>
> நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளும்போதும், எழுந்திருக்கும்போதும் அவைகளைக் குறித்து பேசி... (உபாகமம் 6: 7)
>
> பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடந்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதிமொழிகள் 22:6)

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கீழ் கண்ட வசனத்தை ஒரு சில முறை வாசித்து, கர்த்தர் உங்களுக்கு உணர்த்தும் காரியங்களை விவரிக்கவும். குறிப்பாக இந்த வசனம் தந்தைகளுக்கு உரையாற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு மனைவியும் சமமுக்கியமாக கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த உதவியாளர் பணியாக கருத்தில் கொண்டு வாசிக்க வேண்டும். முன்பு குறிப்பிட்டது

போல, கணவனும் மனைவியும் ஒரு குழுவாக செயல்பட வேண்டும், தங்கள் குழந்தைகளை சீடராக்கும், ஒழுங்குபடுத்தும் பொறுப்பு இருவருக்குமானது.

> பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபேசியர் 6:4)

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

தெளிவான மற்றும் குறிப்பிட்ட வழிமுறைகளை இந்த வசனத்தில் வழங்கியுள்ளார், குழந்தைகளை வளர்க்கும் முறை என்ற இந்த பயிற்சியில் இதனை தொடர்ச்சியாக பார்க்கவிருக்கிறோம். நமது குழந்தைகள் கர்த்தரின் பிள்ளைகள், ஆவிக்குரிய முதிர்ச்சியுள்ள வாலிபர்களாக (ஒவ்வொரு வாய்ப்பினையும் கொண்டு) அவர்கள் மாற வேண்டும் என்பதே அவரின் வாஞ்சை. அவருடைய திட்டத்தைக் கற்றுக்கொண்டு அதனை கடைபிடிப்பது நமது பொறுப்பாகும். வளர்த்தல் என்ற வினைச்சொல் தொடர்ச்சியான செயல் என்பதைக் குறிக்கின்றது, செய்வது, தொடர்ச்சியாக செய்வது மற்றும் ஒரு கட்டளையாகவும் விளங்குகின்றது. குழந்தை வளர்த்து தன்னை சுயமாய் வளர்த்திக்கொள்ளும்வரை இவற்றினை நாம் உண்மையுடன் செய்ய வேண்டும்.

**உண்மை கோப்பு**

வளர்த்ததால் – எக்ட்ரேபோ *Ektrepho* (கிரேக்கம்) வளர்க்க, உணவளிக்க. குழந்தைகளை முதிர்ச்சி பெற செய்ய, பயிற்சி அளிக்க அல்லது கற்பிக்க.

பயிற்சி - பாய்டேய்யா *Paideia* (கிரேக்கம்) தண்டித்தல், ஏனெனில் பாவமுள்ள குழந்தை களுக்கான பயனுள்ள அணைத்து வழிமுறைகளும் ஒழுக்கத்தையும் திருத்தத்தையும் கர்த்தரின் ஒப்புதலின்படி உள்ளடக்கி குறிக்கின்றன.

அறிவுரை - நௌதெசியா *Nouthesia* (கிரேக்கம்)எச்சரிக்கை, அறிவுரை, ஊக்கம் அளிக்கும் வார்த்தை, அல்லது கண்டித்தல் சரியான நடத்தைக்கு வழிவகுக்கிறது. முன்மாதிரியான ஒருவர், சரியான புரிதல் உணர்வினை மற்றவர்மீது செலுத்துவதற்கான யோசனை.

எனினும், ஒரு தவறுதலான கருத்தினை நாம் முதலில் கவனிக்க வேண்டும். இந்த பணியை கர்த்தர் திருச்சபைக்கு முதன்மை பொறுப்பாக தரவில்லை. பல வருடங்களாக குடும்ப ஊழியத்தில் நான் கண்ட ஒரு உண்மை என்னவென்றால், கிறிஸ்தவ குடும்பங்களில் பிறந்து வளரும் 90 சதவிகித குழந்தைகள் தங்களுடைய வீடுகளில் ஒழுக்கமில்லாமல் வளருவதை தான். ஆனால் பெற்றோர்கள் இந்தப் பொறுப்பினை திருச்சபைக்கு விட்டுவிட்டனர் ஏனென்றால் பெரும்பாலான தந்தைகள் குழந்தைகளை எவ்வாறு ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற பயிற்சியினை மேற்கொள்ளவில்லை. அவர்களுடைய முன்னுரிமைகள் வேறு காரியங்களில் இருப்பதைக் காண்கின்றோம். திருச்சபையில் பங்காயிருக்கும் சில தாய்மார்களும் தகப்பன்மார்களும் தாங்களாகவே முன்வந்து கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் வீட்டிலேயே ஆவிக்குரிய பயிற்சி அதாவது சீடத்துவதை தங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கச் சொல்லி அறிவுறுத்துகின்றனர். அப்படி முன் வருபவர்களுக்காக நாம் கர்த்தரை ஸ்தோத்திரிப்போமாக. திருச்சபையானது கர்த்தரால் நியமிக்கப்பட்டு, பெற்றோர்களுக்கும் குடும்பங்களுக்கும் ஆதரவளிக்கவும், உடன் வருவதற்க்காகவும், ஊக்குவிக்கவுமேயாகும். (எபேசியர்4:11-16), திருச்சபையானது எப்பொழுதும் குழந்தைகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பிலிருந்து பெற்றோரை ஒருபோதும் திசை திருப்புவது கிடையாது.

**2. குணத்தை கட்டமைத்தல்**

முதிர்ச்சிபெற்ற வாலிபர்களின் குணநலன்களாகிய தனிப்பட்ட பொறுப்பு மற்றும் சுய கட்டுப்பாடு ஆகிய இவ்விரண்டுமே குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான இரண்டாவது மிக அவசியமான உந்துதலாகும்.

இந்த குணாதிசயங்களோடு நாம் பிறப்பதுமில்லை, அவற்றை நாம் இயற்கையாக பெறுவதுமில்லை. இவற்றை பயிற்சியின்வாயிலாக பெறுகின்றோம். மேல் குறிப்பிட்டுள்ள இவ்விரண்டும், இவற்றோடு ஆவிக்குரிய சீடத்துவமும் பெற்றோர்களுக்கான பொறுப்பு என்று வேதாகமம் கற்பிக்கின்றது.

**சுய பரிசோதனை 1**

உங்கள் குழந்தைகளை உங்கள் வீடுகளில் கர்த்தருக்கேற்ற ஒழுக்கத்தினை கற்பிக்கிறீர்களா?
__ ஆம் __ இல்லை.

உங்களுடைய பதிலை விவரிக்கவும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

கர்த்தருக்கேற்ற ஒழுக்கத்தினை கற்பிக்காத பட்சத்தில், நீங்கள் கற்று தொடங்க விரும்புகிறீர்களா? __ ஆம் ___ இல்லை.

விசுவாசத்தோடும் ஞானத்தோடும் நீங்கள் கற்றுக்கொள்ளப் போகிறவர்களை கடைபிடிக்க கர்த்தரிடம் நீங்கள் மன்றாட நினைக்கும் ஜெபத்தினை எழுதவும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இனி வரும் பாடங்களில் சீடத்துவம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றிற்குள் செல்வதற்கு முன்பாக, வீட்டில் கர்த்தரின் மேலாண்மை முறையைக் குறித்து நாம் புரிந்துகொள்வோம். நம்முடைய வீடுகளில் ஒழுங்கின்மை காணப்படுமேயானால், அவைகள் நம் குழந்தைகளை வளர்ப்பதற்கான வலுவான பாதுகாப்பான சூழல்களாக அமையாது.

**கர்த்தரின் மேலாண்மை முறையை உபயோகிப்பது**

பெற்றோர்களுக்கு கர்த்தர் கடினமான ஒரு பணியை தரவில்லை ஏனென்றால் அவருடைய வார்த்தையையும் ஆவியையும் தந்தருளியுள்ளார். அவருடைய வேத சத்தியத்தின் வாயிலாக குழந்தைகளை வளர்த்துவதற்கான குறிப்பிட்ட வழிமுறைகளை கர்த்தர் நமக்கு தருகின்றார். பரிசுத்த ஆவியானவர் நம்மில் கிரியை செய்து, அவருடைய சித்தத்தினாலே எல்லாவற்றையும் செய்வதற்கு நமக்கு பெலனுண்டு.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கீழ் காணும் இரண்டு வேதாகம வசனங்களை வாசித்து, அவற்றின் அர்த்ததையும், பெற்றோராயிருக்கும் நம் பணிக்கு எப்படி அவை தொடர்புடையவை என்ற விளக்கத்தினை விவரிக்கவும்.

> மேலும் கிறிஸ்துவின் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு (எபேசியர் 1:11)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

> நாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன் (எபேசியர் 1: 19)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளின் வாயிலாக அவருடைய மேலாண்மை முறையை நமக்கு கோடிட்டு காட்டியுள்ளார். அவருடைய சத்தியத்தையும், அவருடைய வல்லமை மற்றும் பெலத்தினால் அவர் கூறும் எல்லாவற்றிற்கும் நாம் கீழ்ப்படிவோமானால் நம் வாழ்வின் எல்லா வேலைகளிலும் நமக்கு ஆசீர்வாதம் உண்டாகும்.

**ஒற்றை பெற்றோருக்காக**

இந்த அறிவுறுத்தல்கள் அனைத்தும் உங்கள் சூழ்நிலைகளுக்கு குறிப்பாக பொருந்தாது, ஆனால் மற்ற பெற்றோருக்கு வேதாகமத்தின் பாணியில் ஆலோசனை வழங்க நீங்கள் அழைக்கப்படலாம். எனவே இந்த விஷயத்தை பற்றி கர்த்தர் என்ன சொல்லுகிறார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். கூடுதலாக, நீங்கள் ஒரு வேலை திருமணம் செய்து கொள்ளலாம். ஆகவே, கர்த்தர் உங்களுக்கு கற்பிக்க விரும்பும் ஞானமாகவும் புரிந்துகொள்ளலாகவும் இந்த கொள்கைகளைக் கற்றுக்கொள்ளுங்கள், எதிர்காலத்தில் நீங்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் இந்த பயிற்சி உங்களை தயார் செய்வதாய் விளங்கும். ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தரின் முழு ஆலோசனையையும் தெரிந்துகொள்ள விரும்புகிறார் (அப்போஸ்தலர் 20:27). நீங்கள் இதை அறியாமல் இருந்தால் உங்கள் குழந்தைகளுக்கு சரியான ஆலோசனையை வழங்குவது எப்படி? தனியாக குழந்தைகளை வளர்க்கும் பெற்றோருக்கு

ஊக்கமளிக்கும் பயனுள்ள நுண்ணறிவைக் கண்டு பிடிக்கவும் பின் இணைப்பு ஐ க்கு நேராய் திருப்பவும்: ஒற்றை பெற்றோருக்கான அத்தியாவசியங்கள்.

**கலப்பு குடும்பங்கள்**

ஒரு வேலை நீங்கள் கலப்பு குடும்பமாய் இருந்தால், இந்த அறிவுறுத்தல்கள் எதுவும் மாறாது. கர்த்தருடைய வேதாகமத்தின் எந்த பகுதியிலும் கலப்பு குடும்பத்தினர் இந்த மேலாண்மை முறையிலிருந்து விளக்கப்படுகிறார்கள் என்று கூறவில்லை. கர்த்தருக்கு ஒன்று, இரண்டு, மூன்று என்று பல திட்டங்கள் இல்லை. நாம் பின்பற்ற வேண்டிய ஒரே திட்டத்தை அவர் அருளியுள்ளார். கலப்பு குடும்பங்களின் கூடுதல் உதவிக்கும் ஊக்கத்திற்கும் பின் இணைப்பு ஒ வை பார்க்கவும்: கலப்பு குடும்ப பெற்றோராய் இருப்பது.

**மேலாண்மை முறையின் தர்க்கம்**

சிறிய அல்லது பெரிய குழு அமைப்பில் நீங்கள் பணிபுரிந்திருந்தால், மேலாண்மை முறை என்பது அந்த அமைப்பில் இருப்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இந்த அமைப்பு இல்லாமல் தலைமை என்பது கிடையாது. கோளாறோ, பிரிவோ மற்றும் குழப்பமோ பேரழிவை கொண்டுவரும். ஒரு வீடும் ஒரு குழு என்பதால், நம் வீடுகளில் ஒரே மேலாண்மை முறை - கர்த்தரின் மேலாண்மை முறையில் செயல்பட வேண்டும்.

பல குடும்பங்களில் ஒழுங்கற்ற நிலை நிலவுவதினால் பெரும் சிக்கல்களை சந்தித்துள்ளன. வீட்டிற்குள் இருக்கும் பிரிவு வீட்டிற்கு வெளியிலும் பிரதிபலிக்கிறது. கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியாமல் காணப்படும்போது, கிறிஸ்தவ குடும்பங்கள், அறியாமையினால், கர்த்தருடைய வசனத்துக்கும், இறுதியில் கர்த்தருடைய நாமத்திற்கும் அவதூறு விளைவிக்கின்றன.

கர்த்தரின் வார்த்தை சொல்வதை கிறிஸ்தவ தம்பதிகள் ஒப்புக்கொள்ள வேண்டும். குடும்ப நிர்வாகத்திற்க்காக வேறு எந்த தரத்தையும் நீங்கள் பின்பற்றினால், நீங்கள் கர்த்தருடைய ஆசிர்வாதத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல. கர்த்தரின் மேலாண்மை முறைக்கு நாம் கீழ்ப்படியாதபோது, பின் விளைவுகள் நிச்சயம் உண்டு. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியதேபோவோமானால், ஒழுக்கத்தை நிர்வகித்து, நாம் மனந்திரும்பி அவருடைய வார்த்தைக்கேற்ப நடக்க வேண்டும் என்பதனை நம்முடைய பாதுகாப்பிற்காக நம்மை எச்சரித்துள்ளார்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கர்த்தர் தமது பிள்ளைகளுக்கு என்னனென்னவைகளை வாக்களித்துள்ளார் என்பதை விவரிக்கவும்.

> ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே. அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள்

> சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். (எபிரேயர் 12: 3 – 11)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

விளைவுகள் எந்த ரூபத்திலும் வரலாம்: கர்த்தரிடமிருந்து பிரிக்கப்பட்ட உணர்வு, அவருக்காக வாழும் பலமில்லாமை, அமைதியோ மனநிறைவோ இல்லாமை, குழப்பம், கொந்தளிப்பு, மன அழுத்தம், சர்ச்சை, இன்னும் சில. ஆனால் நற்செய்தி என்னவென்றால், கர்த்தருடைய வார்த்தையின்படி நாம் நடந்து, மனம்திரும்பும்போது, அவர் நம்மை மீட்டெடுத்து தொடர்ந்து நல்வழியில் நடத்த வல்லவர். நம் கவனத்தை ஈர்ப்பதற்காக கர்த்தர் இந்த எதிர்மறை விளைவுகளை பயன்படுத்துகிறார்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

சொந்த வழியில் நாம் செய்யும் விஷயங்களுக்கு வரும் எதிர்மறையான விளைவுகளை பட்டியலிடுங்கள்.

> சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்குசெய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். (ரோமர் 2: 8 - 9)

________________________________________

________________________________________

________________________________________

**குடும்பம் எனும் நிறுவனம்**

குடும்பம் கர்த்தரால் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பதால், அது அவருடைய வடிவமைப்புக்கு உட்பட்டது. எந்த ஒரு குடும்பமும் சரியாக இயங்க வேண்டுமென்றால், அதற்குள் தலைமைத்துவமும் அதிகாரமும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் நியமித்துள்ளார். மிக முக்கியமான இந்த நிறுவனத்திற்காக கர்த்தர் நிறுவிய கட்டமைப்பை இப்போது பார்ப்போம்.

ஆதியாகம புஸ்தகத்தில் காணப்படும் கூற்றின்படி, மனுஷன் தனிமையாக இருப்பது நல்லதல்லவென்று கர்த்தர் கண்டு, ஒரு துணையை, உதவியாளரை அவனுக்கு கொடுத்தார். பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். (ஆதியாகமம் 2:18). இங்கு கர்த்தர் தந்தருளிய வாக்கை கவனியுங்கள், தலைவரை அல்ல உதவியாளரை என்று கூறியிருக்கின்றார். தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். (ஆதியாகமம் 2:7). அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். (ஆதியாகமம் 2: 21 - 22). கணவன் மனைவி ஒருவருக்கொருவர் தங்கள் வாழ்க்கையில் இருக்கும் பங்கினை கர்த்தர் நிரூபிக்கிறார். அவர்கள் ஒருவருக்கொருவர் சார்ந்து இருப்பார்கள். மனிதனுக்கு தோழமையும் உதவியும் தேவைப்பட்டது. கர்த்தர் பெண்ணின் மூலமாய் அந்த உதவியை வழங்கினார். ஆணிடம் காணப்படும் குறைபாடுகளை பெண் ஈடுசெய்யவும், பெண்ணுடைய குறைபாடுகளை ஈடு செய்ய ஆணுடைய குணாதிசயங்களை கர்த்தர் நிர்ணயித்து வழங்கியுள்ளார். பெண்ணின் ஜீவன் ஆணிடமிருந்து வந்தது, ஆணின் வாழ்வு பெண்ணிடமிருந்து தொடர்கிறது.

**சுய பரிசோதனை 2**

மனைவிகளே, உங்கள் கணவருக்கு உதவியாளராக இருக்க விரும்புகிறீர்களா? ___ ஆம் ___ இல்லை (அவரிடம் இப்பொழுதே கூறுங்கள்)

கணவர்களே, உங்களுடைய மனைவி உங்களுக்கு தேவை என்பதை உங்களிடத்திலும் அவர்களிடத்தில் ஒப்புக்கொள்ள நீங்கள் தயாரா? ___ ஆம் ___ இல்லை (அவரிடம் இப்பொழுதே கூறுங்கள்)

கர்த்தரின் மேலாண்மை முறையின் கீழ், எவ்வாறு இணைந்து செயல்படுவது என்பதை அறிய நீங்கள் திறந்த மனதையுடையவர்களாக இருக்கிறீர்களா? ___ ஆம் ___ இல்லை.

**மோதல் இல்லாத நிலை**

கர்த்தர் ஆணையும், பெண்ணையும் படைத்த அந்நாளில் அவர்களிடையே அதிகார போராட்டம் இல்லை, தவறான புரிதல் இல்லை, பாலினங்களிடையே சண்டை இல்லை. நிர்வாணமாக இருந்தும் அவர்கள் வெட்கப்படவில்லை. அவர்கள் தீமையை மறந்த நிலையிலும், குற்றமற்றவர்களாகவும் இருந்தார்கள். கர்த்தர் படைத்த எல்லாவற்றையும் பராமரிப்பதற்கு மனிதனுக்கு அந்த பொறுப்பினை கொடுத்தார். ஆதியாகமம் 2: 15 கூறுகின்றது "தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்". மேலும் நாம் வாசிக்கின்றோம், "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதியாகமம் 2:24).

கணவன்-மனைவி இடையேயான உறவை ஒரு ஒருங்கிணைந்த உறவாக காண கர்த்தர் நமக்கு அறிவுறுத்துகிறார். இருவரும் உடன்பட்டு, தங்களை ஒன்றாக நினைத்து, வேதாகமம் சொல்வதைப் பின்பற்ற வேண்டும்.

**கர்த்தரின் மேலாண்மை முறையை பாவம் அழிக்கின்றது**

ஆதியாகமம் 3 ஆம் அதிகாரத்துக்கு நாம் நம் கவனத்தை திருப்புவோமேயானால், எதிர்பாராதவிதமாக, குடும்பத்தில் குறுகிய காலமே அமைதி நிலவியதை அறிகிறோம்.

ஆதியாகமம் 3:1 ல், சர்ப்பமானது அறிமுகமோ விளக்கமோ இல்லாமல் நுழைகிறதை காண்கிறோம். மனிதன் அப்பாவியாகவும், சர்ப்பம் நேர்மாறாக புத்திசாலித்தனமான தந்திரமுள்ள ஒன்றாக இருந்தது என்பதை நாம் விளங்கிக்கொள்கிறோம். பெண்ணோடு உரையாடி இறுதியில் ஏமாற்றவே சாத்தான் தன்னை ஒரு பிரகாசமுள்ள சர்பமாக மாறுவேடமிடுகிறான் என்று பார்க்கிறோம்.

இதை வாசிக்கும்பொழுது ஒரு சில காரியங்களை குறிப்பிட்டுக்கொள்ளுங்கள்: சர்ப்பம் பெண்ணை சந்திக்க வந்தபொழுது ஆதாம் எங்கே இருந்தான்? ஏன் இந்த வஞ்சிப்பிலிருந்து மீட்டு சரியான வழியில் நடத்த அவன் முன்வரவில்லை? இவ்விடத்தில் தலைமை குறைபாடும் பரிந்துரை வழங்கா நிலையுமே ஏவாளோடு சேர்ந்து ஆதாமையும் பலிக்குள்ளாக்குகிறது. புருஷர்களே, ஆதாம் தலைமைத்துவத்தை சரியான முறையில் நடப்பிக்காததுபோல நீங்களும் உங்கள் குடும்பங்களில் இந்த நிலைப்பாடுடையவர்களாய் இருக்கின்றீர்களா?

ஆதியாகமம் 3: 1 முதல் 8 ஆம் வசனங்கள் வரையிலும் மனிதனின் வீழ்ச்சி விரிவடைகிறதை காணமுடியும்:

ஏவாளின் மனதில் சாத்தான் சந்தேகத்தை விதைக்கிறான்.

> ...தேவன் சொன்னது உண்டோ என்றது. (வசனம் 1)

பெண்ணிடம் பொய்யுரைத்தான் சாத்தான்

> ...நீங்கள் சாகவே சாவதில்லை (வசனம் 4)

தீய ஆசையினால் ஏவாளை கவர்ந்திழுத்தான்

> நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. (வசனம் 5)

பெண்ணை சாத்தான் வஞ்சித்தான், அதினாலே அவள் பாவம் செய்தாள்

> அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, .... (வசனம் 6)

அவள் அந்தக் கனியை சாப்பிட்டபோது, எதிரியின் பொய்யை நம்பி, வஞ்சிக்கப்பட்டாள்.

பெண்னை பயன்படுத்தி அவளுடைய செல்வாக்கைக்கொண்டு புருஷனையும் பாவம் செய்ய உற்சாகப்படுத்துகிறான்.

> .... தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். (வசனம் 6)

கர்த்தரின் உத்தரவு மீறப்பட்டது. முதல் தம்பதியினருக்கு கர்த்தரோடு இருந்த உறவும் தங்கள் இருவருக்கும் இடையிலான உறவும் சிதைந்துபோனது. அவர்களுடைய நீதியும் அப்பழுக்கற்ற நிலையும் பறிக்கப்பட்டதினால், அவர்களுடைய கிளர்ச்சியினாலே விளைவுகளை சந்திக்க நேர்ந்தது. அவர்களின் வீழ்ச்சியினாலான சாபங்கள் ஆதியாகமம் 3 ஆம் அதிகாரம் 16 முதல் 19 வரையிலான வசனங்கள் பதிவு செயகின்றன

> அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார். (வசனம் 16)

ஆதியாகமம் 3:16 ல் காணப்படும் ஆசை என்ற வார்த்தையும் ஆதியாகமம் 4:7 ல் காணப்படும் ஆசை என்ற வார்த்தையும் ஆதிக்கம் செலுத்தும் ஆசை என்ற பொருளை குறிக்கின்றன. மனிதனுக்கு அவன் மனைவியின் மீது அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது எனினும், அவனிடம் சமர்ப்பிக்க மறுத்து போராடி அவளுடைய கணவனின் தலைமைக்கு பணிய மறுக்கும் ஆசையானது மேற்கொள்ளும் நிலை காணப்படுகிறது.

17 முதல் 19 வசங்களின் படி ஆதாம் கர்த்தரின் வழிமுறைகளுக்கு கீழ்ப்படியாமல் தன் மனைவியை வழிநடத்தவும் பாதுகாக்கவும் தவறி, தன் மனைவிக்கு இசைந்து, தன்னையும் சாபங்களுக்கு உள்ளாக்கினான் என்று பார்க்கிறோம்.

> பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, (வசனம் 17)

சாத்தானின் ஆவிகுரிய தாக்குதலிலிருந்து தன் மனைவியை காக்க தவறியதினாலும், வழிநடத்த தவறினதினாலும், தன மனைவியோடு பாவத்திற்குள்ளானதினாலும், தனது குடும்பத்தை மேற்பார்வையிட கர்த்தார் கொடுத்த பொறுப்பை நிறைவேற்றாமல் புறக்கணித்தான். பாவம் உலகத்திற்குள் நுழைவதற்கான முழு பொறுப்பு ஆதாமின் மீதேயாகும். பாவத்தின் சாபம் தொடர்ந்து பாதிப்பினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. எண்ணிலடங்கா குடும்பங்களில், புருஷர்கள் தங்களுடைய குடும்ப தலைவர் பொறுப்பில் தடுமாறுகிறதையும், மனைவிகள் தங்களின் புருஷர்களின் குடும்ப தலைமைக்கு எதிர்க்கிறதையும் பார்க்கமுடிகின்றது. பொதுவாக, இன்றைய காலகட்டத்தில் ஆண்கள் ஆதாமின் நிலைப்பாட்டை கடைபிடித்து குடும்பங்களில் தங்கள் அதிகாரத்தை செலுத்த முயற்சிப்பதில்லை, அதுபோலவே மனைவிகளும், ஏவாளைப்போல தங்களுக்கு பாதுகாப்பென்பது வேண்டியதில்லை என்றும் அதிகாரம் செலுத்த முயற்சிக்கும் நிலையையும் வெளிப்படுத்துகின்றனர்.

> இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், … (ரோமர் 5:12)

இந்த தலைப்பினைக்குறித்து ஒரு வர்ணனை இப்படியாக கூறுகின்றது:

> பாவம் உலகத்தினுள் பிரவேசிக்கும்முன்னமே மனிதனுக்கு கர்த்தர் தலைமைத்துவத்தை கொடுத்தார். பவுலடியார் இந்த உண்மையை, படைப்பின் முறையமைமையைக்குறித்தும் (மனிதன் முதலாவதாய் படைக்கப்பட்டான்) படைப்பின் நோக்கத்தைக் குறித்தும் (மனுஷியை மனிதனுக்காக படைத்தார்) வாதிக்கின்றனர் (1 கொரிந்தியர் 11: 8-9). ஏவாள் முதலாவதாக பாவம் செய்திருப்பினும், குடும்ப தலைவனாகிய ஆதாமினாலேயே பாவம் உலகத்தில் பிரவேசித்தது. அவன் தலைவனாக இருந்தபடியினாலேயே அந்த வீழ்ச்சியின் பொறுப்பு அவனையே சாரும்.

புருஷர்கள், உங்களுடைய குடும்பங்களை கர்த்தருடைய வார்த்தையின்படி காக்கவும் வழிநடத்தவும் தயாராக இருக்கின்றீகளா? ___ ஆம் ___ இல்லை

மனைவிகளே, உங்களுடைய குடும்பங்களை எப்படி நிர்வகிக்கவேண்டும் என்பதை கர்த்தருடைய ஆலோசனைகளுக்கு செவி சாய்த்து கீழ்படிய விரும்புகின்றீர்களா? ___ ஆம் ___ இல்லை

**கர்த்தரின் திட்டம்**

ஒரு குடும்ப அதிகாரியாக பெண்ணை நியமிக்காமல், அவருடைய கணவனின் உதவியாளராக இருப்பதே கர்த்தரின் நோக்கம் என்பதை நாம் உணரவேண்டும். இறைமகன் இயேசுகிறிஸ்துவின் தலைமையில், ஒரு குடும்பத்தின் தலைவனாகிய கணவன் தன் பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற மனைவியின் உதவியும் ஆதரவும் தேவை. இதுவே கர்த்தரின் அற்புதமான திட்டம். ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள, கர்த்தர் ஏற்படுத்திய இந்த மேலாண்மை முறையை கிறிஸ்தவர்களாகிய நாம் கடைபிடிக்கவேண்டும்.

**பாடம் 2**

**கர்த்தரின் வார்த்தைக்கு நேராய் நோக்குதல்**

இந்த உலகத்தில் காணும் தத்துவங்களின்படியோ அல்லது நாம் நினைத்தபடியோ இல்லாமல் கர்த்தரின் சித்ததையும் நோக்கத்தையும் நாடி அவருக்கு கீழ்படியவேண்டும்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கர்த்தரின் மேலாண்மை முறையை உங்களுடைய வீட்டில் கடைபிடிப்பது அல்லது கடைபிடிக்காதது என்பது எப்படி பொருந்துகின்றது பற்றி கீழ் காணும் வசனத்தின் வாயிலாக விவரிக்கவும்.

> லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயேல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல. (கொலோசெயர் 2:8)

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

வேதகமத்திற்கு உடன்படாத தத்துவங்களைக் கொண்டு கொலோசெயர் ஏமாற்ற படுவார்கள் என்று எண்ணி பவுலடியார் மிகுந்த கரிசனை கொண்டவராய் இருந்தார். கிறிஸ்துவை ஒத்திராத பற்பல உலக தத்துவங்கள், மனிதர்களுடைய மரபுகள் மற்றும் உலகத்தின் கொள்கைகள் திருமணத்தைக்குறித்தும் பெற்றோராயிருப்பது குறித்தும் குடும்பத்தை எப்படி இயக்குவது குறித்தும் விளக்குகின்றன.

**உண்மை கோப்பு**

ஏமாற்று - உங்களை சிறைபிடிக்க - போரில் கொள்ளையிடும் போது கொள்ளையடிக்க அல்லது களவாடி கொண்டுபோக. குறிப்பிட்ட இந்த பகுதியில், தேவ வார்த்தையின்படி கிறிஸ்துவின் வழியாய் விசுவாசிகளுக்கு கிடைக்கும் கர்த்தருடைய பொக்கிஷங் களையும், அவருடைய தலையீடையும் ஆற்றலையும் கொள்ளையாடுவது என்பதாகும்.

ஜாக்கிரதை அல்லது விழித்திருங்கள் என்ற எச்சரிப்பு வார்த்தைகள், நம்மை சுற்றி என்ன நடக்கின்றது என்பதை தெரிந்துகொள்ள உற்சாகப்படுத்துகின்றது. உண்மையையும் பொய்யையும் வேறறிய கர்த்தர் அருளும் விவேகத்தினை உபயோகிக்க நம்மை இந்த சூழல்வாயிலாக எச்சரிக்கின்றது. உண்மையை அறிந்து அதை பற்றிக்கொண்டு பொய்யை எதிர்த்து போராடி வெற்றி பெற விவேகம் நமக்கு வேண்டும்.

பொய்யை நம்பி பல குடும்பங்கள் ஏமாற்றப்படுகின்றன. ஏமாற்றப்படுவது மாத்திர மல்லாமல் அதனால் தேவனுடைய வார்த்தைகளின்படி நடக்கும்போது அடையும் ஆசீர்வாதங்களையும் சமாதானத்தையும் இழந்திருக்கின்றனர். முடிவாக உலக தத்துவங்களும், மனிதர்களுடைய மரபுகளும், உலகத்தின் கொள்கைகளும், கிறிஸ்துவின் வழியாக நாம் நம் குடும்பங்களில் என்ன செய்ய வேண்டும் என்ற நோக்கங்களை செயலிழக்கச் செய்கின்றன.

தேவ வார்த்தை அல்லாத வேறு காரியங்களை நம்பி நான் ஏமாற்றப்பட்டிருக்கின்றேனா என்ற கேள்வியினை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டும். பல நேரங்களில் நம்மை நாமே ஆராய்ந்து அறியாமல் உலகப் போக்கினில் ஓடும் நிலை உண்டு. ஆவிக்குரியவர்களாய் இருக்கிற நாம் எல்லாவற்றையும் குறித்து 1 கொரிந்தியர் 2:15 ன் பிரகாரம் மதிப்பிட்டு, கர்த்தருடைய ஞானத்தின் படி இயங்கி, 1 கொரிந்தியர் 2: 5 முதல் 6:13 வரையிலான வேத வசனங்களின்படி மனிதனுக்கேற்ற ஞானத்தைப் புறக்கணிக்க வேண்டும்.

கர்த்தரின் மேலாண்மை முறைக்குள் கடந்து செல்லும்போது குடும்பங்களிலுள்ள தலைமை அமைப்பைக் குறித்து விழிப்புடன் இருங்கள். உலக செல்வாக்குகளான எல்லா வித மரபுகளும், கலாசார விதிமுறைகளும் இன பண்புகளும் கடந்த கால அனுபவங்களும் கர்த்தருடைய வழிகளுக்கு மாறாக இருந்தால் அவற்றை நாம் மனப்பூர்வமாக கைவிடவேண்டும். இது மிகவும் கடினமே ஏனென்றால் ஒரு சில ஜென்ம பாவங்களையும் தீய பழக்கவழக்கங்களையும் உடைத்தெறிந்து செயல்படும் முறையையும் சிந்திக்கும் முறையையும் முற்றிலுமாக மாற்றவேண்டும். ஆனால் நம் இரக்கமுள்ள தேவனாகிய கர்த்தரை சேவிப்பதினாலே, நாம் மாறுவதற்கான அதிகாரத்தை அளித்து உங்கள் மனதின் உணர்வில் புதுப்பிக்கப்படுவீர்களாக (எபேசியர் 4:23)

**எத்தகு செல்வாக்குகளின் கீழ்?**

நம் சிந்தைகளிலும் நடத்தையிலும் கீழ் காணும் சில தத்துவங்களில் ஆழ்ந்து சென்றுவிடுகிறோமா என்று விழிப்புடன் இருக்க வேண்டும்.

**இனக்கலாச்சாரம்**

"எனது கலாச்சாரத்தில் (இன பின்னணி என்று பொருள்), இவ்வாறாக நாங்கள் செய்கிறோம் என்று சிலர் கூறும் வழக்கமுண்டு. இல்லையென்றால், ஒரு (குறிப்பிட்ட உங்கள் இனத்தை நிரப்பிக் கொள்ளவும் [தமிழனாக]) பெண்களுக்கு குடும்பத்தில் கருத்துக்களைக் கூற உரிமை இல்லை என்றோ, குழந்தைகளை வளர்த்தி பயிற்சியளித்து பெண்ணின் கடமை என்றோ கூறும் வழக்கமுண்டு. ஆனால் நீங்கள் ஒரு கிறிஸ்துவரேயானால் உங்களுடைய கலாசார நம்பிக்கைகளை அகற்றி எரிய வேண்டும், ஏனென்றால் கர்த்தரின் வார்த்தைக்கு நேர்மாறாக இது விளங்குகின்றது. பல நேரங்களில் கலாச்சார நம்பிக்கைகள் தார்மீக தாக்கங்கள் இல்லாத விருப்புத் தேர்வுகளேயாகும். அவைகளை கடைப்பிடிப்பதில் எந்த தவறும் இல்லை. ஆனால், ஒரு கலாச்சார நம்பிக்கை வேதாகமத்திற்கு மாறாக இருக்குமேயானால் அது ஒரு தார்மீக மோதலாய் மாறிவிடும். அது ஒரு பாவச்செயல். திருமணத்தைக் குறித்தும் குடும்பத்தை குறித்தும் காணப்படுகின்ற நம்முடைய நம்பிக்கைகள் தேவ வார்த்தையின்படி இருக்கின்றனவா என்று பரிசோதிக்க வேண்டும்.

**உலகப்பிரகாரமான கலாச்சாரம்**

நம்முடைய கலாச்சாரம் அதாவது இவ்வுலகத்தின் தத்துவங்களும் கொள்கைகளும் நம்மை சுற்றி இருக்கின்றன. உலகப்பிரகாரமான ஞானம் ஊடகங்கள் வாயிலாகவோ (புத்தகங்கள், தொலைகாட்சி, திரைப்படங்கள், பத்திரிக்கைகள், இணையதளம், சமூக ஊடகம்) கல்வி மற்றும் சகாக்களின் அழுத்தத்தினாலோ நமக்குக் கிடைக்கின்றது. மேல்கூறப்பட்ட இவற்றில் ஒன்றாகிலும் நம்மை பாதித்து, திருமணத்தைக்குறித்தும், குடும்பத்தைக்குறித்தும் இவ்வுலகத்தின் பார்வையில் வழிநடத்துகின்றன. கர்த்தரின் வார்த்தையோடு உலக நம்பிக்கைகளையும் தத்துவங்களையும் நாம் ஒப்பிட்டு அறியும் வரை, அவற்றை உண்மை என்று நம் மனதில் பதித்து அவ்வாறே செயல்படவேண்டும் என்று கருதுகின்றோம்.

**மதரீதியான மரபுகள்**

திருமணத்தைக் குறித்தும், பெற்றோராய் இருப்பதைக் குறித்தும் பல மத போதனைகள் மரபுகளாக மாறிவிட்டன. உதாரணமாக, எங்கள் மதக் கலாச்சாரத்தின்படி இப்படியாகவே நாங்கள் செய்துவந்துள்ளோம். ஆனால் நாமோ பெரோயாவிலுள்ள கிறிஸ்துவர்களை போல இருக்க வேண்டும். அவர்கள் பவுலடியாரின் போதனைகளை கேட்டு, "வேதத்தை தினமும் தேடி எல்லாக்காரியத்தையும் ஆராய்ந்து அறிந்துகொண்டார்" (அப்போஸ்தலர் 17:11). யாருடைய அறிவையும் சத்தியம் என்று கண்மூடித்தனமாக நம்ப வேண்டாம். என்னுடைய வார்த்தையையும் புடமிட்டு, வேதாகமத்தை திறந்து யாதொருவர் கூறிய காரியம் உண்மைதானா என்று சரிபார்ப்பது மிக அவசியம்.

**மனிதர்களின் மரபுகள்**

ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கோ, ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கோ பகிரும் நம்பிக்கைகளும் நடத்தைகளும் மரபுகளாகும். திருமண காரியங்களிலும் பெற்றோராய் இருப்பதிலும் இப்பகிர்வு எல்லா காலக்கட்டங்களில் நடக்கின்றது. பல முறை பெற்றோர் வளர்ந்து முதிர்ச்சி பெற்ற தங்கள் பிள்ளைகளுக்கு பெற்றோராய் இருப்பதைப்பற்றி கூறும் தவறான ஆலோசனையானது, "நாங்கள் உன்னை வளத்தியபோது இப்படிசெய்ததினால் நீயும் அதனையே கடைபிடிக்கவேண்டும்". கிறிஸ்துவை பின்பற்றுவதில், கிறிஸ்தவர்களாகிய நாம், கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையானது நம் தரமாக இருக்குமேயானால் நாம் எப்பொழுதும் மற்றெந்தக்காரியத்தைக் காட்டிலும் கர்த்தரையும் அவருடைய வார்த்தைகளையும் கணம்பண்ண வேண்டுவது அவசியம், இது நம்முடைய பெற்றோர்களையும் உட்படுத்தும். எல்லா மரபுகளிலும் தார்மீக தாக்கங்கள் இருப்பதில்லை, அப்படி இருக்கும் பட்சத்தில் அவற்றை நாம் நிராகரிக்க வேண்டுவது கட்டாயமாகும்.

**மரபுகளைக் குறித்து இயேசுவின் முன்னோக்குகள்**

உண்மையை மரபிலிருந்து வேறுபடுத்தும் குழப்பத்தை கையாள்வதென்பது புதிதான ஒன்றல்ல. மரபுகள் ஆதிக்கம் செலுத்தும் மதக் கலாச்சாரத்தில் வளர்க்கப்பட்ட மத குருமார்கள் தங்கள் வாழ்வை மரபுகளின் வழி கட்டமைத்துக்கொண்டவர்கள் சிலரை இயேசு கிறிஸ்து சமாளிக்க வேண்டியதாயிற்று. மனிதர்கள் கற்றுத்தந்த யோசனைகளை விட மறுத்து பிடிவாதமாக காணப்பட்டு, இறுதியில் அவர்கள், தங்களை மீட்க வந்த மீட்பரையே நிராகரித்து விடுகின்றனர்.

> பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது.... நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவ வசனத்தை அவமாக்குகிறீர்கள். இதுபோலவே நீங்கள் மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்கள் என்று சொன்னார். (மாற்கு 7:9, 13)

அவர்களுக்கு வாழ்வதற்கான வழிமுறைகளை (கட்டளைகளை) தேவன் தந்துள்ளார் என்றும், ஆனால் அவர்களோ உண்மையை சார்ந்து இராமல், மனிதன் உருவாக்கிய விதிகளையும், கொள்கைகளையும் கடைப்பிடிப்பதாக அவர்களிடம் இயேசு கூறினார். அப்படிச் செய்வதினால் வேத சாத்தியங்களை விளைவில்லாததாக மாற்றுகின்றனர். இந்தச் சூழலில், பரிசேயர்கள் தங்கள் பணத்தைக் கொண்டு தங்கள் பெற்றோர்களை ஆதரிப்பது இயலாத காரியம் ஏனென்றால் அவர்கள் சம்பாதித்தது தேவனுக்குப் படைக்கப்பட்ட தியாகக் காணிக்கை என்று கூறினார்கள். ஆனால் உண்மையிலேயே, அவர்கள் சம்பாதித்ததை தங்கள் சுய நோக்கங்களுக்காக பணத்தை சேமிக்கின்றனர். தகப்பனையும் தாயையும் கனம்பண்ண

வேண்டுமென்ற தேவனின் ஐந்தாவது கட்டளையை சட்டப்பூர்வமாக தவிர்ப்பதற்காக ஒரு வழியை வடிவமைத்துக்கொண்டனர்.

ஆவிக்குரியவைகளை முனைந்தோ, வேதாகமத்தில் நம்முடைய திருப்பங்களை செலுத்தியோ நம் சுய நோக்கங்களுக்காக பயன்படுத்திக்கொள்கின்றோம். இயேசு அவர்களுக்கு கூறியதாவது, "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதியிருக்கிறபிரகாரம், மாயக்காரராகிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான்." (மாற்கு 7:7). நம்முடைய வார்த்தையோ செயலோ தேவனால் கவனிக்கப்படாமல் போகாது.

**வேதாகம மரபுகள்**

சில மரபுகளை இருகப் பற்றிக்கொள்ள வேண்டும். தெசலோனிக்கேயாவிலுள்ள சபையாருக்கு பவுலடியார் கூறியதகவது, "ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்." (2 தெசலோனிக்கேயர் 2:15). போதனைகள் வாயிலாகவும், கடிதங்கள் மூலமாகவும் அப்போஸ்தலர்கள் தங்களுக்கு கொடுத்த வேதாகம சாத்தியங்களில் தெசலோனிக்கேயா சபையார் உறுதியாக பிடித்துக்கொண்டு அதன்படி நிலைத்து நிற்க பவுலடியார் கூறினார். நாமெல்லோரும் உண்மையை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும்.

**குடும்பத்தை பற்றியதான இயேசுவின் முன்னோக்குகள்**

குடும்ப அங்கத்தினரின் கொள்கைகளை கடைபிடிக்க வேண்டுமா அல்லது கர்த்தருடைய கொள்கைகளை கடைபிடிக்க வேண்டுமா என்பதை இயேசு நமக்கு அறிவுரையாக வழங்கியுள்ளார்.

> யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரனையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். (லூக்கா 14:26)

அவரை நேசிப்பதினால், நம் குடும்பத்தையோ கணவன் மனைவியையோ, வெறுக்க வேண்டும் என்று இயேசு கூறவில்லை. மாறாக கர்த்தருடைய வழியையோ அல்லது பெற்றோரின் வழியையோ, உலகத்தின் வழியையோ, நம் சுய வழியையோ நாம் தேர்வு செய்யும் தருணங்களில் கர்த்தரின் வழியையே தேர்வு செய்ய வேண்டும். மேலுமுள்ள வசனத்தில் காணும் 'வெறு' என்ற வாக்கினை அன்பு இல்லாத என்ற பொருளில் எடுத்துக்கொள்வது நல்லது. கர்த்தரை நேசிக்கும் நம் அன்பும், அவருடைய வார்த்தையும், கர்த்தர் என்ன விரும்புகின்றார் ஆகியவை மகத்தானவை என்பதே அதன் பொருள். நம்முடைய விருப்பங்களோ, நமது குடும்பத்தின் விருப்பங்களோ கர்த்தருக்கு வேண்டியவைகளில் நாம் கீழ்படிவதை விலக்கிவைக்க முடியாது. அதுவே உண்மையான ஒரு சீடனின் அர்பணிப்பாகும்.

இயேசுவின் காலத்தில் அவரை பின்தொடர்ந்த யூதர்கள், யூத மத நம்பிக்கைகளை கைவிட்டவர்கள் என்று விளக்கி வைக்கப்பட்டனர். பெரும்பாலும், அவர்களுடைய குடும்பத்தினர் அவர்களை தூக்கியெறிந்தனர்.

மற்றவர்களுக்கு எப்படி தோன்றினாலும், வேறு எந்த ஒரு உறவும் கிறிஸ்துவின் உண்மையிலிருந்து நம்மை விட்டு பிரிக்கஅனுமதிக்கக்கூடாது. உலகக் கண்ணோட்டங்களுக்கு மாறாக கிறிஸ்தவர்களாகிய நாம் வேதாகம சத்தியங்களை கடைபிடிக்கும்போது சில நேரங்களில் அந்நியமானவர்களாய் கருதப்படலாம்.

> அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள். (1 பேதுரு 4:4)

கர்த்தரின் வேதாகமம் எல்லா காரியங்களிலும் வழிநடத்தி நிர்வகிக்கின்றதினால், நாம் அந்நியர்களாய் காணப்படவேண்டும், ஏனென்றால் நாம் இவ்வுலகத்திற்கு அந்நியரும், வேறுகிரக வாசிகளாயிருக்கிறோம்.

> அக்காலத்திலே இயேசுகிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன் படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். (எப்சியர் 2:12)

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

நீங்கள் யாரென்றும் என்ன செய்வதற்காக உங்களை கர்த்தர் அழைத்திருக்கிறார் என்று விவரிக்கவும்.

> நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1 பேதுரு 2:9)

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

இவை சர்ச்சைக்குரிய சிக்கல்களாக இருப்பினும், மற்ற எல்லா யோசனைகளையும் ஒதுக்கிவிட்டு கர்த்தரின் வேதாகமத்தில் என்ன காண்கின்றோமோ அவற்றை முழுமையாக தழுவ வேண்டும்.

**குடும்பத்தில் வேதாகமத்தின் படியான தலைமை**

> ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன். (1 கொரிந்தியர் 11:3)

> மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள். பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள். (கொலோசேயர் 3:18-21)

______________________ கிறிஸ்துவின் தலையாய் இருக்கின்றார்.

**உங்கள் குழந்தைகளை பயிற்றுவித்தல்**

_____________________ மனிதனின் தலையாய் இருக்கின்றார்.

_____________________ மனுஷியின் தலையாய் இருக்கின்றார்.

பிள்ளைகள் தங்களை _____________ அர்ப்பணிக்க வேண்டும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகள் எல்லா வித விவாதங்களையும் தெளிவாக்குகின்றது, ஆனாலும் சில சிந்தனை வட்டங்களில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. கணவன் தனது மனைவிக்கு தலைவனாய் இருக்கிறானா என்பதின் விவாதத்திலேயே ஆகும். இந்த விவாதத்திற்கு கணவனும் மனைவியும் பதிலளிக்க வேண்டும். கர்த்தருடைய முன்னோக்குதகுலக்கு ஒப்புக்கொண்டு அதன்பிறகு தேவன் அவர்களுக்காக வடிவமைத்த பாத்திரத்தை தழுவி நடக்க வேண்டும். முதலாம் பாடத்தில் நாம் கற்றது போல, மனிதன் செய்த பாவத்தினால் கிடைத்த சாபத்தின் ஒரு பகுதி, இயற்கையாக பெண் ஆழ வேண்டும் என்ற ஆசையை உடையவராக இருப்பதுவேயாகும் (ஆதியாகமம் 3:16). ஏனோதானோவென்று இல்லாமல் மாறாக உபத்திரவம் ஏற்படும் என்பதனையும், கர்த்தருடைய சித்தத்திற்கு நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தப்பகுதியை வேதாகமத்தில் வைத்துள்ளார்.

**உண்மை கோப்பு**

தலை - மற்றவர்கள் சமர்ப்பிக்கும், கீழ்ப்படியும் ஒரு தலைவன் அல்லது முன்னணி

தலை என்ற சொல் [கெப்பாலே - கிரேக்கம்] புதிய ஏற்பாட்டில் பல பொருளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. 1 கொரிந்தியர் 11:3ல் தோன்றுகின்ற உருவாக உணர்வாக ஒரு கிரேக்க அறிஞர் இந்த சொல்லைக் குறித்து விளக்கம் அளிக்கின்றார். கீழே கொடுக்கப் பட்டுள்ள வேதாகம பகுதிகளை நோக்குவீர் களேயானால், தலைமைத்துவக் கொள்கையின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வீர்கள். நம்முடைய நோக்கத்திற்காக இவையனைத்தும் கணவன் மனைவி உறவைக்குறித்து விவரிக்கின்றது.

> உருவகமாக சில நபர்களைக் குறித்து, அதாவது தலைவனிடம், தலைமையிடம் மற்ற எல்லாரும் ஒருவருக்கு அடிபணிவது - உதாரணம், மனைவியுடனான கணவனின் உறவு (1 கொரிந்தியர் 11: 3; எபேசியர் 5: 23) அவர்கள் ஒரே சரீரமாய் இருக்கிறபடியால் (மத்தேயு 19: 6; மாற்கு 10: 8), வழிநடத்திச் செல்ல ஒரு சரீரத்திற்கு ஒரு தலையே இருக்க வேண்டும்; கிறிஸ்து சபையாகிய சரீரத்திற்கு தலையாய் இருப்பது போல, சபையின் அங்கத்தினர் அவருடைய அங்கத்தினர் (1 கொரிந்தியர் 12: 27; எபேசியர் 1: 22; 4: 15; 5: 23; கொலோசெயர் 1: 18; 2:10, 19). கிறிஸ்துவுக்கும் தேவனுக்குமான உறவு (1 கொரிந்தியர் 11: 3). கொலோசெயர் 2: 10 ன் படியும் எப்சியர் 1: 22 ன் படியும் பிதாவாகிய தேவன் கிறிஸ்துவின் நியமிக்கப்பட்ட தலைவர் என்பவைகளை பற்றி விளக்கமாக அறிய முடிகின்றது.

தேவன் கிறிஸ்துவின் தலையாக இருக்கின்றார் என்று 1 கொரிந்தியர் 11: 3 கூறுகின்றது. இயேசு கிறிஸ்து பிதாவின் சித்தத்திற்கு தம்மை முற்றிலுமாய் ஒப்புக்கொடுத்தார் என்று யோவான் சுவிசேஷம் தெளிவாய் விளக்குகின்றது (யோவான் 5: 30). பிதாவின் சித்தத்தை செய்வதே அவருடைய போஜனமாய் இருந்தது (யோவான் 9: 34), காலம் துவங்குவதற்கு முன்பதாக நம்மை இரட்சிக்கத் திட்டமிட்டார். (எப்சியர் 1: 4). இயேசு கிறிஸ்து பிதாவின் தலைமைத்துவத்திற்கு விருப்பத்துடன் தன்னை சிலுவை பரியந்தம்வரை தாழ்த்தி சமர்ப்பித்தார்.

தேவனின் நிலைக்கு ஒத்த ஒரு நிலையிருந்தபோதும், குமாரன், மீட்பர் என்கிற பாத்திரத்திலேயே இயேசு கிறிஸ்து செயல்பட்டார். யார் சிறந்தவர், அதிக தகுதி வாய்ந்தவர் என்ற பிரச்சனை இங்கு எழவில்லை. கிறிஸ்து தமக்கு அருளப்பட்ட பாத்திரத்தை நிறைவேற்றினார். அதே போல, கணவனோ/ தந்தையோ, மனைவியோ/ தாயோ கர்த்தர் அருளிய பாத்திரத்தில் செயல்படவேண்டும். யார் சிறந்தவர், தகுதி வாய்ந்தவர் என்பதல்ல. கர்த்தரின் பார்வையில் நாம் அனைவரும் சமமானவர்கள். கர்த்தர் வடிவமைத்தபடி ஒரு ஆண் புருஷனாகவோ/ தந்தையாகவோ, ஒரு பெண் மனைவியாகவோ/ தாயாகவோ பணியாற்ற வேண்டும்.

கிறிஸ்து சபைக்கு தலைவராயிருக்கின்றார். எபேசியர் 1: 22 - 23 இவ்வாறாக கூறுகின்றது; எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். சபைக்கு தலையாக கிறிஸ்து பணியாற்ற பிதாவாகிய தேவன் அதிகாரம் கொடுத்தார். நம்முடைய பங்கு என்னவென்றும், தலையாகிய கிறிஸ்துவோடு எப்படி தொடர்புபடுத்திக்கொள்வது பற்றியும் சிந்திக்க வேண்டும். கிறிஸ்துவானவர் சபைக்கு தலையாக நியமிக்கப்பட்ட தேவனின் திட்டத்திற்கு நம்மை விருப்பத்துடன் சமர்ப்பிக்கும் அணுகுமுறை உடையவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவிற்கு எல்லா அதிகாரங்களும் கொடுக்கப்பட்டதை நாம் கண்டுகொள்ள வேண்டும். (எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தி) நம்மை நாமே கிறிஸ்துவுக்கு விரும்பி சமர்ப்பிக்க வேண்டும். கீழ்ப்படிதலுள்ள கிறிஸ்தவர்கள் இதனை ஒப்புக்கொண்டு அதன்படி செயல்படுகின்றனர்.

1 கொரிந்தியர் 11: 3ன் படி "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கின்றார்" என்பதை எல்லா கிறிஸ்தவர்களும் புரிந்துகொள்வார்கள். இந்தச் சூழலில், மனிதகுலம், அதாவது கணவன் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து சமர்ப்பிக்க வேண்டும். அவர் தலையாக இருப்பதினால் கிறிஸ்தவர்களாகிய நாம் அவருக்கு நம்மை விருப்பத்துடன் சமர்ப்பிக்கின்றோம். மேலும்:

> ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன். (1 கொரிந்தியர் 11: 3)
>
> கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். (எபேசியர் 5: 23)

வேத வசனங்கள் வாயிலாக குடும்பத்திற்கான வேதாகம தலைமைத்துவத்தைக் குறித்ததான கீழ்காணும் முடிவுகளை எட்டுகிறோம்.

1. கிறிஸ்து சபைக்கு தலையாயிருப்பதுபோல, கணவனும் மனைவிக்கு தலையாய் இருக்கக்கடவன். கணவனே, இதுவே உம் அழைப்பு, பங்கு. இப்படித்தான் நீர் செயல்படவேண்டும்.

2. சபையானது கிறிஸ்துவின் தலைமைத்துவத்திற்கு சமர்பிப்பதுபோல, மனைவியும் புருஷனுடைய தலைமைத்துவத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். மனைவியே, இதுவே உமது அழைப்பு, பங்கு, இப்படித்தான் நீர் செயல்பட வேண்டும்.

3. அவரிடம் தலைமைத்துவம் இருப்பதினாலே சபையை வழிநடத்துவதற்கான பொறுப்பு கிறிஸ்துவினுடையதுபோல, கணவனும் தன்னுடைய தலைமைத்துவப் பொறுப்பை ஏற்று மனைவியையும், குடும்பத்தையும் வழிநடத்த வேண்டும்.

4. கிறிஸ்துவை சபையின் தலையாக நிறுவ பிதாவாகிய கர்த்தரின் திட்டமாய் இருப்பதுபோல, கணவனை மனைவிக்கும் குடும்பத்துக்கும் தலையாக கணவனை நிறுவுவது தேவனின் திட்டமாகும்.

**இது காலாவதியான ஒன்றல்லவா?**

வேதாகமத்தை நமது காலத்துக்கேற்ப புதுப்பிக்க வேண்டும் என்று சிலர் கூறுவதுண்டு. ஆனால் எல்லா நூற்றாண்டுகளுக்கும் எல்லா கலாச்சாரங்களும், நம்முடைய கலாச்சாரம் உட்பட, வேதாகமம் ஒரு உண்மை ஆதாரமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. வேதாகமத்திற்கு காலாவதி இல்லை.

1 பேதுருவில் ஆபிரகாம் சாராளுடைய வாழ்க்கையை நாம் பார்க்கும்பொழுது தலைமைத்துவமானது காலப்போக்கில் மாறக்கூடிய ஒன்றல்ல என்பது விளங்குகின்றது. சுமார் கி. பி. 64ல் பேதுரு இந்தக் கடிதத்தை எழுதுகிறார்: இரண்டாயிர வருஷ காலம் கடந்து இன்றும் அது பொருந்துகின்றது. 1 பேதுரு 3ஆம் அதிகாரம் 1 முதல் 7 வசனங்களில் கணவனும் மனைவியும் என்ற தலைப்பினை விவரிக்கிறார். மனைவிகளை தங்கள் புருஷர்களுக்கு அடிபணிந்து நடக்க உற்சாகப்படுத்துகிறார் (1 பேதுரு 3: 1 - 4). இதனை விளக்கும் வண்ணமாக ஆபிரகாம் சாராளுடைய வாழ்க்கையை உபயோகிக்கின்றனர்.

> இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளா யிருப்பீர்கள். (1 பேதுரு 3: 5 - 6)

பேதுரு இதனை எழுதுவதற்கு 2000 வருஷங்களுக்கு முன்பதாக வாழ்ந்து சென்றவர்கள். இவர்களுடைய காலத்திலிருந்து 2000 வருஷங்களுக்கு முன்பாக வாழ்ந்தவர்கள் ஆதாமும் ஏவாளும். கர்த்தர் கணவனை வழிநடத்தவும், ஏவாள் உதவி செய்யவும் வடிவமைத்தார். 2000 வருடங்களுக்கு பிறகு ஆபிரகாமும் சாராலும் அதே முறையை கடைபிடித்தனர். இரண்டாயிரம் வருடங்களுக்கு பிறகு, பேதுருவும் புதிய ஏற்பாட்டின் விசுவாசிகளுக்கு அதே முறையை கடைபிடிக்கச் சொல்லி வழிநடத்துகிறார். படைப்பின் காலத்தில் திருமணத்தை வடிவமைத்த கர்த்தர், 4000 வருடங்களுக்கு பிறகும் அதின் வடிவமைப்பு மாறவில்லை என்பதனை நாம் அறிகின்றோம். கர்த்தர் இந்த மேலாண்மைமுறையை மாற்றுவதாக இருந்தால், புதிய ஏற்பாட்டில் அதை செய்திருக்கலாம். கர்த்தரின் வார்த்தை முழுமையான ஒன்றாக இருப்பதினால் அதிலிருந்து மாற்றத்தையோ அல்லது சிலவற்றை சேர்ப்பதையோ தவிர்த்து, அதை அப்படியே தழுவிக்கொள்ள வேண்டும்.

> நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம். (உபாகமம் 4: 2)

> நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு; நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம். (உபாகமம் 12: 32)

> அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய். (நீதிமொழிகள் 30: 6)
>
> இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். (வெளிப்படுத்தின விசேஷம் 22: 18)

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

இயேசுவின் வருகைக்கு முன்பதாக பலரும் என்ன செய்துகொண்டிருப்பார்கள் என்று விவரிக்கவும்

ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்கமனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும். (2 தீமோத்தேயு 4: 3 - 4)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

சாத்தானையோ, உலகத்தையோ அல்லது மாம்சத்தையோ பின்பற்ற நினைக்கும் பாவ இயல்போடு பிறந்தவர்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆகவே, கவனமாக இல்லயேயானால், வேதாகமத்திற்கு எதிர்மறையான தத்துவங்களால் நாம் கர்த்தரின் மேலாண்மைமுறையை கறைபடிய செய்யக்கூடும். அவருடைய விலைமதிப்பற்ற வார்த்தைகளுக்கு எதிரான ஒவ்வொரு எண்ணத்தையும் செயலையும் எடைபோட வேண்டும். அறியாமையினாலே எதிர்மறை விளைவுகள் நடவாமல் தடுக்க முடியாது.

**வெற்றிகரமான ஒரு பெண்**

முழு வீடு (Full House) என்ற அமெரிக்க தொலைகாட்சி தொடரில் பீ. ஜே டேனர் எனும் கதாப்பாத்திரத்தில் நடித்தவர் கேண்டீஸ் கேமரான் (இப்பொழுது கேண்டீஸ் கேமரான் புரே) எனும் பெண்மணி. அவரது சகோதரர் கேர்க் கேமரான் வளர்ந்து வரும் வலிகள் (Growing Pains) என்ற தொலைகாட்சி தொடரில் நடித்தவர். கேண்டீஸ் இப்பொழுதும் நடித்துக்கொண்டு அதேசமயம் வெற்றிகரமாக ஒரு மனைவியாகவும் தாயாகவும் இருக்கிறார். வேல் புரே என்னும் ரஷ்ய ஹாக்கி வீரரை தொண்டு ஹாக்கி போட்டி ஒன்றின் பொது கேண்டீஸ் கண்டு அதன் பிறகு திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு குழந்தைகளும் உண்டு. திருமணம் முடிந்து 10 வருட காலத்திற்கு பிறகு திருமணத்தைக் குறித்தும் கர்த்தரின் மேலாண்மை முறையைக் குறித்தும் இவ்வாறாக அவர் கூறுகிறார்.

> எல்லா திருமணங்களைப் போலவே எங்களுடைய திருமணத்திலும் சந்தோசம் நிறைந்த நாட்களும் வளர்ந்து வரும் வலிகளும் காணப்பட்டன. ஆனால் திருமணம் முடிந்து 10 வருடங்கள் கழிந்த பிறகே இந்த இல்லற இணைப்பில் மனைவியாகிய என்னுடைய பங்கு எவ்வளவு தாக்கம் மிகுந்தது என்பதை புரிந்திருக்கிறேன். ஏற்கனவே இருந்த நல்லுறவு மிகச் சிறந்த உறவாக மாறுவதற்கும் என்னுள் கொண்ட சில மாற்றங்களும் காரணங்கள் என்று கண்டுபிடித்ததில் உற்சாகமடைந்தேன். திருமணம் என்பது சமமான கூட்டுறவில், கணவன் மனைவி இருவரும் முக்கிய பங்கு வகித்தாலும் சம

உரிமைகளை கொண்டு வடிவமைக்கப்பட்டவர்கள் என்பதை முதலாவதாக புரிந்து கொண்டேன்.

வேதாகமத்தை எடுத்து 1 கொரிந்தியர் 11: 8 - 9 வசனங்களை வாசித்தேன். புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் வேறுபாடுகள் இல்லை என்பதனை இன்றைய கால சமுதாயம் நம்பவைத்துள்ளது. இது சமுதாயத்தின் தவறு. மேலும் நானும் சமமாக படைக்கப்பட்டிருந்தாலும் வேறுபாடுகளுடன் படைக்கப்பட்டுள்ளோம். எனவே எங்கள் இல்லற வாழ்வில் எங்களுக்கு வேறுபடும் பொறுப்புகள் உள்ளன - என்னுடைய பங்கு ஒரு உதவியாளராகவே இருக்க ஏவாளை படைத்தார்.

என்னை மருவடிவமைப்பதற்கு இது ஒரு முக்கிய பாடமாக அமைந்ததா? நிச்சயமாக.......நம்முடைய வாழ்வில் கர்த்தர் கொடுத்துள்ள அதிகாரத்திற்கு நம்மை ஒப்புவிக்க கற்றுக்கொள்வோமேயானால், நமது மாமஷீக பலத்தை நமது ஆவிக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று கற்றுக்கொள்கின்றோம்.

**சுய பரிசோதனை**

கணவன்/ தகப்பன் அல்லது மனைவி/ தாய் என்ற தங்களுடைய மனநிலையின் வாயிலாக தேவன் உங்களுக்கு என்ன வெளிப்படுத்த விரும்புகிறார் என்று விவரிக்கவும்.

______________________________

______________________________

______________________________

**பாடம் 3**

**ஒரு தந்தையின் திறன்/ ஆற்றல்**

தகப்பன்மார்களே, தேவன் உங்களுக்கு கொடுத்துள்ள வல்லமையை நீங்கள் உண்மையிலேயே புரிந்துகொள்ள வேண்டும். அது தெய்வீகமான ஒன்று. இயற்கைக்கு அப்பாற்பட்டது உங்களுடைய குழந்தைகளின் மேல் அதிகாரம் உள்ளவர்களாய் இருக்கின்றீர்கள். இது முற்றிலும் மற்றவர்களின் செல்வாக்கிற்கு அப்பாற்பட்டது.

தகப்பன் தனது பிள்ளைகளின் வாழ்வில் அதிகாரம் உள்ளவர் என்பதை பல வருடங்களின் ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இவ்வாறான பல ஆய்வுகள் சிக்மண்ட் பிராய்ட், கார்ல் மார்க்ஸ், அடோல்ப் ஹிட்லர் மற்றும் பல கடுமையான குற்றவாளிகளின் வாழ்வில் தங்களின் குடும்ப இயக்கவியலை கூர்ந்து கவனித்துள்ளன. அவர்கள் எல்லாருடைய வாழ்விலும் பொதுவான ஒன்றாய் இருந்தது என்னவென்றால், தந்தை இல்லாத சூழ்நிலை அல்லது அவர்களுக்கும் அவர்களுடைய தந்தைக்கும் இடையில் சமாதானமற்ற உறவேயாகும். மறுபுறம், உலகின் வல்லமை வாய்ந்த, நம்முடைய சமுதாயத்தை ஆசிர்வதித்து மனிதர்களை நாம் பார்ப்போமேயானால், அவர்களுக்கும் அவர்களுடைய தகப்பன்மார்களோடுடனான உறவானது மிக ஆரோக்கியமான நிலையில் இருந்ததை நாம் பார்க்கமுடியும்.

உறுதி, ஊக்குவிப்பு, மதிப்பு ஆகியவற்றை தங்களுடைய தகப்பனிடம் பார்க்கும் உள்ளுணர்வினை குழந்தைகளுடைய இருதயத்தில் தேவன் வைத்துள்ளார். (ஆனால் எதோ சில காரணங்களால், நாம் வளரும்போதும் நம்முடைய குழந்தைகளை வளர்க்கும்போதும், நம் தந்தையர் நம்மீது எத்தகு செல்வாக்கினையுடையவர்களாய் இருந்தார்கள் என்பதை மறந்துவிடுகின்றோம். அதே சமயம் நமது தலைமைத்துவத்தின் குறைபாடாலும், நமது சொற்களும் செயல்களும் எவ்வளவு பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதனை நாம் உணருவதில்லை.

சாலமோன் ராஜாவின் பெரிய வாள் ஒன்றினை எனது அலுவலகத்தில் வாங்கி வைத்துள்ளேன். அது அழகான ஒரு வாள். எண்ணிடம் வந்து ஆலோசனை பெற வருபவர்களிடம், ஆலோசனை வழங்கும் தருணத்தில் சில விளக்கங்களுக்காக அதனை பயன்படுத்துவதுண்டு. "அப்பாவாகிய நீங்கள், ஒவ்வொரு சமயமும் உங்கள் குழந்தைகளிடம் கோபமுற்று சத்தத்தை உயர்த்தி அவர்களிடம் கத்தும்பொழுது, அந்த வாளை எடுத்து உங்கள் குழந்தையின் இதயத்தில் குத்தி துண்டிப்பதுபோல இருக்கின்றது" என்று கூறுவதுண்டு.

உங்கள் குழந்தையிடம் கடுமையாக நீங்கள் நடந்துகொள்ளும்பொழுது, தேவன் உங்களுக்கு தந்தருளியுள்ள செல்வாக்கின் வல்லமையை துஷ்ப்பிரயோகம் செயகின்றீர்கள். நீங்கள் வழி நடத்தவேண்டும் என்பது உங்கள் குழந்தைகளுக்கு தெரியும். குடும்பத்தின் எல்லா பகுதிகளிலும் நீங்கள் வழிநடத்தவேண்டும் என்பதும் குறிப்பாக அவர்களை பயிற்றுவிப்பதில் வழிநடத்த வேண்டும் என்பதையே அவர்கள் விரும்புகிறார்கள். அதனால் தான் நீங்கள் கிறிஸ்துவைப் போல வழிநடத்த வேண்டும்.

**மாற்றுக்குடும்பங்கள்**

மேலாண்மை முறையின் மாற்றத்திற்கு கலப்புக் குடும்பங்கள் தகுதி பெறுவதில்லை. மாற்றான் தந்தையாக நீங்கள் வழிநடத்துபவராகவே இருக்க வேண்டும், மாற்றான் தாயாக வேதாகமம் அறிவுறுத்துகிறது போலவே நீங்கள் உங்கள் கடமையை செய்ய வேண்டும். உங்களில் யாரேனும் ஒருவர் உங்கள் உயிரியல் ரீதியாக இல்லாத வளர்ப்புக்கு குழந்தைகளாகும் பட்சத்தில் குழந்தைகள் உங்களை அப்பா என்றோ அம்மா என்றோ தான் அழைக்க வேண்டும்படி கோரிக்கை விடுக்கக்கூடாது. அவர்கள் உங்களை தங்களுடைய உயிரியல்

தந்தையாகவோ தாயாகவோ தழுவுவதை நீங்கள் விரும்பக்கூடாது. ஆனால் உயிரியல் பெற்றோராய் இருப்பது என்பது பிரச்சனை அல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும். வேதாகமம் கூறுவதை நீங்கள் செய்யப்போகின்றீர்கள் என்பதினால் அனைத்துக் குழந்தைகளையும் (உயிரியல் குழந்தைகள் மற்றும் வளர்ப்பு குழந்தைகள்) பயிற்றுவிப்பதில் பங்கெடுப்பிப்பதுவும் அடங்கும்.

என்னுடைய மதிப்பின்படி, கலப்பு குடும்பங்களில் 80 சதவிகித விவாகரத்துகளில் இந்த பிரச்சனை முக்கிய பங்கு வகிக்கின்றது. விவாகரத்து பெற்ற இந்த தம்பதிகள் தங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளில் வேதாகம கோட்பாடுகள் தங்களுக்கு விளக்கு அளிப்பதாகவும் அவைகளை தழுவ தவறிவிட்டதாகவும் உணர்ந்தனர். உண்மையில் தேவ வார்த்தையானது எல்லா குழந்தைகளும் தேவனுக்குரியவர்கள் என்று அறிவுறுத்துகின்றது. குழந்தைகளை நேசிக்கவும் பயிற்சியளிக்கவும் தேவன் அவர்களை நம்மிடம் கடனாக கொடுத்துள்ளார். ஒரு கலப்புக்குடும்பத்தில் வாழ்கின்ற குழந்தைகளை வளர்ப்பதற்கான தேவனுடைய திட்டம் மாறுவதில்லை.

கலப்புக் குடும்பங்களில் பெற்றோராயிருப்பது பற்றி கூடுதல் பிரச்சனைகளை கருத்தில் கொள்ள பின் இணைப்பு ஒ வை பார்க்கவும்.

**தலைவர் சர்வாதிகாரி அல்ல**

தலைமைத்துவமானது சர்வாதிகாரம் அல்ல. அது ஒரு அன்பான தலைமை. இயேசு கிறிஸ்து அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. நம்முடைய வீடானது வேறெந்த வழியிலாவது இயங்குமேயானால், அது தேவனுக்கு கீழ்ப்படியாமையாய் இருக்கின்றது. மேலும் குறிப்பாக, கணவனோ, தந்தையோ தேவன் அறிவுறுத்துகிறதுபோல வழிநடத்த வேண்டுமேயல்லாமல், கனமான கையைக் கொண்ட சர்வாதிகாரியைப் போல அல்ல. தலைமைத்துவத்தைக்குறித்து தேவனுடைய வார்த்தை இவ்வாறாக விவரிக்கின்றது.

> கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும். (2 தீமோத்தேயு 2: 24 - 26)

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

மேலே காணும் வசனத்தை கருத்தில் கொண்டு, கர்த்தரின் ஊழியரை குறிக்கும் சில முக்கிய பண்புகள் என்ன என்பதையும் அதனால் நடக்கும் நம்பிக்கையூட்டக்கூடிய இறுதி முடிவுகள் என்னவாயிருக்கும்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

நாம் எல்லோரும் கர்த்தருடைய ஊழியர்கள் ஆவோம், எனவே அனைவரிடமும் மென்மையான முறையில் நடக்க வேண்டும் என்பதே அறிவுரை. நம்மை எதிர்பவர்களிடமும் கூட நாம் மென்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை கனிவாக கவனிக்கவும்.

"நான் கூறும் வழியில் தான் நீ நடக்க வேண்டும்" என்று சட்டத்தை தன கையில் எடுத்துக்கொண்டு யாராகிலும் வலியுறுத்தும்போது, தலைமைத்துவத்தை விளங்கிக்கொள்ளாதவர்களாய் இருக்கின்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலை இறுதியில் மக்களை உண்மைக்கும் நல்லிணக்கத்திற்கும் நேராய் நடத்திச் செல்கின்றது. சர்வாதிகாரத்தின் முடிவோ சச்சரவுகளும் பிரிவுமேயாகும்.

சிறந்த தலைவரும், ஆசிரியரும், கிறிஸ்துவின் அப்போஸ்தலரான பவுல் 1 தெசலோனிக்கேயர் 2:7ல் "உங்கள் மத்தியில் மென்மையானவரும், ஒரு தாய் தன் குழந்தைகளை நேசிக்கிறதுபோல நேசிக்கிறவருமாய் இருக்கிறார்" என்று விவரிக்கின்றது. தெசலோனிக்கேயா திருச்சபையின் மீதான அவருடைய நடத்தை அக்கறை கொண்ட ஒரு அன்பான தாயை ஒத்ததாயிருந்தது. தகப்பன்மார் தங்கள் எதிராளிகளோடு இதே மனநிலையை பாவிக்க வேண்டும். உண்மையையும், வேத வசனங்களையும் சமரசம் செய்யாமல், மனைவிகளுடன் சில சூழல்களில் ஒத்துழைத்தும் இணைந்து நடக்கவும் வேண்டும்.

**உண்மை கோப்பு**

சாந்தம்-வெளித்தோற்றத்தில் பொருத்தமான; சமமான, நியாயமான, மிதமான, தாங்கக்கூடிய, மனிதர்களின் சட்டத்தை வலியுறுத்தாமல்; ஒரு வழக்கின் போக்கில் மனிதாபி மானமாகவும் நியாயமாகவும் நோக்கி அக்கறையை வெளிப்படுத்துகின்றது.

சேவை செய்யும் ஊழியராகவே கிறிஸ்து நடந்து கொண்டார். தந்தைகளாக, கணவர்களாக, நாமும் அதே புரிதலையுடையவர்களாக இருக்க வேண்டும். இதனுடைய மையம் நம்முடைய வலுவான அஸ்திபாரத்திலேயே அமைகின்றது. தேவனுடைய பெலத்தில் நாம் சார்ந்து வாழ்வோமானால், கிறிஸ்து எப்படி சேவை செய்தாரோ அதைப் போலவே - எல்லாரிடமும் மென்மையாயும், பொறுமையாயும், தாழ்மையுடனும் வாழ்வதற்கு நமக்கும் திறனை அளிக்கின்றார்.

பணிவில் என்ற சொல்லின் அர்த்தம் "பெருமை, ஆணவம் இல்லாமல்" என்பதே. பல ஆண்கள் சர்வாதிகாரி முறைமையை நாடி கூறுபவைகளாவன: "நான் ஆண், எனவே நான் சொல்வதை செய். நானே வழிநடத்துபவன்". ஆனால் தேவன் இவ்வழியாக நம்மை வழிநடத்தும்படி விரும்பவில்லை, அது மாம்சீகத்தின் வழி. எனினும், கிறிஸ்து வழிநடத்தியது போல, தகப்பனுடைய வழிநடத்துதல் செயலாற்ற ஈடுபாடில்லாத ஒன்றாக இல்லை. தேவன் தனக்கு அருளிய பொறுப்பையோ, பயிற்சியின்போது மனைவியின் மீதான அதிகாரத்தை விட்டுக்கொடுப்பதில்லை. பல ஆண்கள் இன்றைய காலகட்டத்தில் கூறுவது, "நான் வேலை செயகிறேன், நீ பிள்ளைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்து" என்று. இதற்கிடையில், மனைவிகள் நினைத்துக் கூறுவது, "என் கணவர் பிள்ளைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துவது நலமாயிருக்கும். அது நடக்கும் என்பதே எனது விசுவாசமும் பிரார்தனையுமாகும்" என்று.

அகராதியின் வாயிலாக நாம் கண்டறிவது என்னவென்றால், நம்முடைய கலாச்சாரமானது கணவருடைய பங்கினை மாற்றியுள்ளது என்பதனைதான். ஒரு பழைய அகராதியினை நான் அவ்வப்போது பார்ப்பதுண்டு, அது 1939ல் அச்சிட்டு வெளியிடப்பட்ட தோலினால் பிணைக்கப்பட்ட ஒரு பெரிய வெப்ஸ்டர் சர்வதேச அகராதியாகும். அந்த அகராதியில் கணவர் என்ற சொல்லை இவ்வாறாக வரையறுக்கிறது: "தனது குடும்பத்தை நிர்வகிக்கும் அல்லது வழிநடத்தும் ஒருவர், திருமணமான ஒரு நபர், குடும்பத்தில் தலைமைத்துவப் பொறுப்பு வகிக்கும் அல்லது அதிகாரம் உடையவர், விவேகமாக நிர்வகிப்பவர்". அதே அகராதியின் 1996 பாதிப்பானது "ஒரு குடும்பத்தின் தலைவராகிய ஆண்" என்று சுட்டுகின்றது. அவ்வளவே! 2012 பாதிப்பானது: "சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒருமித்த, ஒப்பந்த உறவில் கணவன் மனைவியாக எதிர் பாலினத்தைச் சேர்ந்த ஒருவருடன் ஒன்றிணைந்த நிலை; பாரம்பரிய திருமண உறவு நிலை போன்ற ஒரே பாலினத்தவருடனான ஒன்றிணைந்த நிலை".

மாற்றப்பட்ட முக்கிய நிலைப்பாடுகள் எவை?

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

மேலாண்மை என்ற சொல் 1939 பதிப்பில்: "நடந்த அல்லது இயக்க, வெற்றிகரமாக கையாள அல்லது சமாளிக்க, வழிகாட்ட, நிர்வகிக்க, ஒருவரை அடிபணிய வைத்துக்கொள்ள, கவனமாகவும் நுட்பமான முறையில் வழிநடத்த, கவனத்துடன் கையாள, கணவராயிருக்க" என்றெல்லாம் வரையறுக்கின்றது. இது ஆச்சரியமான ஒன்றாய் தோன்றுகின்றதல்லவா? இன்றைய அகராதியில் இதனை காணமுடியாது.

**எனது மனைவி, எனது உதவியாளர்**

நான் முழுமையடைவதற்கு தேவன் ஒரு மனைவியை கொடுத்திருக்கின்றார். என் மனைவி என்னை முழுமையடையச் செய்கின்றார் என்று தேவன் கூறுவதால், உள்ளீடுகளுக்காக எனது மனைவியை அணுக வேண்டும், குறிப்பாக எனது குழந்தைகளின் உணர்ச்சி நிலையை அறிவதற்காக, ஏனென்றால், பல நேரங்களிலும் நான் அதிக கருத்தில் கொள்ளுவதில்லை. மெய்யாகவே, ஒரு ஆணாக, தேவன் என்னை இப்படி ஜெனிப்பித்தபடியினால், குழந்தைகளின் உணர்ச்சித்த தேவைகளுக்கு நான் செவி சாய்க்காத நிலை காணப்படுகின்றது. பெரும்பாலான ஆண்கள் இத்தகு சூழ்நிலை தங்கள் வாழ்விலும் நிலவுவதை தொடர்புபடுத்த இயலும்.

என் பிள்ளைகள் சிறு வயதினராய் இருந்தபொழுது, நான் வீட்டிற்கு வந்துசேரும்பொழுது, அவர்களுடைய வேலையை செய்யாமலிருந்தால், ஒரு காரியத்தை நான் ஆலோசிப்பதுண்டு: எனது பிள்ளைகள் செய்து முடித்திருக்கவேண்டிய வேலைகளை இப்பொழுதே செய்து முடிக்க வேண்டும் என்பதையே. ஏன் எனது மனைவி வேலையை முடிக்கச் சொல்லி வலியுறுத்தவில்லை என்ற கேள்வி எழும்பும். உடனடியாக அதை நான் ஒழுங்குபடுத்த நினைப்பதுண்டு. நான் எல்லாவற்றையும் எழுதி ஏற்படுத்தப்பட்ட சட்டமாகவே பார்த்தேன், மாற்றிரமல்ல இத்தருணத்திலேயே இவ்வொழுங்கீனத்தை சரி செய்ய வேண்டும் என எண்ணினேன்.

> விதி: புல்வெளியானது வாரந்தோறும் வியாழனன்று மாலை 6 மணிக்கு வெட்டப்படவேண்டும்.
> விளைவு: பிள்ளைகளுக்கு ஒழுக்கம் கற்றுத்தரப்படும், அதன் பிறகு அடுத்த நாள் புல்வெளி வெட்டி சுத்தம் செய்யப்படும்.

இது தர்க்கரீதியாக தெளிவான ஒன்று. பெரும்பாலான ஆண்கள் இவ்வாறான சிந்தையுள்ளவர்களாகவே இருக்கின்றனர், ஏனென்றால் ஆண்கள் தலைவர்களாக வடிவமைக்கப்பட்டுள்ளனர். படிப்படியாக சிறிய சிறிய காரியங்களை எனது மனைவியிடம் விசாரித்து தெளிவு பெறக் கற்றுக்கொண்டேன். இதன் காரணம் சில புதிய தகவல்களை அறியத் துவங்கினேன்: "என் அன்பு கணவரே, இந்த வாரம் தன்னுடைய இறுதித் தேர்வு இருப்பதினால் விடியற்காலை 2 மணி வரை விழித்திருந்து படித்தான். எனவே அவன் செய்ய வேண்டிய வேலைகளை நாளை செய்யச் சொல்லியிருந்தேன்".

எனது குடும்பத்தின் தலைவராக நான் இருந்தாலும், எனது மனைவி எனக்காக தேவன் தந்த பரிசு. என் மனைவி எனது உதவியாளர். நான் ஆணாயிருந்தபடியினால் சூழ்நிலைகளை வேறு கண்ணோட்டத்தில் பார்ப்பது எனது இயல்பு. ஆனால் எனது மனைவி உணர்திறனுடன் மிகுதியாக இருக்கவும் சூழ்நிலைகளை வித்தியாசமாக கருத்தில் கொள்ளவும் உதவினார்.

எனினும், இது ஒரு விதிவிலக்கே அல்லாமல் குழந்தைகளை ஒழுங்குபடுத்த ஏற்படுத்தப்பட்ட திட்டத்தில் விதி மாற்று செய்வதற்கு எனது மனைவிக்கு அதிகாரமில்லை. எனது மனைவி கணவனின் தலைமைக்கு பிள்ளைகளை ஒழுங்குபடுத்த ஏற்படுத்தப்பட்ட திட்டத்திற்கும் கட்டுப்பட வேண்டும், அதே சமயம் கணவர்கள் தங்களை சிறந்த தந்தையர்களாகவும் கிறிஸ்துவின் சீடர்களாக விளங்கவும் மனைவியரின் உணர்திறனையும் வளர்ப்பு இயல்பினையும் உதவியாக பெற அணுகவேண்டும்.

எனது மனைவியின் உள்ளீட்டினால், என் மகனின் மன அழுத்த நிலையையும், எனது மனைவி ஏன் அவ்வாறாக தீர்மானித்தார் என்பதையும் புரிந்துகொள்ள முடிந்தது. இதை காரணமாக கொண்டு ஒவ்வொரு முறையும் பிள்ளைகள் அம்மாவிடம் தங்களுடைய வேலைகளிலிருந்து விளக்கு பெறவோ, விதிக்கப்பட்ட விதிகளை தனது இஷ்டத்திற்க்கோ எனது மனைவி மாற்றுவது என்பதல்ல. நாம் ஒரு குழுவாக சேர்ந்து முயற்சித்து நிறுவியுள்ள எல்லாவற்றையும் சுயமாக கையாளுதலை தடுக்க முட்பட வேண்டும்.

ஆண்கள், தேவன் எவ்வாறாக நமது மனைவியரை ஜெனிப்பித்தார் என்பதை தழுவிட வேண்டும்.: நாம் கவனத்தில் கொள்ளாத பலவற்றை அவர்கள் கருத்தில் கொள்வதினால் அவர்களால் நாம் முழுமையடைகின்றோம். "நான் தான் ஆண், எனவே இவ்வாறாக எல்லா காரியங்களிலும் நடக்க வேண்டும்" என்று நாம் கூறுவோமேயானால் அது முட்டாள்தனமான காரியம். எனினும் சில ஆண்கள் அவ்வாறே செய்வதுண்டு, அது தேவன் கூறுவதை பின்பற்றுகிறதாய் இல்லை. உங்களுடைய உதவியாளராக இருந்து உங்கள் மனைவி உங்களை முழுமையடையச் செயகின்றார்.

சில நேரங்களில் நாங்கள் இருவரும் ஒப்புக்கொள்ளாத நிலையிருந்தபோதும், என் மனைவி என்னிடம் சமர்ப்பிக்க நேரிட்டது. அப்படி செய்ததினால், எனது மனைவி தேவனை விசுவாசித்தார். நான் தவறாக இருந்தபோதும்கூட, தேவன் எங்களை ஆசீர்வதித்தார், ஏனென்றால் நாங்கள் அவர் காண்பித்த வழியில் நடக்க விரும்பியதினாலேயல்லாமல் வேறு காரணங்களினால் அல்ல. இவ்வாறான சூழ்நிலைகள் ஏற்படும்போது, எனது மனைவி எல்லாவற்றையும் சந்தோஷத்தோடு செய்யவில்லை. எனினும், எனது மனைவி உதட்டைப் பிதுக்கவோ, முகம் சுளிக்கவோ, என்னை புறக்கணிக்கவோவில்லை. எனது அதிகாரத்தினால் கர்த்தரை விசுவாசிக்கக் கற்றுக்கொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்றார். ஒரு விதியை மாற்றவோ, ஒழுக்கக் காரியங்களில் மாற்றம் கொண்டுவரவேண்டும் என்று எண்ணினால், என் மனைவி என்னோடு கலந்து பேசுவதற்கு அறிந்திருந்தார். நான் ஒரு முடிவு எடுக்கும்பொழுது எப்பொழுதுமே சரியான முடிவு எடுத்தேன் என்பதை சொல்ல முடியாது. ஆனால், கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக, நம் தவறுகளிலிருந்து நாம் கற்றுக்கொள்கின்றோம்.

பெண்கள் பொதுவாக தங்கள் உணர்ச்சிகளால் உந்தப்படுகிறவர்களானபடியினால் சூழ்நிலைகளுக்கு அவர்களுடைய உணர்வுகளின் அடிப்படையில் எதிர்வினையாற்றலாம். பயிற்சிப் பகுதியில் அவர்களுடைய உணர்ச்சிகளை ஆளுகை செய்ய முற்பட்டால், விதிகளை அமல்படுத்துவதையோ ஒழுக்கத்தை வழங்குவதையோ தொடர்ச்சியாக பலரும் பின்பற்ற தவறிவிடும் நிலை நேரிடும். ஆண்களை விட பெண்கள் அதிக அளவிலான முயற்சியுடன் "போராடி விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை" மேற்கொள்ள வேண்டும் என்பதை ஆண்கள் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையென்றால் ஒழுக்கத்தை நிர்வகிப்பதை பெண்கள் விட்டுவிட வேண்டும். (அதே நேரத்தில், ஊரு சிறிய சதவிகித ஆண்களும் அவர்களுடைய உணர்ச்சிகளாலேயே இயங்குகின்றனர், அவர்கள் திருமணம் செய்யும் பெண்கள் அத்தகு உணர்ச்சிகளால் இயங்குகிறவர்கள் அல்ல - இது தேவனின் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துகின்றது.)

"எனக்கு அருமையானவளே, எனக்கு புரிகின்றது அவர்களுக்கு இது கடினமான நாளாயிருந்ததென்று, ஆனால் ஒழுங்கானது இந்தத் தருணத்தில் நடக்க வேண்டிய ஒன்று" என்று

ஆண்கள் மென்மையாக கூற வேண்டும். பயிற்றுவிப்பதென்பது கூட்டாய் பணிபுரிவதும், பிள்ளைகளிடம் இருவருமே அன்பு காட்டுவதேயாகும்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

தேவன் தான் அன்புகூருகிறவர்களிடம் என்ன செய்வார் என்று பட்டியலிடுங்கள்

> அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். (எபிரேயர் 12: 5-6)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

***செயல் திட்டம்***

கணவர்களே, உங்களுடைய மனைவியின் தாலந்துகளையும், பலங்களையும் பட்டியலிடுங்கள். (உதாரணம்: "எனது மனைவி குழந்தைகளின் உணர்வுகளை நன்கு புரிந்துகொள்ளுகிறார்". அல்லது "குழந்தைகளின் கண்ணோட்டங்களை நான் காண உதவி செய்வது எனது மனைவி"). அதன்பிறகு தேவன் உங்கள் மனைவிக்கு அருளிய தாலந்துகளை அவர்களிடம் தெரியப்படுத்தி, அவர்களுடைய உள்ளீடுகளை நீங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்கள் என்பதை தெளிவுபடுத்தவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

என்னென்ன பிரச்சனைகளை சரி செய்ய வேண்டும் என்பதனை விவாதித்த பிறகு இங்கு பட்டியலிடவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

தேவனுடைய மேலாண்மை முறையை உபயோகித்து ஒரு குழுவாக சேர்ந்து பணிபுரிவதை துவங்க, அவருடைய உதவிக்காக சேர்ந்து ஜெபிக்கவும்.

**எதிர்ப்பு விளைவுகளைக் கொண்டுவருகின்றது**

> எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். (ரோமர் 13: 1-2)

பவுலடியார் இதை எழுதியபோது, பலத்த கைகளினால் யூதர்களை ஆண்டுகொண்டிருந்தது ரோம அரசாங்கம். ரோமர்களுடைய அதிகார பலத்தால் நியாயமற்ற நடைமுறைகளிலிருந்தும் அடக்கமுறைகளிலிருந்தும் விடுபெற யூதர்கள் எண்ணினார்கள். தங்களுடைய விசுவாசத்திற்காக கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பதையும், அதிகாரிகளை எதிர்ப்பது அவர்களின் இயல்பான போக்கு என்று பவுலடியார் உரையாற்றினார். ஆனால் அதிகாரிகள் நம்மை பாவம் செய்ய முற்படுத்தினாலோ சுவிசேஷத்தை அறிவிக்க தடை செய்தாலோ அப்பொழுது எதிர்க்கலாம் (அப்போஸ்தலர் 4: 15 - 20). எனவே பவுலடியார் அதிக பிரயாசம் எடுத்து ரோமருக்கு எழுதிய நிருபத்தில் அதிகாரத்தை தேவனின் முன்னோக்கினை விவரித்துக் கூறுகின்றார்.

**"தேவனனை அல்லாது வேறு எந்த அதிகாரமும் இல்லை" (வசனம் 1).**

இது மிகவும் குறிப்பிடப்பட்ட ஒன்று - அதிகாரம் இல்லை. இந்தச் சூழலில் குடிமக்களுக்கு மேலாக அரசாங்கம் உள்ளதை சுட்டுகின்றது. (தீது 3:1; 1 பேதுரு 2:13 - 17), ஆனால் சபைக்கும் போதகர்களும் விசுவாசிகளின் மீதுள்ள அதிகாரத்தைக் குறித்தும் தேவன் கூறுகின்றார் (எபேசியர் 13: 7, 17)., மனைவியின் மீது கணவனுக்காக தலைமைத்துவம் (1 கொரிந்தியர் 11:3; 8-9; எபேசியர் 5:22), பிள்ளைகள் மீது பெற்றோரின் அதிகாரம் (யாத்திராகமம் 20: 12; நீதிமொழிகள் 6: 20 - 22; 23: 22; லூக்கா 2: 51; எபேசியர் 6: 1) வேலையாட்களின் மீது எஜமானனின் நிலை (எப்சியர் 6: 5 - 8, கொலோசெயர் 3: 22; 1 பேதுரு 2: 18).

**"அதிகாரிகளாய் இருப்பவர்கள் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள்" (வசனம் 1).**

தேவன் எல்லாவற்றையும் வழிநடத்தி அதிகாரத்தில் இருப்பவர்களைக் கட்டுப்படுத்துகிறார். \அரசாங்க அலுவலகங்களில் பணிபுரியும் நல்ல/ தீய அலுவலர்கள், நல்ல/ தீய போதகர்கள், நல்ல/ தீய ஊழியர்கள் என்பவர்களேயாகும். நாம் இதை புரிந்துகொள்ள இயலாதே போகும், ஆனால் இப்படியாகவே வேத வார்த்தை கூறுகின்றது. அப்போஸ்தலர் 13:48ல் நியமிக்கப்பட்ட என்ற வார்த்தையானது எப்படி பயன்பட்டுள்ளதை நாம் பார்ப்போம்: "புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்தியஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்." தியாகிகள் வாழ்ந்தார்கள்/ வாழ்கிறார்கள் ஏன் என்று நினைக்கிறீர்கள்? அரசாங்கத்தினால் (வேறு அதிகாரிகளாலும்) கிறிஸ்தவர்கள் கொல்லப்படுவது ஏனென்றால், கொலை மிரட்டல் விடப்பட்டும் தங்கள் விசுவாசத்தை மறுப்பதில்லை. தேவன் எல்லா அதிகாரிகளையும் நியமித்த கொள்கையின்படி தியாகிகள் வாஸ்த்து மறுத்தார்கள்".

**"அதிகாரத்தை எதிர்க்கிற யாராக இருந்தாலும், தேவனுடைய கட்டளையை எதிர்க்கின்றனர்" (வசனம் 2).**

அதிகாரத்தை எதிர்ப்பதென்பது கர்த்தருக்கு நேராக கலகம் செய்வதே. இந்த ஒழுங்கை எதிர்க்கிறதினாலே உங்கள் மீதே தெய்வீக தீர்ப்புக்குளாகிறீர்கள் (வசனம் 2). இந்த ஆவிக்குரிய சட்டங்களை தேவனே பேசி முறைப்படுத்தினார். நாம் முன்பு விமர்சித்த புவி ஈர்ப்பை போன்ற இயற்பியல் சட்டங்களை போலாகும். புவி ஈர்ப்பு ஒரு நல்ல விஷயம்தான்; காரணம் பல நம்மை இப்பூமியில் நிலைத்து நிற்க உதவுகின்றது. தேவனுடைய உண்மைகளும் அப்படித்தான்,

அவருடைய சித்தத்திற்கு நிலைத்து நிற்க்க செய்து கீழ்ப்படிதலினாலே அவருடைய ஆசீர்வாதங்களை நாம் பெற உதவுகின்றது.

**சாக்குப் போக்குகள்:**

புருஷர்கள், தேவன் உங்களை வழிநடத்த நியமித்ததினால், நீங்கள் அதிகாரத்தில் உள்ளவர்கள். தேவன் உங்களை இந்த நிலைக்கு அழைத்துள்ளார். 'நான் வழிநடத்த வேண்டும் என்பது எனக்குத் தெரியும், ஆனால்....." என்று கூறுவீர்களேயானால், தேவன் உங்களுக்கு கட்டளையிட்டதை நீங்கள் எதிர்த்து, ஆவிக்குரிய சட்டத்தை உடைத்து, உங்கள் மீது பல வடிவங்களில் நியாயத்தீர்ப்பு வரலாம்: கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ வல்லமையற்றுப்போன நிலை; உங்களுடைய கீழ்ப்படியாமையினாலே தேவனை புரிந்துகொள்கின்றதில் பிரச்சனை, கர்த்தரோடேயுள்ள நெருக்கக் குறைவினால் ஏற்படும் அமைதியின்மை, மகிழ்ச்சியின்மை, நம்பிக்கையின்மை, திருப்தியின்மை; இன்னும் பல.

வழிநடத்த தவறும் அநேக சாக்குப்போக்குகளை நான் கேட்டுள்ளேன்: "எனது மனைவி என்னை விட சிறந்த தலைவர்". "என் மனைவி நன்கு கற்றறிந்தவர்". "என் மனைவி பிள்ளைகளிடம் திறம்பட நடப்பவர்". "எனது மனைவிக்கு பொறுமை அதிகம்". "நான் ஒரு சிறந்த தலைவர் அல்ல". "எனக்கு எப்படியென்று தெரியவில்லை". ஆனால் உங்கள் வேலை ஸ்தலத்தில் வழிநடத்துவதை பார்க்கிலும், உங்கள் குடும்பத்தை வழிநடத்துவதில் நீங்கள் மிகச்சிறந்தவர்கள் என்று என்னால் உறுதியாக கூறமுடியும்.

ஒரு மனைவியானவர் இவ்வாறாக கூற முடியும், "தேவன் என் கணவருடைய அதிகாரத்திற்கு கட்டுப்பட கூறியிருக்கின்றார் என்று எனக்குத் தெரியும், ஆனால்....". ஒருவேளை இந்தப்பெண்ணுக்கு இதன் விளைவாக உடனடியாக உடல் வேதனை இல்லாமலிருக்கலாம், ஆனால் இறுதியில் அந்தப் பெண் நிச்சயமாக வேதனை அனுபவிக்கநேரிடும். மேலே கூறப்பட்டுள்ளது போன்றே ஆணுக்கு பாதிப்பு எவ்வளவோ அதுபோலவே பெண்களுக்கும் விளைவுகள் பெண்களுக்கும் விளைவுகள் வேதனை தரக்கூடியவையாயிருக்கும். ஒளியிலே நடக்க நாம் தேர்தெடுப்போமேயானால், நமக்கு சமாதானமும், சந்தோஷமும், நிறைவுமுண்டு. மாறாக ஒளியில் நடக்க தவறுவோமேயானால் தேவன் அருளிய வரங்கள் மாங்கத்துவங்கும். மன அழுத்தமும், நிறைவேற்றம் இல்லாத நிலையம், மகிழ்ச்சியற்ற நிலையம் (பல சாத்தியமாந உடல் விதிகளுடன்) விரைவில் பின் தொடரும்.

**ஒழுங்கற்ற நிலை**

ஒரு தம்பதிக்கு ஆலோசனை வழங்கும் சேவையை துவங்கும் தருணத்தில், மனைவியான அந்தப் பெண்ணின் முதுகில் சுமார் 300 கிலோ இடையை சுமப்பது போல காணப்பட்டார். அந்தப் பெண் கூனி, மனசோர்வுற்ற நிலையில் காணப்பட்டார். அவர் அமர்ந்து தன மனக்குமுறல்களை கொட்டித்தீர்த்தார்: தன்னுடைய வீடு குழப்பம்நிறைந்த ஒன்றாகவும், தானும் தன்னுடைய 18 வயது மகளும் ஒருவருக்கொருவர் பேசாத நிலையையும்; தானும் தனது 15 வயது மகனுக்குமிடையில் எப்பொழுதும் வாக்குவாதம்; தான் மனசோர்வுற்று, சிகிச்சை பெற்று ஒரு மனநல மருத்துவரை தொடர்புகொள்ளும் அவலம். தொடர்ந்து இந்தச் சூழ்நிலையில் உங்களுடைய கவலைகள் அனைத்தையும் ஏற்கிறேன் என்றார், அவர் இத்தகு சூழ்நிலையை எப்படி கையாள்கிறார் என்ற கேள்வியை எழுப்பினேன்.

"என் மனைவி என்னிடம் உதவிக்கு அணுகும்பொழுது, நாம் பிள்ளைகளிடம் சென்று அவர்களிடம் 'போதும் நிறுத்துங்கள் என்று கடிந்துகொள்வதுண்டு'" என்று விவரித்தார். தன்னுடைய கணவனுடைய அணுகுமுறை சரியானதல்ல என்று அந்த தாய் கூறியபடி, பிள்ளைகளை ஒழுங்குபடுத்தும் தனது கணவனின் பணியை தான் ஏன் மேற்கொள்கிறார் என்பதை விவரித்தார்: "என்னுடைய கல்வி பின்னணியானது உளவியல் துறையாகும். இந்தப் பகுதியில் நான் பயிற்சிப்பெற்றவள் என்றும், தன் பிள்ளைகளை தன் கணவரைவிட நன்கு

சமாளிக்கும் திறமையுடையவர் என்றும் அவர்களோடு தானே தொடர்புகொண்டு பிரச்சனைகளை பேசித் தீர்ப்பேன்" என்று கூறினார்.

சிருஷ்டிப்பின் காலம் முதலே, தேவன் மனிதனுக்கு நியமிக்கப்பட்டதாவது: தேவன், ஆண், பெண், பிள்ளைகள். இந்த நிலைப்பாட்டில் தாழ்வு என்பது இல்லை. எளிமையாக கூறவேண்டுமேயானால் கணவரே - மனைவியல்ல - குடும்பத்தின் தலைவர், இதில் குழந்தைகளுக்கு பயிற்சியளிப்பதும் அடங்கும். இதை இப்படி அணுகுங்கள்: தந்தையானவர் தலைவர். தாயானவள் துணைத் தலைவர். இந்தப்படி நினைப்பதற்க்கோ, கேட்பதற்கோ புண்படுத்தக்கூடிய விஷயமாக உள்ளதா? அப்படியேயானால், அதை கர்த்தரிடம் எடுத்துச் செல்லுங்கள். தேவனிடம் இந்தப் பகுதியில் அவரையே விசுவாசிக்கும்படி உதவியருளும்படி கேட்க வேண்டும். புருஷர்கள் தங்கள் மனைவிகளை பாதுகாத்து குடும்பத்தை வழிநடத்த வேண்டும்.

பெற்றோர் தமக்கிடையில் கருத்து வேறுபாடு நிலவுமேயானால் குடும்பத்திற்குள் வழிநடத்தும் பொறுப்பை தந்தையர் ஏற்று நடத்திச் செல்ல வேண்டும். "கர்த்தரின் அறிவுரை வாயிலாகவும், பயிற்சியின் வாயிலாகவும் வளர்க்க வேண்டியது" நீங்கள் தான் (எபேசியர் 6:4). உங்கள் குழந்தைகளை பயிற்றுவிப்பதற்கு தேவையான விதிகளை அமைக்கவும், ஒழுக்கத்தைப் புகட்டவும் நீங்கள் கற்றுக்கொள்ள முடியும், ஆனால் உங்களால் இயன்ற அளவு உங்கள் மனைவியுடன் அமைதி காத்து ஒத்துழைக்கும் உந்துதல் உள்ளவராய் இருக்க வேண்டும். (ரோமர் 12:18). உங்கள் பிள்ளைகளைக் குறித்ததான ஒரு குறிப்பிட்ட பிரச்சனையில் நீங்களும் உங்கள் மனைவியும் கருத்து வேறுபாடுடையவர்களாய் இருக்கும் பட்சத்திலோ?

> மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்.
> (கொலோசெயர் 3: 18)

பெண்களே உங்கள் கணவருடைய கோரிக்கை வேத வசனங்களுக்கு எதிர்மறையாக காணப்படும் பட்சத்தில் மாத்திரமேயன்றி, மற்றெல்லா சூழ்நிலைகளிலும் அவருடைய தலைமைத்துவத்திற்கு கட்டுப்படவேண்டும். உங்களுடைய கணவர் இரட்சிக்கப்படுகிறவராய் இருந்து, "நம்முடைய பிள்ளைகளிடம் தேவனைக் குறித்து பேச வேண்டாம்" என்று சொல்வாரேயானால், அது வேத வசனங்களுக்கு மாறான கற்பிதமாயிருக்கிறது.
(உபாகமம் 6: 7)

உதாரணத்திற்கு, உங்களுடைய கணவர் இரட்சிக்கப்படாமல் திருச்சபைக்கு செல்லாதவராக இருப்பதினால், உங்கள் 15 வயது மகனும் திருச்சபைக்கு செல்வதை விரும்பவில்லை என்று வைத்துக்கொள்வோம். தகப்பன் தனது மகன் திருச்சபைக்கு போக வேண்டிய அவசியமில்லை என்று கூறுகின்றார் என வைத்துக்கொள்வோம். நீங்கள் உங்களுடைய மகனுக்கு ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுப்பீர்களா அல்லாது உங்களுடைய வழியில் நடவாமல் தனது தகப்பன் வழியை கடைபிடிக்க முற்படுவதினால் அவனிடம் கோபம்கொள்வீர்களா? மேற்கூறப்பட்ட யாதொன்றும் நல்ல முயற்சி அல்ல. கர்த்தர் மீது விசுவாசம் வைத்து, உங்களுடைய கணவனுடைய அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு, ஜெபத்தில் தரித்திருங்கள். இது கடினம் தான். ஒன்று தான், ஆனால் தேவனுடைய வார்த்தை மிக தெளிவாய் கூறுகின்றது. விதிவிலக்கு ஏதும் இல்லை. கணவனுடைய அதிகாரத்தை அசட்டையாக எண்ணும்பொழுது அதற்க்கு தக்க விபரீதங்களுமுண்டு. ஒரு உண்மை கிறிஸ்தவராக, தேவன் "எல்லாவற்றிலும் தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக நடப்பிக்கிறவர்" என்பதை உணரவேண்டும்.
(எபேசியர் 1: 11).

**கலப்புக்குடும்பங்களின் பிரச்சனைகள்**

ஒரு கலப்புக்குடும்பத்தில் நீங்கள் மாற்றாந்தந்தையாய் இருந்தால், உங்கள் மனைவியினுடைய உயிரியல் குழந்தையிடம் வீட்டின் ஒழுங்கு விதிகளை நீங்கள் நிறுவி அதனை உங்கள் மனைவி மறுக்கும் பட்சத்தில் என்ன செய்ய முற்படுவீர்கள்? அவ்வாறான சூழ்நிலைகளில் உங்களது மனைவி உங்களிடம், "இவ்விதிகளில் எனக்கு இஷ்டமில்லை" என்றோ, "எனது மகன் இதனை செய்வது எனக்கு பிடிக்கவில்லை" என்றோ சொல்வாரேயாகில் தேவனுடைய கரங்களில் உள்ளவைகளில் குறுக்கிடுபவராக விளங்குகின்றார். இதனை நானே, எனது சுய பெலத்தோடு செய்து கொள்வேன் என்று சொல்லக்கூடும். ஒரு குறிப்பிட்ட ஒழுக்க விதியோடு உங்களுடைய மனைவிக்கு உடன்பாடில்லாத பட்சத்தில் அவர் கர்த்தரை விசுவாசித்து அந்த குறிப்பிட்ட ஒழுக்க விதியை முறைப்படுத்த வேண்டும். நிச்சயமாக, இப்பிரச்சனைகளை சரி செய்வதற்கு பொறுமையும் நேரமும் கட்டாயம் அவசியம்.

தாய்மார்களே, நீங்கள் மாற்றாந்தாயாய் இருக்கும் பட்சத்தில் உங்களுடைய உயிரியல் அல்லாத குழந்தை உங்களுடைய அதிகாரத்தை எதிர்க்கிற நிலை ஏற்படுமேயானால், அவர்களிடம் அவர்களுடைய தகப்பன் விரும்பும் காரியங்களைத் தான் வலியுறுத்துகிறார்கள் என்று கூறவும். நீங்கள் எண்ணெடுத்த தாயில்லை என்று கூறுவார்களேயானால், நீங்கள் இவ்வாறாக பதிலளிக்கலாம்: "அது சரிதான், நான் உங்களுடைய தாயென்று கூறவில்லை, ஆனால் நான் உங்களுடைய தகப்பனுக்கு திருமணமானவள், தேவனுடைய வார்த்தையின்படி அதிகார அமைப்பை நான் தழுவியுள்ளேன். தேவனுடைய பிவார்த்தை தகப்பன் வழிநடத்துபவர் என்று கூறுகின்றது. நான் அவருக்கு ஆதரவளிக்கின்றவள் மாத்திரமே. உங்களுக்கு இவ்வொழுக்கக் கூறுகளோ விதிகளோ ஏற்புடையதாக இல்லையென்றால், அவரிடம் எடுத்துச் சென்று முறையிடுங்கள். இதற்கிடையில், நீங்கள் இவ்வொழுக்கக்கூறுகளையும் விதிகளையும் ஏற்றுக்கொள்ளவே வேண்டும்" என்பதை வலியுறுத்தவேண்டும்.

கூட்டு குடும்பங்களில் பல விவாகரத்தில் முடிவுருவத்தின் பல கண்களில் மிக முக்கியமான ஒன்று பிள்ளைகளை பயிற்றுவிப்பதில் வரும் கருத்து வேறுபாடுகளேயாகும். "நான் எனது குழந்தைகளை ஒழுங்குபடுத்திக்கொள்கின்றேன், நீ உன்னுடைய குழந்தைகளை ஒழுங்குபடுத்து" என்கின்ற அணுகுமுறையானது, வேதாகமத்திற்கு முறையான மேலாண்மை முறைக்கு வித்திடுகின்றது. வேதாகமத்தில் அத்தகு சிந்தைகளுக்கு இடமில்லை. பயிற்சி செயல்முறையை நீங்கள் இருவருமாக வடிவமைக்கும்பொழுது, உங்களுடைய குடும்பத்திலுள்ள எல்லா குழந்தைகளுக்கும் உரித்தானது. குழந்தைகள் அனைவரும் நமக்குக் கர்த்தர் அருளும் வரன்கள் (சங்கீதம் 127: 3).

**பாடம் 4**

## வீட்டினுள் / குடும்பத்தினுள் சீர்குலைவு

பல குடும்பங்களில் தம்பதியரில் கணவனோ/ மனைவியோ விசுவாசியாத நிலையோ தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமையோ நிலவுகின்றதுமல்லாமல் சுமுகமான நிலை இல்லாமை காணப்படுகின்றது. தேவன் ஆசீர்வாதங்களை வாக்கருளியிருந்தாலும், அது சுலபமான ஒரு பாதையல்ல. சுயத்தை மறுக்கிரதைக் குறித்தும், சிலுவையைக்குறித்தும், சுயத்தை வெறுத்து இயேசுவை பின்பற்றுவதைக்குறித்தும் எடுத்துரைக்கின்ற வசனங்களை தழுவுவதை நாம் சில நேரங்களில் விட்டுவிடுகின்றோம். (மத்தேயு 16: 24-25).

### உங்கள் கணவரை சந்தேகப்படுவது

தேவ வார்த்தையின் வாயிலாக ஒரு மனைவி செய்யக்கூடிய மிக வல்லமை வாய்ந்த காரியம் விமர்சனங்களினாலோ உறுதியளிக்காத வார்த்தைகளைக்கொண்டோ அல்லாமல் அவரது கணவரை தனது நடத்தையின் வாயிலாக ஊக்குவிப்பதேயாகும்.

> அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாத வர்களாயிருந்தால், பய பக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப் படுத்திக் கொள்ளப்படுவார்கள். (1 பேதுரு 3: 1 - 2)

**உண்மை கோப்பு**

கீழ்படிதல் - ஹுபோட்டாசோ *Hupotasso* (கிரேக்கம்). "ஒரு தன்னார்வ மனப் பான்மை. விட்டுக்கொடுப்பது, ஒத்துழைப்பது, பொறுப்பை ஏற்றுக் கொள்வது மற்றும் சுமையை சுமப்பது."13

"இந்த வார்த்தையின் புதிய ஏற்பாட்டு பயன்பாடு, அதாவது 'சமர்பனம்,' 'உட்பட்டு இருத்தல்,' அல்லது பொதுவாக 'கீழ் படிந்திருத்தல்'. (1 பேதுரு 2:18; 3:5; 5:5; லூக் 2:51; 10:17, 20; ரோம 8:7; 10:3; 13:1, 5; 1 கொரி 14:32, 34; 15:27; 16:16; எபே 1:22; 5:21, 24; பிலி 3:21; தீத்து 2:9; 3:1; எபி. 2:5, 8; 12:9; யாக் 4:7)."14

பிரச்சனையுள்ள ஒரு மனைவியோடு இந்த வசனம் பேசுகின்றது. தனது கணவர் தேவனுடைய அறிவுறுத்தல்களுக்கு கீழ்ப் படிக்கிறதில்லை. அவர் அறியாமையிலோ, கலகக்காரராகவோ, அவ்விசுவாசியாகவோ இருக்கலாம். தன்னை ஒரு கிறிஸ்தவராக அறிவித்துக் கொண்டு தனது நடக்கையில் நேர்மாறாக காணப்படலாம். கீழ்ப் படியாமையைக்குறித்து பிரத்யேககங்கள் ஒன்றும் இல்லை, ஆனால் மனைவிக்குரிய அறிவுறுத்தல் மிக துல்லியமாக கொடுக்கப்பட்டுள்ளது: தொடர்ந்து அடிபணிந்துபோகிறவராய் இருங்கள்.

கணவன்மார்கள் குழந்தைகளை ஒழுங்குபடுத்துதலிலோ, குழந்தைகளிடம் அவர்கள் பேசும் வரைமுறைகளிலோ முட்டாள்தனமான தேர்வுகள் செய்தாலோ, தவறான முடிவுகள் எடுத்தாலோ மனைவியராகிய உங்களுக்கு அவற்றில் கருத்துவேறுபாடுண்டாகும் பட்சத்தில் தேவனுடய வார்த்தைக்கும் மாறாகவும் (வசனம் 1 ன் படி வேத வசனங்களுக்கு சிலர் கீழ்ப்படியாத சூழலில்) தன்னுடைய முன்னோக்குதான் சரி என்று வாக்குவாதத்தினாலும் விவாதத்தினாலும் வெற்றி பெற முற்படுவது பெண்களிடம் காணப்படும் எதார்த்தமான ஓர் போக்கே. ஒரு தாய் தன் குழந்தைகளை நேசிப்பதினாலும் அவர்களை பாதுகாக்கும் வாஞ்சை இருப்பதுவும் இயல்பே. ஆனால் வேதாகம கணவரிடம் "ஒரு மறுவார்த்தை பேசாமல்" சூழல்களை வெற்றிபெற வலியுறுத்துகின்றது. (வசனம் 1). "எனதருமை கணவரே, இந்த குறிப்பிட்ட சூழ்நிலையை வேறு விதமாக பார்ப்பதும் அணுகுவதும் நல்லதென்பது எனது கருத்து, எனினும் உங்கள் தலைமைத்துவத்தையும் முடிவையும் நான் ஏற்றுக்கொண்டு அவ்வழியில் நடப்பேன் என்று உறுதியளித்து அந்த சூழ்நிலையை முற்றிலுமாய்

விவாதத்தோடும் கசப்பான கோபத்தோடு கையாள்வதும் தற்காப்பு அச்சுறுத்தல்களைக் கொண்டு உறுதிப்படுத்தப்படாத நடத்தைகளாகிய கிண்டலுடனும், விமர்சனத்தோடும், வாயை பிதுக்கிக்கொண்டு, நிராகரிப்போடு கையாள்வது வித்தியாசமான நடக்கையாகும். ஒரு கிறிஸ்தவ மனைவி தனது கணவர் ஒரு தேவனுக்கேற்ற தலைவராக இருக்க அல்லது அவர் ஒரு அவிசுவாசியாய் இருக்கும் பட்சத்தில் அவர் இரட்சிக்கப்பட அனுதினமும் ஜெபிக்கவேண்டும்.

**தேவனின் திட்டம்**

கர்த்தருடைய கூட்டுறவில் கணவனமார்களை வழிநடத்தி வெற்றிகாணுவது சாத்தியமானதென்பதை இந்த வசனம் கவனம் வலியுறுத்துகின்றது ("ஒரு வேலை வெற்றிபெற்றார்கள் என்றும்கூட வைத்துக்கொள்ளலாம்). மனைவியரே, இது தேவனின் திட்டம் என்று உணர்கின்றீர்களா? 1 பேதுரு 3ம் அதிகாரம் 1 ல் இருந்து 6 வசனங்களில், தேவன் எவ்வாறு உறவுகளை செயல்பட வடிவமைத்துள்ளார் என்பதை மனைவியருக்கு கூறுகின்றார். உங்களது புருஷர்களை அவருக்கு நேராக உங்களை கொண்டு வழிநடத்த தேவன் இதனை ஒரு வாக்குறுதியாக அல்லாமல் அவர் ஏற்படுத்திய பாதையாகும். அவருடைய திட்டத்தை பின்பற்ற கால வரையறை ஒன்றும் இல்லை. தேவன் உங்களுக்கென வைத்திருக்கும் சித்தத்திற்கு விசுவாசமுள்ளவர்களாய் இருப்போமேயானால், உங்களுடைய கணவனுக்கு நீங்கள் ஊழியம் செய்து கீழ்ப்படிதலினாலே தேவனை மகிமைப்படுத்துகிண்றீர்கள். இந்த செயல்முறையில் உங்களையும் உங்கள் கணவரையும் தேவனாலே மாற்றமுடியும்.

தேவன், பெண்ணை ஒரு உதவியாளராக இருக்கவே சிருஷ்டித்தார், அதனை - கவனத்தின் வாயிலாகவும், சிந்திப்பதினாலும், மனைவியின் நடத்தையை பார்ப்பதினாலேயும் - மனைவி தனக்கு உறுதுணையான ஆதரவாக இருக்கின்றாரா என்பதை கணவன் அறிந்துகொள்ளமுடியும். ஒரு கணவன் மீது அதிக செல்வாக்குடையவராக மனைவி காணப்படுகின்றார், அந்த செல்வாக்கு அவரது கணவரை தேவனுக்கு நேராக வழிநடத்தவோ தேவனை விட்டு பின்வாங்கவோ வைக்க முடியும். ஒரு எழுத்தாளர் இவ்வாறாக கூறுகின்றார்: ஒரு மனைவி "தன்னுடைய நடக்கையினாலும் கோபத்தாலும் தன்னுடைய பக்தியின் அழகைக் கெடுத்து, கணவரின் மனதில் மகிழ்ச்சியான தாக்கத்தை தடுக்கின்றார்".

**உண்மை கோப்பு**

கவனி - பார்க்க மற்றும் சிந்திக்க.
தூய்மையான நடத்தை - தேவனின் விருப்பத்திற்கு மாறாக உங்கள் கணவருக்கு விரோதமான அனைத்து நடத்தைகளிலிருந்தும் விலகி இருத்தல்.

இந்த கீழ்ப்படிதலை ஒரு மனைவி எவ்வாறு நிறைவேற்றுவார்? அது இருதயத்தில் துவங்கும் ஒன்றாகும். ஒரு பெண்ணுக்கு தலை முடி, நகைகள் மற்றும் ஆடைகள் (தற்போதைய சூழலில் ஒப்பனையையும் சேர்த்துக்கொள்ளுவோம்) மீதான இயல்பான அக்கறையினை சரியான கண்ணோட்டத்துடன் இருப்பது சரி என்பதனை 1 பேதுரு 3: 3 விவரிக்கின்றது. காலம் சென்ற போதகர் J. வெர்னோன் மெக்கீ தனது வானொலி நிகழ்ச்சியின் வாயிலாகவும் தனது செய்திகளிலும் கூறியதாவது: "களஞ்சியத்திற்கு ஓவியம் தேவைப்பட்டால், அதை வண்ணம் தீட்டவும்". ஆனால் தேவன், 4 வது வசனத்தில், உண்மையான அழகு மற்றும் பெண் தன்மையை "இதயத்தின் மறைக்கப்பட்ட நபர், மென்மையான மற்றும் அமைதியான ஆவியின் அழியாத அழகுடன், இது தேவனின் பார்வையில் மிகவும் விலைமதிப்பற்றது" என்று வரையறுக்கிறது. தேவன் நம் மனதை புதுப்பிக்க விரும்புகிறார் (எபேசியர் 4: 23) உள்ளான மனிதனை பலப்படுத்த விரும்புகிறார் (எபேசியர் 3:16), ஏனென்றால் நம் இதயத்திலிருந்து வாழ்க்கை பிரச்சினையும் (நீதிமொழிகள் 4: 23) செயல்களும் எழுகின்றன (மத்தேயு 15: 18-19).

**சுய பரிசோதனை 1**

மனைவிகளே, 1 பேதுரு 3:4ன் படி "தேவனின் பார்வையில் மிகவும் விலைமதிப்பற்றது" என்றால் என்னவென்று நினைக்கிறீர்கள்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

தேவனே இறுதியில் எல்லாவற்றையும் காண்கின்றார். ஒரு மனைவி தேவனை விசுவாசிக்கும்பொழுதும் பதிலளிப்பதில் ஒழுங்காக நடக்கும்போதும், அது தேவனின் பார்வையில் விலைமதிப்பற்றது (1 பேதுரு 3:4). ஒரு பெண் தன் இருதயம் மென்மையாகவும் (சாந்தமாக, சகிப்புத்தன்மையுடன்), அமைதியான ஆவியுடனும் (அமைதியாக, தடையில்லாமல்) இருந்தால், அவள் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறாள், இது தேவனுக்கு மிகவும் மதிப்பு வாய்ந்தது என்பதை ஒரு பெண் தெரிந்து கொள்ள தேவன் விரும்புகிறார். இதன் காரணத்தை 5 ஆம் வசனத்தில் பார்க்க முடியும்: "இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்."

தேவன், ஆணுக்கென்று ஒரு குறிப்பிட்ட உறவுக்காக பெண்ணை உருவாக்கினார், அவள் மனைவி அல்லது உதவியாளரின் பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளும்போது, கீழ்ப்படிதல் என்பது தேவன் வடிவமைத்த மேலாண்மை அமைப்பிற்கு அடிபணிதலாகும். இதைச் செய்ய, ஒரு மனைவி கணவனின் அதிகாரத்திற்கு விருப்பத்துடன் கீழ்ப்படிய வேண்டும் (மேலே விளக்கப்பட்டுள்ளபடி, அது பாவமாக இல்லாதபட்சத்தில்).

நான் ஆலோசகராக இருந்த ஆண்டுகளில், கணவனும் மனைவியும் தேவனின் திட்டத்தைப் பின்பற்றும்போது விவாகரத்தின் விளிம்பில் இருந்து மாற்றப்பட்ட எண்ணற்ற திருமணங்களை நான் பார்த்திருக்கிறேன். கணவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள், ஏற்கனவே விசுவாசிகளாக இருந்தவர்கள் ஆவிக்குரிய ரீதியாக கற்றுக்கொள்ளவும் வளரவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள், மேலும் மனைவி தேவனை விசுவாசித்து அவருடைய திட்டத்திற்கு அடிபணிந்ததால் முழு குடும்பத்திற்கும் மறுசீரமைப்பு வருகிறது.

திருமணத்தை பற்றி மேலும் அறிய, எங்கள் திருமணம் ஒரு ஊழியம் தொடரை வாசியுங்கள்.

**சீர்குலைவுக்கான கீழ்நோக்கி சுழல்**

தகப்பன்மார்களே, வீட்டில் நீங்கள் எப்படி நடக்கின்றீர்கள் அல்லது எதிர்வினையாற்றுகின்றீர்கள்? எனது மகன் நிக்கோலஸ் பிறந்த பிறகு சில வருடங்கள் வரையிலும், என்னை இவ்வுலகில் எல்லா மனிதர்களை காட்டிலும் அதிக கோபப்படுத்தினான். நான் அதிகமான அளவில் எதிர்வினையாற்றுவேன், கத்துவேன், கோபத்தில் அடிப்பேன், பெரும்பாலும் அவன் ஏதாவது தவறு செய்தால் அன்பிற்கு பதில் எதிர்மறையாய் நடந்துகொள்வேன். என்னுடைய இந்த எதிர்வினையாற்றுதல் எனது மனைவிக்கு சந்தோசத்தை அளிக்கவில்லை. குழந்தையை பேணிவளர்ப்பவராக எனது மனைவி தனது குழந்தையை அதன் முட்டாள்தனமான தகப்பனிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள நினைத்தார். நான் கட்டுப்பாட்டில் இல்லாத காரணத்தால், எனது மனைவி எனது மகனை பாதுகாத்தும் என்னை அவன்முன்பு திருத்தவும் செய்தார். என்னை குறைமதிப்பிற்கு உட்படுத்தியது எனக்கு பிடிக்கவில்லை. இந்த மோதலின் இயற்கையான விளைவே நாங்கள் வேதாகமற்ற முறையில் விஷயங்களைக் கையாளத் துவங்கியதாகும். கருத்து வேறுபாடுகள் எழத்துவங்கி, எங்களுடைய இல்லற உறவு பாதிப்பிற்குள்ளாகியது. எதிர்பாராதவிதமாக, இவ்வாறான சூழ்நிலை மிகவும் பொதுவானது.

எனது வீட்டில் இந்த கீழ்நோக்கி சுழல் வாயிலாக கர்த்தர் எனக்கொரு எச்சரிக்கை விடுத்ததற்காக கர்த்தருக்கு நான் நின்றி செலுத்துகிறேன்.

பழைய ஏற்பாட்டின் உயர் ஊழியரான ஏலி என்பவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர், அவர்கள் "ஊழல்செய்பவர்களாய், கர்த்தரை அறியாதவர்களாக இருந்தார்கள்". (1 சாமுவேல் 2: 12), ஆனால் அவர்களோ தேவனுடைய கூடாரத்தில் ஊழியர் பணியாற்றினர். அவருடைய மகன்கள் இருவரும் செய்த எல்லா காரியங்களையும் ஏலி அறிந்துகொண்டார், பெண்களோடு சயானிப்பதை கேள்விப்பட்டு (1 சாமுவேல் 2: 22), இறுதியில் அவர்களை நோக்கி "என் குமாரரே, வேண்டாம்; நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல; கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்களே" என்றார் (1 சாமுவேல் 2: 24). ஆனால் அவரோ அவர்களை அடக்கவில்லை. அவர்களை தடுக்கவில்லை. தேவன் அவரை பலமுறை எச்சரித்து, முடிவாக அவர் சாமுவேல் தீர்க்கதரிசியின் மூலமாக பேசினார்.

> அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்புச் செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன். (1 சாமுவேல் 3: 13)

இது ஒரே இரவில் நடந்த சம்பவமல்ல. இது ஒரு கீழ்நோக்கி சுழல். அடுத்த அத்தியாயத்தில், தேவனின் நியாயத்தீர்ப்பின்படி அவரும் அவரது மகன்களும் இறந்துபோனார்கள். தனது குடும்பத்தை பொறுத்தமட்டில் ஏலி மோசமான தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினார், அது ஒரு மோசமான சாட்சியத்தைக் கொடுத்தது அதே சமயம் தனது குடும்பம் அழிவை நோக்கி சென்றது. தகப்பன்மார்களே, நம் குழந்தைகள் கீழ்ப்படியாதபொழுது நாம் அவர்களிடம் மேன்மையுடனும் அன்புடனும் நடந்துகொள்வது அவசியம்.

> மூடனாகிய மகன் தன் தகப்பனுக்கு மிகுந்த துக்கம்; மனைவியின் சண்டைகள் ஓயாத ஒழுக்கு. (நீதிமொழிகள் 19: 13)

மூடனாயிருக்கிற ஒரு மகன் தனது தகப்பனுடைய அதிகாரத்திற்கும் ஒழுக்கத்திற்கும் அடிபணியாதவனாய் காணப்படுவான். எனது மகனுடைய விஷயத்தில் இத்தகு பிரச்சனையில்லாமல் மாறாக அவன் ஒழுக்கவிதிகளை மீறும்பொழுது நான் கோபத்துடன் ஏதிவினையாற்றும் பாவமே காரணமாயிருந்தது. எனினும், இவ்வசனத்தின் இரண்டாவது கருத்தை பார்ப்போமேயானால், அது மனைவி தனது கணவனுடைய தீர்மானங்களில் குறைகூறுவது சரியான ஒரு முறையல்ல என்பதனை குறிக்கின்றது. குழந்தையை வளர்ப்பதிலோ அல்லது இல்லற வாழ்வின் யாதொரு காரியத்திலோ மனைவி தொடர்ச்சியாக கணவனோடு வாதிடுகிறவராக இருந்தால், அது கீழ்ப்படியாமையாகும் என்பதை கருத்தில்கொள்ளவேண்டும். (குறிப்பு: வன்முறை உள்ள இடங்களில், பிரச்சனைகள் மாறலாம்.)

> ஒரு பிரசித்திபெற்ற கிறிஸ்தவ எழுத்தாளர் ஒரு நூறு வருட காலத்திற்கு முன்பாக இவ்வேதபகுதியை குறித்து எழுதும்பொழுது, காலங்கள் மாறினாலும் பிரச்சனைகளில் மாற்றம் இல்லை என்று கூறுகின்றார்.
>
> ஒரு முட்டாள் மகனும் ஒரு சர்ச்சைக்குரிய மனைவியும் உள்ள வீடு எவ்வளவு மகிழ்ச்சியற்றது. அவர்கள் இருவரும் ஒன்றாகக் காணப்பட வாய்ப்புள்ளது; மனைவி தனது கணவனின் அதிகாரத்தை மறுக்கும்போது, அவருடைய சரியான ஒழுக்கத்திற்கு எதிராக குழந்தைகளுடன் பக்கபலமாக இருந்தால், வீட்டில் ஏற்படும் விளைவு நன்றாக இல்லாமல் சீர்குலைவோடே காணப்படும். பெற்றோர்கள் தகராறு செய்வதையும், வீட்டின் முன்பு சண்டையிடுவதையும் பார்ப்பதென்பது மிகவும் பொதுவான விஷயம். இதன் கொடிய விளைவு

> என்னவென்றால் மகன்களோ மகள்களோ தந்தையின் அதிகாரத்தை வெறுக்க கற்றுக்கொண்டு தாயானவர் தவறுகளை சுட்டிக்காட்டி திருத்த முற்படும்பொழுது அதனை மீறுகின்றனர். இவ்வாறான குழந்தைகள் ஒரு வழியற்று, கீழ்ப்படியாத மனப்பான்மையுடன் வளர்ந்து, தங்கள் சொந்த வழியைக் கடைப்பிடித்து சரியான ஒழுக்கத்திற்கு அடிபணிய மறுக்கின்றார்கள். - எச். எ. ஐயேன்சைடு, 1908

இவ்வாறான ஒரு சூழ்நிலை உங்களது வீட்டில் நிலவுகின்றது? __ ஆம் __ இல்லை

***செயல் திட்டம் 1***

அப்படி இருக்கும் பட்சத்தில், பிரச்சனைகளை பட்டியலிட்டு தேவனிடம் ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டு, உங்களை மன்னிக்க அவரிடம் கேளுங்கள். பிறகு உங்கள் குடும்பத்தாரிடம் சென்று அவர்களிடம் மன்னிக்கக்கோருங்கள். நீங்கள் தாழ்மையுடனும் கீழ்ப்படிதலுடனும் நடக்கும்பொழுது, தேவன் உங்களை ஆசீர்வதிப்பதுவுமல்லாமல் அவருடைய வழியில் உங்கள் வீடுகளில் கடைப்பிடிக்க உங்களுக்கு அதிகாரம் தருவார்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

**ஒழுக்கத்தை நிறுவுதல்**

வீட்டில், தேவனுடைய தலையீட்டின்வாயிலாக அவரது உத்தரவை நிறுவ அனுமதிக்க தவறினோமேயானால், கீழ்நோக்கி சுழல் தொடர்ந்து காணப்பட்டு, திருமண உறவின் அடித்தளத்தை அழித்துவிடும். காலப்போக்கில், மரியாதை மற்றும் நம்பிக்கை இழப்பினால் இல்லற நெருக்கத்தை மிக மோசமாக பாதித்துவிடும். பெரும்பாலான ஆண்கள் இல்லற நெருக்கத்தை தொடர்பற்றுப்போகாமல் பல காரியங்களில் விட்டுக்கொடுப்பது அவர்களுடைய பாலியல் உறவை தக்கவைத்துக்கொள்வதற்காகவே. தந்தை பின்வாங்கும்போது தாய் முன்வந்து, குழந்தைகள் மீது முக்கிய ஒழுக்கநெறியைக் கற்றுக்கொடுப்பதுவுமல்லாமல் அதிகாரியாகவும் மாறுகிறார், தன கணவரைவிட தன்னால் திறம்பட செய்யமுடியும் என்று நம்புகிறார். தந்தையோ, அம்மா தன்னிடம் அவருடைய உள்ளீட்டுக்காகவோ அல்லது தாயின் கையை மீறிப்போகும் தருணங்களில் தந்தை முன்வருகின்றார். ஆனால் இது தேவனின் திட்டம் அல்ல.

மனநிறைவுடைய குழந்தைகள் உள்ள வீடுகளில் இந்த அமைப்பானது சில நேரங்களில் செயல்படலாம். ஆனால், வலுவான விருப்பம் கொண்ட குழந்தையோ அல்லது குழந்தை இளமை பருவத்தை அடையும்போதோ கவனமாய் இருக்கவேண்டும். இந்த அமைப்பு நொறுங்கிப்போகும். தாயானவள் தேவன் நியமித்த வளர்ப்பவர், போற்றுபவர், உற்சாகப்படுத்துபவர் போன்ற பங்குகளிலிருந்து தலைவர், ஒழுங்குபடுத்துபவர் மற்றும் பயிற்சியாளர் ஆகிய பங்குகளை தேர்ந்தெடுக்கும்பொழுது இறுதியில் குழந்தைகள் அவரிடம் கோபித்துக்கொண்டு, தனது கணவர் விமர்சித்து, அவர்கள் தேவனின் விருப்பத்திற்கு அப்பாற்பட்ட குற்றத்தை சுமப்பார்கள்.

வாழ்க்கையில் நம்முடைய முக்கிய குறிக்கோள் தேவனின் விருப்பத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றுவதாகும், அதில் வீட்டின் சுவர்களுக்குள் அவரை மகிமைப்படுத்துவதுமே ஆகும். தாவீது ராஜாவோடுகூட, நம்முடைய அணுகுமுறையம் நோக்கமும் ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும்.

> உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன்; எப்பொழுது என்னிடத்தில் வருவீர்! என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்துகொள்ளுவேன். (சங்கீதம் 101: 2)

நம்முடைய குடும்பங்களை மேம்படுத்துவதற்காக தரமற்ற முறைகளை வடிவமைப்போமானால், நாம் கீழ்ப்படியாமையிலும் நமது வீட்டிற்குள் தேவனை அவமதித்தும் வாழ்கின்றோம். ஒருவேளை பல வருடங்களாக வேதாகமத்திற்கு எதிரான பழக்கவழக்கங்களை உங்களுடைய திருமண வாழ்க்கையில் கடைபிடித்தவர்களாக இருக்கலாம், மாற்றம் இப்பொழுதே அவசியம். மாற்றம் என்பது துவக்கத்தில் கடினமாக இருக்கும், ஆனால் கீழ்ப்படிதலுக்கான வெகுமதியோ உங்களுடைய வேலையை காட்டிலும் தியாகங்களை காட்டிலும் அநேகமாயிருக்கும். தேவனின் மேலாண்மை பாணியை ஏற்றுக்கொள்ள விருப்பத்துடன் தொடங்கவும். தந்தைகளே, உங்களுடைய சோம்பல்களையும் அம்சங்களையும் தேவனிடம் சாட்டிவிட்டு தலைவனாக முன்னேறுங்கள். தாய்மார்களே, உங்களுடைய இரட்சகர் மீது விசுவாசம்கொண்டு உங்களுடைய கணவருடைய முடிவுகளுக்கு உறுதுணையாயிருங்கள். அவரை பின்தொடர்ந்து அன்றாடகமும் அவரை வழிநடத்திச்செல்ல உதவுங்கள். உங்களுடைய குழந்தைகள் ஒரு குறுகிய காலத்திற்கு இம்முறைமாற்றத்தை அதிர்ச்சியுடன் பார்த்தாலும், கர்த்தருக்கு கீழ்ப்படிதலில் நடந்து அவர் கிரியை செய்வதை பாருங்கள்.

> நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறோம். (2 தெசலோனிக்கேயர் 1: 12)

**சுய பரிசோதனை 2**

ஒரு குடும்பமாக/ தம்பதியாக உங்கள் நிர்வாக பணியை மதிப்பீடு செய்யவும். இந்த பயிற்சியின் வாயிலாக உங்கள் கணவனிடமோ மனைவி இடமோ குற்றம் கண்டுபிடிப்பதற்காக இல்லை என்பதை கருத்தில் கொண்டு உங்களுடைய பலவீனங்களை குறித்து தேவன் உங்களோடு பேச முற்படவும். நீங்கள் மனக்கசப்பு அல்லது பெருமையுடன் பதிலளித்தால், பரிசுத்த ஆவியின் நம்பிக்கைக்கு கீழ்ப்படிவதில் இருந்து நீங்கள் தடுக்கப்படுவீர்கள் என்பதில் எச்சரிக்கையாயிருங்கள்.

1. தந்தையே, உங்களுடைய குழந்தைகள் உங்களுடைய கண் முன்னிருக்கும்போது, அவர்களை ஒழுங்குபடுத்தமுற்படுவீர்களா (அல்லது உங்களுடைய மனைவியிடம் அதை விட்டுவிடுவார்களா)?
______ ஆம் ______ இல்லை _____ சிலநேரங்களில்

2. தாயே, உங்கள் குழந்தைகளை ஒழுங்குபடுத்தும்பொழுது எல்லா அம்சங்களிலும் உங்களது கணவரை நீங்கள் ஆலோசனைக்காக அணுகுவதுண்டா?
_____ ஆம் _____ இல்லை _____ சிலநேரங்களில்

3. தந்தையே, உங்களுடைய குழந்தைகளின் உணர்ச்சிநிலையை அறிவதற்காக உங்கள் மனைவியினுடைய ஆலோசனைகளை கேட்பதுண்டா?
_____ ஆம் _____ இல்லை _____ சிலநேரங்களில்

4. தாயே, உங்களுடைய கணவரிடம் குழந்தைகளைப் பற்றியதான எல்லா விஷயங்களையம் பகிராமல் ஏதாவது விஷயங்களை மறைத்ததுண்டா? உதாரணத்திற்கு: "அப்பாவிடம் இதை நாம் சொல்ல முடியாது ஏனென்றால் அவர் மிகவும் வருத்தமடைவார்."
_____ ஆம் _____ இல்லை _____ சிலநேரங்களில்

5. தந்தையே, உங்களுடைய மனைவி குழந்தைகளிடம் சில காரியங்களில் இல்லை என்று சொல்லும் தருணங்களில், உங்களிடம் அணுகி கேட்கும்பொழுது, நீங்கள் அவர்களிடம் பதிலளிக்கும்முன் உங்கள் மனைவியிடம் ஆலோசனை கேட்டதுண்டா? உதாரணத்திற்கு, அம்மா என்ன கூறினார்கள், என்று குழந்தைகளிடம் கேட்டதுண்டா?
__ ஆம் __ இல்லை __ சிலநேரங்களில்

6. தாயே, நீங்கள் உங்களுடைய குழந்தைகளோடு வாதிட்டு, உங்களையும் உங்கள் விதிகளையும் உங்கள் ஒழுங்குபடுத்தும் முறைகளையும் திணித்து தற்காப்பை மேம்படுத்தியதுண்டா?
__ ஆம் __ இல்லை __ சிலநேரங்களில்

7. பெற்றோர்களே, நீங்கள் இருவருமாக ஒன்றிணைந்து அமர்ந்து உங்கள் குழந்தைகளிடம் நீங்கள் கற்பிக்க முற்படும் ஒழுங்கு முறைகளிலும் வீதிகளிலும் ஒப்புக்கொண்டதுண்டா?
__ ஆம் __ இல்லை __ சிலநேரங்களில்

8. பெற்றோர்களே, நீங்கள் உங்கள் குழந்தைகளின் முன்பு ஒழுங்கு முறைகளிலும் விதிகளிலும் கருத்துவேறுபாடுகளை பரிமாறிக்கொண்டதுண்டா?
__ ஆம் __ இல்லை __ சிலநேரங்களில்

வேதாகம பதில்கள்: 1. ஆம், 2. ஆம், 3. ஆம், 4. இல்லை, 5. ஆம், 6. இல்லை, 7. ஆம், 8. இல்லை.

உங்களுடைய பதில்கள் இப்பதில்களுக்கிணையாக இல்லையென்றால், உங்களுடைய மேலாண்மை முறை ஒழுங்கற்ற நிலையில் காணப்படுகின்றது என்று நிச்சயமாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். பெரும்பாலான தம்பதியினர் தங்களுடைய மேலாண்மை முறையில் மேம்படுத்துதல் செய்வதற்கு அதிக வாய்ப்புள்ளது.

***செயல் திட்டம் 2***

இந்த மதிப்பீட்டால் உங்களுடைய குற்றங்களை நீங்கள் அறிந்திருப்பின், சில குறிப்பிட்ட சிக்கல்களை பட்டியலிட சிறிது நேரம் ஒதுக்குங்கள். நீங்கள் திருமணமானவரானால், இருவருமாக சேர்ந்து கலந்தாய்வு செய்து, ஒருவரையொருவர் மன்னித்து, மாற்றவேண்டியவைகளை மாற்றுவதற்கு உறுதியளியுங்கள்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

**பாடம் 5**

## வேதாகம பாத்திரங்கள்

தேவன் குடும்பத்தின் மீது அதிக மதிப்பு கொண்டவராயிருப்பதால், குழந்தையை வளர்ப்பதென்பது ஒரு சவால் நிறைந்த மிகப்பெரிய காரியம் என்பது அவருக்கு தெரியும், தனது ஜீவ வார்த்தைகளின் வாயிலாக பெற்றோருக்கான கோட்பாடுகளை அன்பாக வழங்கியுள்ளார். தகப்பன்மார்களோ தாய்மார்களோ தாங்களாகவே முயற்சிசெய்து பெற்றோருக்கான கோட்பாடுகளை அவர்களாகவே தேடுவதை தவிர்த்து தேவனே நமக்குரிய பொறுப்புகளுக்கு தெளிவான திசையினை வழங்குகிறார்.

இந்தப் பாடமானது தகப்பனுடைய பாங்கினையும் தாயுடைய பாங்கினையும் வேறு பிரித்து விளக்கமளிக்கின்றது. பெற்றோர்களுக்கானவைகளை பொறுத்த மட்டில் இவை ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படுகின்றது. தந்தையினுடைய பிரதான பங்கு குழந்தைகளை ஒழுங்குபடுத்தி ஒழுக்கக்கூறுகளை கற்பித்தல் எனினும், தந்தை இல்லாதபோது தாயானவர் அப்பணியை மேற்கொள்ளவேண்டும். குழந்தைகளை பேணி வளர்ப்பதென்பது தாயினுடைய பிரதான பொறுப்பாயிருக்கிறதுபோல, தகப்பனும் சில நேரங்களில் தாயாற்றும் அப்பொறுப்பினை மேற்கொள்வதவசியம். ஒரு தாயிடம் குழந்தைகளை ஒழுங்குபடுத்தும் மனநிலை இருக்கும்பட்சத்தில், மென்மையான அன்பு, வளர்ப்பு, பராமரிப்பு ஆகியவற்றை குழந்தைகளிடம் காண்பிக்க தனக்குள் வித்திடவேண்டும். தான் மிகவும் அன்புகூர்ந்த சபையான தெசலோனிக்கா சபையாரிடம் இவ்வனைத்து பண்புகளுடனும் பவுலடியார் நடந்துகொண்டார் என்று பார்க்கலாம்.

### பாகம் 1: தகப்பனுடைய பங்கும் பொறுப்பும்

நீங்கள் வழிநடத்த அழைக்கப்பட்டர்வர் என்பதனை தெரிந்துகொள்வது மாத்திரமல்லாமல், தகப்பன்மார்களுக்கு வேறு முக்கியமான வேதாகம கருத்துகளும் தலைமைத்துவதோடு இணைக்கப்பட்டவைகளாகும்.

### கொள்கை 1: பொறுப்புள்ள தகப்பன் தனது குடும்பத்தின் மீதான ஒரு போதக ஊழியன்.

> புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்... (எப்சியர் 5: 25-26)

நம்முடைய தலைமை போதகர் கிறிஸ்துவைக்குறித்து பவுலடியார் தெளிவாக கூறுவதென்னவென்றால், அவர் நம்மை நேசித்து, திருச்சபைக்காக தம்மையே கொடுத்தார், கணவனும் மனைவிக்கு அதுபோலவே செய்ய வேண்டும் (இதுவும் அவருடைய குடும்பம் என்று குறிக்கின்றது).

புனிதப்படுத்துவதே குறிக்கோள், அதாவது முற்றிலும் சுத்திகரித்தல், தூய்மை படுத்துதல், பரிசுத்தப்படுத்துதல் என்பதாகும். இது, கணவனுடைய/ தந்தையினுடைய தலைமைத்துவதினாலே - அவர் வழிநடத்துவதினாலேயே சாத்தியம். பாவம், சுயநலம் ஆகிய மாசுகளிலிருந்து நம்மை தூய்மைபடுத்திக்கொள்ள, பரிசுத்தப்படுத்துவதே குறிக்கோளாகும். தேவனுடைய வார்த்தையே நம்முடைய கற்பித்தல் கையேடு. பழைய ஏற்பாட்டின் தேவ மனிதர்கள் வேத வார்த்தையின் காவலர்களை இருந்ததுபோலவே, தகப்பனும்/ கணவனும் அவ்வாறாகவே இருக்க வேண்டும்.

ஒரு விதத்தில், தகப்பன்மார்களாகிய நாம் நமது குடும்பங்களின் போதகர்கள். நமது குடும்பங்களின் மீது நம்மை போதகர்களாக வைத்துள்ளார். குடும்பத்தைப் போன்ற புனிதமான நிறுவனத்தில் புனித கடமைகளை ஆற்ற போதகர்களும் அதிகாரம் உண்டு. குடும்பத்தின் புனித சடங்குகளாவன: மனைவி மற்றும் குழந்தைகளின் ஆவிக்குரிய சீடத்துவத்தில் வழிநடத்துதல், குழந்தைகளின் ஒழுக்கத்தைக் கண்காணித்தல், திருச்சபையில் ஆவிக்குரிய ஐக்கியத்தை முன்னிறுத்துவதும், நிதியை நன்கு கையாள்வதும், முன்மாதிரியான தேவ மனிதனாக இருப்பதுமே. தகப்பன்மார்கள் அவர்களுடைய பங்கினை ஆற்றும்போது, அவர்கள் தேவனை மாத்திரமல்லாமல் தங்களுடைய மனைவி, பிள்ளைகளுக்கும் ஊழியம் செயகின்றனர்.

பழைய ஏற்பாட்டில், யோபுவைக்குறித்து நாம் வாசிப்போமேயானால், தனது குடும்பத்தின் போதகராக பணியாற்றுகிறார், அதிகாலமே எழுந்து தனது பிள்ளைகளுக்காக சர்வாங்க தகன பலிகளை (மிருக பலிகளை) செலுத்தினார். தற்போதய காலக்கட்டத்தில் நாம் பாவத்திற்காக பலிசெலுத்தவில்லையென்றாலும், தங்களுடைய குடும்பங்களில் தகப்பன்மார்கள் ஆவிக்குரிய தலைமைத்துவமாகிய போதக பணியை அவர்களுடைய பிள்ளைகளை சீடத்துவத்திலும், ஒழுக்கம் கற்பித்ததிலும், குடும்பத்தினர்களுடன் ஜெபிப்பதிலும் நிறைவேற்றுகின்றனர்.

> அவன் குமாரர், அவனவன் தன்தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்துசெய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள். விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு: ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்; இந்தப்பிரகாரமாக அந்நாட்களிலெல்லாம் செய்துவருவான். (யோபு 1:4-5)

கூர்ந்துகவனித்தீர்களேயானால், யோபு இதனை அனுதினமும் செய்தார் என்று பார்க்கிறோம், அப்படியானால் அவர் இத்தகு தலைமைத்துவத்தை கடைபிடித்தார் என்றேயாகும். அவருடைய அக்கறை என்னவென்றால் அவருடைய பிள்ளைகள் ஒருவேளை பாவம் செய்தோ, தேவனை தூஷித்தோ இருக்கலாம் என்றே. தேவனுடனான உறவைக்குறித்து மிகவும் கவனமாயிருந்தார். என்னவொரு தேவ மனிதனின் உதாரணம்.

பிள்ளைகளை சீடர்களாக்குவதோ, ஒழுங்குபடுத்துவதோ தகப்பன் ஒருவருடைய வேலை மாத்திரமல்ல. எனினும், இவைகளை தினசரி நடப்பிப்பதை உறுதி செய்ய வேண்டும். கவலைகரமான விஷயம் என்னவென்றால், பல குடும்பங்களில் இன்று, ஆவிக்குரிய தலைவர்களாக தாய்மார்களே விளங்குகின்றார்கள், அவர்களே பிரதான ஒழுங்குபடுத்துபவர்களாக விளங்குகின்றனர். அடுத்த இரண்டு பாடங்களில் இதனை நாம் திட்டமாய் பார்ப்போம். பெரும்பாலான ஆண்கள் தங்களை போதகர்களாக பாவிக்கக் கற்றுக்கொடுக்கப்படவில்லை.

தகப்பன்மார்களே, நீங்கள் போதர்களாக விளங்க தேவனுடைய அழைப்பை அங்கீகரிக்க சம்மதிக்கிறீர்களா? ___ ஆம் ___ இல்லை.

கிறிஸ்தவ பெற்றோர்களாக, நமது பிரதான குறிக்கோள் பிள்ளைகளை தேவனுக்கேற்ற, முதிர்ந்த வாலிபர்களாக வளர்ப்பதுவேயாகும். தெசலோனிக்கேயாவிலுள்ள இளம் வாலிபர்களுக்காக அப்போஸ்தலராகிய பவளுடியார் ஜெபைத்தது போல "தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று... (1 தெசலோனிக்கேயர் 2: 11), நாமும் நம்முடைய பிள்ளைகளுக்காக

விடாமுயற்சியுடன் ஜெபிக்க வேண்டும். ஒரு போதகராக, இவ்வண்ணமாக தகப்பன் வழிநடத்தி, இதனை முதன்மைப்படுத்த வேண்டும்.

**சுய பரிசோதனை 1**

கீழ்காணும் வேத மறைகளை வாசித்தப்பிறகு, தகப்பன்மார்களே, இவ்வேதப்பகுதிகள் தேவனுக்கும் உங்களுக்குமான உறவினை எப்படி தொடர்புபடுத்துகின்றன என்பதை விளக்குங்கள். இரண்டாவதாக, இதற்கு கீழ்ப்படிபவரேயென்றால், இது உங்களுடைய குடும்பத்தினருடனான உறவின்மீது எத்தகு விளைவுண்டென்பதை விளக்கவும்?

> அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம். (1 தெசலோக்கேயர் 4:1)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

> ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து… (எப்சியர் 4:1)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

கொள்கை 1 உங்களுடைய வாழ்வில் எப்படி பொருந்துகின்றதென்று விவரிக்கவும்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

**கொள்கை 2: ஒரு பொறுப்புள்ள தகப்பன் தனது குடும்பத்திற்கு தனது வேலையின்மூலமாய் ஆதரவாயிருக்கின்றார்.**

> சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம். (1 தெசலோனிக்கேயர் 2:9)

பவுலடியார் சபையாரிடம் தெரிவித்ததென்னவென்றால், அவர் கடினமாக உழைத்து பணம் சம்பாதித்து, தேவனுக்கு கீழ்ப்படிந்து, சபையாருக்கு பணச்சுமையாக இருக்க விரும்பவில்லை. மனிதன் வேலை செய்வதற்காகவே தேவன் ஒரு தரநிலையை ஏற்படுத்தியிருந்தார் என்று பவுலடியார் அறிந்திருந்தார். ஏதேன் தோட்டத்தில், ஆதாமை தேவன் பராமரிக்கும் வேலையை செய்யக்கூறினார் (ஆதியாகமம் 2:15). புத்தகத்துக்கு அப்பாற்பட்டு பவுலடியார் கூடாரம்பண்ணும் தொழில் செயகிறவராயிருந்தார் (அப்போஸ்தலர் 18:3)., அவர் தன்னை ஆதரித்துக்கொள்ள விடாமுயற்சியுடன் உழைத்தார். பவுலடியாருடைய கரிசனை அவருடைய தேவைகளுக்காக மட்டும்மல்ல. அப்போஸ்தலர் 20:34ல் அவர் கூறுகின்றார்: "நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது." ஆம், அவருடைய சொந்த தேவைகளுக்காக தானே முயற்சி செய்தார், அதே சமயம் மற்றவர்களுடைய நலனில் கரிசனையுள்ளவராகவும் காணப்பட்டார்.

இது குடும்பத்தைக் குறித்ததான மிக முக்கியமான ஒன்று, ஏனென்றால் பவுலடியார் ஆண்களுக்கு அறிவுறுத்துவதென்னவென்றால், "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்." (1 தீமோத்தேயு 5:8). "விசுவாசத்தை மறுத்தார்" என்றால் தேவன் தம்மோடு உறவாடுகிறவர்களிடம் எதிர்பார்க்கும் காரியங்களின்படி அவர் வாழவில்லை என்பதாகும். தனிப்பட்ட பிரதிபெயர்கள் ஆணை நோக்கி பேசுவதாகுவும் வலுவான அறிக்கையாகவும் காணப்படுகின்றது. ஒரு வர்ணனையாளர் இவ்வாறாக கூறுகின்றார்:

> ஒரு குடும்ப உறுப்பினரின் அடிப்படை கவனிப்பு மற்றும் ஆதரவை தவறுதலாக கையாளும்போது, அது விசுவாசத்தி மறுப்பதுபோன்றாகும், ஏனென்றால் ஒருவரும் தேவனுடனான அன்பையும் விசுவாசத்தையும் உரிமை பாராட்டிக்கொண்டு அதே சமயம் ஒருவருடைய குடும்பத்தை புறக்கணிக்க முடியாது. (மத்தேயு 5:46-47 வசனங்களை வாசிக்கவும்). அப்படி ஒருவர் செய்பவராக இருப்பாரேயானால் அவர் ஒரு அவ்விசுவாசியைவிட மோசமானவர், ஏனென்றால் சிலை வழிபாடு செய்யும் அவ்விசுவாசிகள் கூட குடும்பத்தின் தேவைகளை புரிந்த பொறுப்புள்ளவர்களாய் காணப்படுகின்றனர்.... நம்முடைய குடும்பங்கள் தேவனுடைய அன்பின் தரத்தை நிரூப்பிக்கும் அரண்களை விளங்குகின்றன.

இவ்வாறு கூறுவதில், பெண்கள் வேலை செய்ய முடியாது என்பதல்ல, ஆனால் தயவாக கவனிப்பானானால் தலைமைத்துவமும் பொறுப்பும் அவனிடமே உள்ளது.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கீழ்காணும் வசங்களிலிருந்து வேலையைக்குறித்ததான வேதாகம கோட்பாடுகளை பட்டியலிடவும்.

> வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். (கொலோசெயர் 3:17)

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

> இன்னவிதமாய் எங்களைப் பின்பற்றவேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம். உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம்.
>
> ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. (2 தெசலோனிக்கேயர் 3:7-10)

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

> இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்தி சொல்லுகிறோம். (2 தெசலோனிக்கேயர் 3:12)

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

> நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்யப்பழகட்டும். (தீத்து 3:14)

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

தேவனுடைய வார்த்தையானது தகப்பன்மார்கள் தங்கள் குடும்பத்தைக்குறித்ததான அக்கறை இல்லாமல் வேலை செய்ய கூறவில்லை, மாறாக, பொறுப்புடன் வேலை செய்து, பண ரீதியாக குடும்பம் சுமைக்குள்ளாக்கப்படக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றது. பொறுப்புள்ள ஒரு தகப்பன் தனது குடும்ப தேவைகளுக்காக ஒரு வேலையை பராமரித்து, கணவனாக தந்தையாக செய்யக்கூடிய முன்னுரிமைகளை புறக்கணிக்கக்கூடாதென்று அறிவுறுத்தப்படுகின்றான். கீழ்காணும் வேதாகம பகுதி ஒரு குடும்பத்தின் மீது அக்கறை கொள்ளவேண்டியதின் முக்கியத்துவத்தை சுட்டுகின்றது.

> இதோ, உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்; நான் உங்களை வருத்தப்படுத்துவதில்லை; நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன்: பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றார்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டும். (2 கொரிந்தியர் 12:14)

கொள்கை 2 உங்களுடைய வாழ்வில் எப்படி பொருந்துகின்றதென்று விவரிக்கவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**கொள்கை 3: ஒரு பொறுப்புள்ள தகப்பன் தனது குடும்பத்திற்கு கிறிஸ்தவ விசுவாசத்தின் சாட்சியாக விளங்குகின்றார்.**

> விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி. (1 தெசலோனிக்கேயர் 2:10)

பவுலடியார் தன்னிடமிருந்ததான களங்கமற்ற சாட்சியை தெசலோனிக்கேயா சபையார் முன்பு மாத்திரமல்லாமல் தேவனுக்கு முன்பாகவும் சுட்டிக்காண்பித்தார். இது தற்பெருமை அல்ல, மாறாக சபையானது தன்னுடைய மாதிரியாய் கடைபிடிக்கலாம் என்று மிக எளிமையாக சுட்டிக்காண்பிக்கிறன்றனர். தலைமைத்துவத்தை கொண்டுவிளங்கும் புருஷர்களாகிய தகப்பன்மார்களாகிய நமக்கும் இது மெய்யாகவே இருக்கின்றது. தேவன், நமது குடும்பத்தினர்கள் மற்றும் மற்ற விசுவாசிகள் நம்முடைய நடத்தை கிறிஸ்துவை பிரதிபலிக்கின்ரவர்களாக நாம் காணப்படவேண்டும்.

பவுலடியார் மூன்று தனித்துவமான கோட்பாடுகளை அடையாளம் கண்டு அவருடைய நடத்தையை வகைப்படுத்தி தனது விசுவாசத்தை உண்மையானதாக விளங்கச்செய்தார். இது முழுமையடைந்ததாக இல்லாமல் வழிகாட்டுபவைகாளே. பவுலடியாரும் கூட சில வேளைகளில் தடுமாறினார். (ரோமர் 7:18; 1 தீமோத்தேயு 1:15). ஆனால் இவைகளோ அவர் தொடர்ச்சியாக பயிற்சி செய்த கோட்பாடுகளாகும்.

1. பக்தியுடன் - புனிதமான, பக்தியுள்ள, பரிசுத்தமான, தேவனுக்கு அர்ப்பணித்த. இது கிறிஸ்துவுடன் நிலைத்திருக்கும் உங்களது உறவை விவரிக்கின்றது. நீங்கள் அர்ப்பணிப்புடன் காணப்பட்டால், தேவனுக்கு அர்பணிக்கப்பட்டவராக இருக்கும் பட்சத்தில், அந்த உறவானது பரிசுத்த வாழ்விற்கு ஆதாரமாய் விளங்குகின்றது, அதனை தொடர்ந்து பின்வரும் இரு குணாதிசயங்களும் பின்தொடரும்.

2. நியாயமாக - நாணயத்துடனும் நேர்மையுடனும், நியாயமான, குணத்தில், நடத்தையில் நேர்மையுடன், தினமும் தேவனுக்கு பிரியமானவர்கள் எவை என்று அறிந்து விரும்பி நடத்தல். தேவனுடைய வார்த்தையை அறிந்தவர்களாக

இருந்தீர்களேயென்றால், சரி எது தவறு எது என்று உங்களால் நிர்ணயிக்க முடியும். ஒரு கணவனாக தகப்பனாக கீழ்ப்படிதலுடன், நீங்கள் இதற்கு முன் செய்ய முடியாத அளவுக்கு அதிகாரம் பெற விரும்புகின்றீர்களா? தேவனுடைய தெய்வீக வல்லமை உங்களுக்குள் கிரியை செய்கின்றது (2 பேதுரு 1:3; ரோமர் 1:4; 2 கொரிந்தியர் 12:9).

3. குற்றம் இல்லாமல் - தவறில்லாமல், ஒரு விமர்சகரின் ஆய்வை தாங்க முடிந்தவராக. நீங்கள் தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிதலுடன் கடந்து செல்பவராக இருக்கும்பொழுது, நீங்கள் கிறிஸ்துவின் சாயலாக மாற்றப்படுகின்றீர்கள் அதே சமயம் உங்களுடைய பயபக்தியுள்ள நடத்தையை மற்றவர்களுக்கு வெளிப்படையாய் காண இயலும்.

குடும்பத்தின் ஆவிக்குரிய தலைவர்களாகவும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகவும் தேவனால் தகப்பன்மார்கள் அழைக்கப்படுகிறார்கள். ஒரு பொறுப்புள்ள தகப்பன் தனது பேச்சில் சமரசம் செய்வதில்லை, அதே சமயம் தனது பிள்ளைகளை புண்படுத்தும் வகையிலோ அவர்கள் தடுமாறும்விதத்திலோ அவர் இன்பம் காண்பதில்லை.

**சுய பரிசோதனை 2**

பின்வரும் உண்மைகளின் வழியில் வாழ்வது எப்படி உங்களுடைய பிள்ளைகளுடனான உறவை பாதிக்கக்கூடும் என்று அடையாளம் காணுக.

சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், (கொலோசெயர் 1:10)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம். (2 கொரிந்தியர் 4:2)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

கொள்கை 3 உங்களுடைய வாழ்வில் எப்படி பொருந்துகின்றதென்று விவரிக்கவும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

**கொள்கை 4: பொறுப்புள்ள ஒரு தகப்பன் தனது பிள்ளைகளை அறிவுரையின் வாயிலாகவும் ஆறுதலாளித்தும் விசுவாசத்தில் சீடர்களாக மாற்றுவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் நேரம் ஒதுக்குபவராக இருப்பார்.**

> தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள். (1 தெசலோனிக்கேயர் 2:12)

சபையில் பவுலடியாருடைய தலைமைத்துவ முறையானது பிள்ளைகளுக்கு பயிற்சியளிக்கும் தகப்பனோடு ஒப்பிடப்படுகின்றது. அது இப்படித்தான் தகப்பன் தனது பிள்ளைகளை நடத்தடவேண்டும் என்று ஊகிக்கின்றது. தேவனுக்குக் கீழ்ப்படிவதே இலக்கு என்ற வலுவாக குறிப்பிடுகின்றது. அவர் இந்த பயிற்சிக்கு மூன்று குறிப்பிட்ட பாகங்களை அடையாளம் காண்கின்றார்:

1. அறிவுரை அளி (கிரேக்கத்தில் பராக்கிலேயோ) - ஒருவரை தன பக்கமாய் அழைப்பது, உதவுவது; ஊக்குவிக்க, அறிவுறுத்தல், ஒருவரை ஒரு காரியத்தை செய்ய உந்துவது. இந்த வினைச்சொல் கடந்தகாலத்தையும் தொடர்ந்து தற்கால செயலையும் குறிக்கின்றது, அப்படியென்றால் பவுலடியார் இதை தொடர்ந்து செய்தார் என்றும், அதனால் அவர்கள் தேவனுடனான உறவில் வளர உதவிகரமாயிருந்தது. அவர்களுடைய வாழ்வில் அவருக்கு ஒரு நேர்மறை தாக்கம் இருந்தது, அதேபோன்ற தலைமைத்துவத்தை தகப்பன்மார்களாகிய நம்மிடமும் காணப்படவேண்டும். கார்தருக்கடுத்தவைகளில் அவர்கள் வளருவதற்கு நாம் நம்முடைய பிள்ளைகளுடன் சேர்ந்து நடக்க வேண்டும். நம்முடைய அணுகுமுறை சங்கீதம் 34: 11ல் கூறுகின்றபடி, "பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்; கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்."

2. ஆறுதல் - ஊக்குவிக்க; ஊக்கமளிக்க, ஆதரவளிக்க; பிரச்சனை அல்லது கவலைகரமான நேரங்களில் ஆறுதல்; சரியான நடத்தையை உற்சாகப்படுத்தவும், ஊக்குவிக்கவும் அமைதிகாரமான சூழலில் வடிவமைக்கப்படுத்தல். இவ்வகையான தந்தையின் செல்வாக்கு பிள்ளைகளுடைய சரியான நடக்கையில் ஊக்குவிக்க தவற முடியாது. பல நேரங்களில் நம்முடைய சுயத்தை சாகடித்து, மென்மையான அன்பை தரித்துக்கொள்ள வேண்டும்.

3. பொறுப்புணர்ச்சி - வேண்டுகோள்; ஈடுபட்டிருக்க வேண்டும், கவனம் கொண்டிருத்தல், பயிற்சி நடைபெறுவதை உறுதி செய்தல். வலியுறுத்தல் (கிரேக்கத்தில் மார்ட்டிரோமேநோய்) "உண்மையை வழங்குதல், ஒரு தந்தையின் சரியான வழிகாட்டு செயல்பாடுகளை வெளிப்படுத்துவதாகும். ஒரு நல்ல தகப்பன் ஊக்குவித்து வழிகாட்டியாய் விளங்குகின்றார். எனினும் பவுலடியார் தனது (ஆவிக்குரிய) பிள்ளைகள்மீது அளவுகடந்த அதிகாரம் கோராமல்..., அவர்களிடமிருந்து தேவையானவைகளை விரும்பி ஊக்குவிபத்தில் கவனமாயிருந்தார். மாறாக, அவர்களுடைய கிறிஸ்தவ தகப்பனாக பவுலடியாருடைய செயல்பாடு விசுவாசிகளுக்கு தேவனுக்குகந்த வாழ்க்கையை வாழ பயிற்சியளித்தார். இது பவுலடியாரின் சித்தமாக இராமல், அவருடைய நடவடிக்கைகளும், திருச்சபைக்கு அவரளித்த வழிகாட்டுதலிலும் பரலோகத்தில் இருக்கிற பிதாவின் சித்ததினாலேயே எல்லாவற்றையும் செய்தார்.

இந்த மாதிரியான அன்பின் உரையாடலோடு (தொகுப்பு 2) ஒத்த ஒன்றாகும். இந்த ஒவ்வொரு வார்த்தையின் பின்னாலும் இருப்பது அன்பென்னும் உந்துதலாகும். "உங்களுக்கு தெரிந்ததுபோல" என்று பவுலடியார் துவங்கும்போது பயிற்சியளிப்பதை அல்லது சீடராக்குவதை புறக்கணிக்கவில்லை என்பதை அவர்களிடம் நினைவுபடுத்துகிறார். சரியான பயிற்சியின்வாயிலாக விசுவாசிகளை தேவனுக்கேற்றவைகளில் ஊக்குவிப்பதென்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

தகப்பன்மார்களாகிய நாம் பின்தொடர்வதற்கான ஒரு முழுமையான பாத்திரம் அவர். நாம் நம்முடைய பிள்ளைகளை சீடத்துவம் வாயிலாகவும் சரியான ஒழுக்கத்தின்வாயிலாகவும் பயிற்சியளித்து, அவர்களை முதிர்ச்சிபெற வளர்த்தவேண்டும். பொறுப்புள்ள ஒரு தந்தை தேவன் தந்த பணியை புறக்கணிக்காமலோ அல்லது தனது மனைவியிடம் அப்பொறுப்பை ஒப்படைக்காமல் தலைவனாக தன்னுடைய பொறுப்பை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, சிறந்த ஒரு மேய்ப்பனாக குடும்பத்தின் பொறுப்பாளராக இருக்கவேண்டும்.

கொள்கை 4 உங்களுடைய வாழ்வில் எப்படி பொருந்துகின்றதென்று விவரிக்கவும்.

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

**கொள்கை 5: பொறுப்புள்ள தந்தை தனது வீட்டில் ஒரு ஆசிரியர்-மேலாளர்**

> பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக. (எபேசியர் 6:4)

ஒரு தகப்பன் தனது வீட்டை நிர்வகிப்பதற்கும் தனது பிள்ளைகளை பக்திமுதிர்ச்சிக்குநேராய் வளர்ப்பதற்கும் உள்ள நேரடி தொடர்பைக் குறித்து இந்த வசனத்தை இதற்கு முன்பதாக பார்த்தோம். தகப்பன் தன்னிடம் உள்ள செல்வாக்கைக்கொண்டு இரண்டு சாத்திய விளைவுகளை மேற்கோள் காண இவ்வசனம் உதவுகின்றது. முதலாவதாக, அந்த செல்வாக்கை அன்போடு பயன்படுத்துவதன் முக்கியத்துவம் அக்குழந்தையை கர்த்தரிடம் நெருங்கச் செய்வதாகும். தனது செல்வாக்கைக்கொண்டு தன்னுடைய பிள்ளைகளை கோபத்திற்கு நேராகவோ, பாவமான அல்லது அழிவுகரமான உணர்ச்சிப்பூர்வமான நடத்தைகளை நோக்கி செல்லவோ தூண்டக்கூடாது. இப்படிக்கூறுவதினால் தாய்மார்களுக்கு பிள்ளைகள்மீது செல்வாக்கு இல்லையென்றோ பயிற்சியின் ஒரு அங்கமாக அவர்கள் இல்லை என்றோ அர்த்தமல்ல. பிள்ளைகளை சீடராக, ஒழுங்கு கற்பிக்கும் எல்லா தருணங்களிலும் அவர்களுடைய ஈடுபாடு நிச்சயம் வேண்டும் ஆனால் முழு பொறுப்பு அவர்களுடையதல்ல. இரண்டாவதாக, "வளர்த்ததால்" என்றால் பிள்ளைகளுக்கு பயிற்சியளித்தல் நிச்சயமாக நடப்பது அவசியம்.

வீட்டில் ஒரு ஆணின் மேலாண்மையானது மேகிவும் இன்றியமையாதது ஏனென்றால் வேதாகமத்தில் நாம் காண்கின்றோம் திருச்சபையில் ஒரு மனிதன் தன்னை தலைமைத்துவத்துக்கு ஒப்புக்கொடுக்கும்முன் தனது வீட்டில் தனது தலைமைத்துவப்பொறுப்பை நிறைவேற்றுவதே முன்னுரிமைக்குரியதாகும். ஜனங்களுக்கு முன்மாதிரியான மனிதர்களை தேவன் தலைவர்களாக அழைக்கிறார். அப்படியென்றால் ஜனங்களுக்கு வேறு தரமும் தலைவர்களுக்கு வேறு தரமுமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று அல்ல. 1 கொரிந்தியர் 11:1 ல் பவுலடியார் கொரிந்தியர்களை " நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்." என்று கூறி ஊக்குவிக்கின்றார். போதகருக்கோ, ஊழியக்காரருக்கோ வீடானது ஒரு சிறிய சபை எனவே அதனை அவர் நன்கு மேய்க்கவேண்டும். 1 தீமோத்தேயு 3:1-13 வசனங்களில் போதகர்களுக்கும் உதவிக்காரர்களுக்குமான தகுதிகளை விவரிப்பதின் வாயிலாக தேவன் தனது சபை எப்படி செயல்பட விரும்புகின்றார் என்று பவுலடியார் தீமோத்தேயுவுக்கு வெளிப்படையான அறிவுறுத்தலைக் கொடுத்தார். ஒரு போதகரானவர்:

> தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். (1 தீமோத்தேயு 3:4)

**உண்மை கோப்பு**

ஆளுகிறவர் - நிர்வகித்தல், வழிநடத்துதல், வழிகாட்டுதல், கற்பித்தல், ஒருவருடைய அல்லது ஒன்றுடைய முன்னேற்றத்தில் ஈடுபடுதல்.

ஒரு போதகரோ அல்லது ஊழியக்காரரோ தனது குடும்பத்தை நன்கு பராமரித்து முதலாவதாக நல்ல ஒரு கணவனாக/ தகப்பனாக பங்காற்றவேண்டும் என்று தேவன் கூறுகின்றார். இது மிகவும் முக்கியம் அதனை 5வது வசனத்தில் பவுலடியார் இவ்வாறாக கூறினார்: "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" ஒரு தலைவன் சபையைவிட சிறியதாக உள்ள தனது குடும்பத்தை நன்கு வழிநடத்தும்பட்சத்தில் பின்னர் அவர் சபையை வழிநடத்தும் தகுதியை பூர்த்தி செய்கிறார். வேதாகமம் தெளிவாக போதிப்பதென்னவென்றால் ஒரு மனிதன் தனது வீட்டில் ஆவிக்குரிய தலைவனாக இல்லாத பட்சத்தில் சபை தலைமைத்துவத்துக்கு அவர் தகுதியில்லாதவர் என்று.

> தேவாலயத் தலைவர் தனது சொந்த குடும்பத்தைக் கட்டுப்படுத்துவதில் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று பவுலடியார் கோறுகின்றார். கீழ்ப்படிதலுக்காகவும் ஒழுக்கமுள்ள நேர்மையான நடத்தைக்காகவும் அறியப்பட்ட குழந்தைகளை வளர்க்க தெரிந்துகொள்ளப்பட்டார். நிர்வகிக்க என்ற வினைச்சொல் குடும்பத்தை ஆள, வழி நடத்த, திசை காட்ட என்ற கருத்துக்களை கொண்டமைகின்றது. அதே கிரேக்க வாக்கானது 1 தெசலோனிக்கேயர் 5:12ல் ("உங்களை விசாரணை செய்கின்றவர்கள்") என்றும் 1 தீமோத்தேயு 5:17ல் ("வழிநடத்தி") என்றும், 5ஆம் வசனத்தில் ("நிர்வகித்து") என்றும் தோன்றுகின்றது. இந்த வார்த்தை திறமையற்ற மற்றும் உணர்ச்சிமிக்க இரக்கத்தின் தன்மையால் வலுவூட்டப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும். 5ஆம் வசனத்தில் காணப்படும் "விசாரிப்பு" என்னும் வினைச்சொல் இறுதித் தீர்ப்பை வழங்குவதை விட கருணை காட்டுவதோடு தொடர்புடையது என தலைமையின் தரத்தை வரையறுக்கிறது.

போதகர்கள் மாத்திரமல்ல உதவியாளர்களும் தங்களுடைய வீட்டினை ஒழுங்காக நடத்துதல் வேண்டும். சபையின் அங்கத்தினர் பின்பற்றக்கூடிய மாதிரிகளை தலைவர்கள் அமைக்கவேண்டும், பிரத்யேகமாக குடும்ப மேம்பாட்டில் நிச்சயமாய் இருப்பதவசியம்.

> மேலும், உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும். (1 தீமோத்தேயு 3:12)

திடமான தேவபக்தியுள்ள குடும்பங்கலாய் இருப்பது என்னவொரு ஆசீர்வாதம். புருஷர்கள் வெற்றிக்கு தேவையான அனைத்து தகவல்களையும் வழங்கும் ஒரு சரியான ஆதாரமான வேதாகமத்தினை கொண்டு வழிநடத்திச் செல்லப்படுவதென்பது ஒரு சுய சான்றுமிக்க உண்மை. கர்த்தர் மிகவும் நல்லவர்.

கொள்கை 5 உங்களுடைய வாழ்வில் எப்படி பொருந்துகின்றதென்று விவரிக்கவும்.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

**சுய பரிசோதனை 3**
தகப்பன்மார்களே, மேல்கண்ட 5 கொள்கைகளிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

1.______________________________________________

2.______________________________________________

3.______________________________________________

4.______________________________________________

5.______________________________________________

6.______________________________________________

7.______________________________________________

8.______________________________________________

9.______________________________________________

10.______________________________________________

அப்பாக்களே, உங்கள் குடும்பம் - தேவன் நிறுவிய ஸ்தாபனத்தில் வழிநடத்தவும் ஊழியம் செய்யவும் நீங்கள் அழைக்கப்பட்டு அபிஷேகிக்கப்பட்டிருக்கிறீர்களா? உங்களுடைய இயலாமையிலிருந்தும் பெலவீனகங்களிலிருந்தும் விடுபெற்று, பெலத்தோடும் அதிகாரத்தோடும் அவர் உங்களுக்கு அருளின பணிகளை நிறைவேற்ற தேவனின் வாக்குதத்தங்களையம் (2 பேதுரு 1:1-4) அவருடைய கிருபையையும் (2 கொரிந்தியர் 12:9-10) உற்றுநோக்குங்கள்.

***செயல் திட்டம் 1***

தகப்பன்மார்களே, உங்களுடைய தற்போதைய பெற்றோர் பணியானது வேதாகம பாணியிலிருந்து வேறுபடுகின்றதா, அப்படியெனில் என்னென்ன மாற்றங்கள் செய்ய விரும்புகிறீர்கள்?

______________________________________________

______________________________________________

______________________________________________

இக்கொள்கைகளை ஒவ்வொருநாளும் ஜெபத்தின் வாயிலாக உங்களுடைய வாழ்வில் கிரியை செய்ய தேவனிடம் மன்றாடுங்கள்.

**பாகம் 2: தாயின் பங்கும் பொறுப்பும்**

தாய்மார்களே, உங்களுடைய கணவனுக்கு நீங்கள் உதவியாளர் என்ற ஸ்தானத்தை அறிவதோடுமாத்திரமல்லாமல், உங்களுடைய பிள்ளைகளுடனான உறவில் வழிகாட்டிட முக்கிய வேதாகம கோட்பாடுகள் உதவும். நீங்கள்தான் பராமரிக்கும் செல்வாக்குடையவர்கள். 1 தெசலோனிக்கேயர் 2:7-8 வசங்களுக்கு நேராய் நமது கவனத்தை திருப்புவோமானால், தெசலோனிக்கேயாவிலுள்ள விசுவாசிகளுடனான தன்னுடைய நடத்தையை பவுலடியார், தாய்ப்பாசத்தோடு ஒப்பிடுகிறார். இவ்வேதாகம கோட்பாடுகளனைத்தும் எல்லா

கிறிஸ்தவர்களுக்கு பொருந்தினாலும் தாய்மார்களுக்கு இவை திடமான உண்மைகளாக விளங்குகின்றன.

**கொள்கை 1: அக்கறையுடைய தாய் தன்னுடைய பிள்ளைகளை மென்மையோடு பாவிக்கிறார்**

> உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல, (1 தெசலோனிக்கேயர் 2:7)

| **உண்மை கோப்பு** |
|---|
| சாந்தம் - மென்மையான – சமாதானமான, இசையக்கூடிய.. |

அப்போஸ்தலர் பவுலைக்குறித்தும் அவருடைய சக ஊழியர்களைக்குறித்துமான மிகப்பெரிய ஒரு கூற்றாகும், ஏனென்றால் தலைவர்களான அவர்கள் அதிகாரத்தை தவறாமல் பிரயோகப்படுத்தினார்கள். ஆனால் அவர்களுடைய நோக்கம் சுயநலமற்றதாயிருந்தது, மற்றவர்களுடைய நன்மைக்காக சிலவற்றை மேற்கொண்டார்கள். வேதாகமம் இவ்வாறாக கூறுகின்றது, அவர்கள், அவர்கள் மத்தியில் இருந்தார்கள், மென்மையான மற்றும் கனிவான ஆவியோடு அவர்களுக்கு ஊழியம் செய்தார்கள். பிரபல எழுத்தாளரும் அறிஞருமான ஜான் மெக்கார்தர்:

> மென்மை என்ற வார்த்தை இவ்வசனத்தின் மையமாய் இருக்கின்றது கூறுகின்றார். அதன் பொருள் என்னவென்றால், ஒருவரோடு கனிவு காண்பிப்பது அதோடு, மற்ற நல்லொழுக்கங்களாகிய ஏற்றுக் கொள்ளுதல், மரியாதை, இரக்கம், குறைபாடுகளின் சகிப்புத்தன்மை, பொறுமை, கனிவான மனம் மற்றும் விசுவாசம் ஆகியவற்றின் தொகுப்பாகும்.

மேன்மையைக்குறித்து என்னவொரு சித்திரம். அவர்கள் மத்தியில் பவுலடியார் எப்படி நடந்துகொண்டார் என்பதைக் குறித்து கவனம் செலுத்துகின்றது. அவர் இப்படியாக நடந்து கொண்டார்: "தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாக" (1 தெசலோனிக்கேயர் 2:4). அவருடைய முழு முயற்சியும் தேவனை பிரியப்படுத்துவதிலேயே இருந்தது. சில பெண்கள் மேன்மை சுபாவமுள்ளவர்கள், மற்றவர்களோ கடுமையான நடத்தை யுள்ளவர்களாயுள்ளார்கள். ஆனால், உங்கள் பிள்ளைகளிடம் நீங்கள் மென்மையாக நடந்து கொள்ளுகிறீர்களா என்று தேவன் உங்களை சோதிப்பது நிச்சயமாயிருப்பதினால், உங்களுடைய தவறுகளை நீங்கள் கண்டறியும்பொழுது நீங்கள் அவற்றை அறிக்கை செய்து, மனந்திரும்பி மாற்றப்படவேண்டும். ஒரு கனிவான தாய் கட்டுப்பாட்டை இழக்காமல், கோபப்படாமல், சத்தத்தை உயர்த்திப்பேசாமல், நியாயம் தீர்க்காமல், தவறான கையாடல்களை கையாள்வதில் என்று சரியாகத்தான் சொல்லியுள்ளார்கள்.

இந்த வசனத்தில் இருந்தோம் என்ற வார்த்தை, "நாங்கள் மென்மையாய் இருந்தோம்" எபிரேய வார்த்தையிலிருந்து தோன்றி, மாற்றத்தை, நிலையை, ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறியதை, ஆகுவதற்கு என்ற பொருள்களை கொண்டதாகும். இது ஒரு முழுமையாக்குதல் செயல்முறை, பரிசுத்த ஆவிக்கு தினமும் கீழ்ப்படிவதை தீர்மானிப்பதன் மூலம், அழைத்தவைகளையெல்லாம் செய்ய தேவன் உங்களை ஏற்படுத்துவார்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கீழ்காணும் இவ்வசனங்கள் மேன்மையைக்குறித்து என்னவெல்லாம் விவரிக்கின்றன வென்றும் உங்களுடைய பெற்றோர் பணியில் எப்படி பொருந்தும் என்று விவரிக்கவும்.

> மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும். (நீதிமொழிகள் 15:1)

> தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான். (2 தீமோத்தேயு 2:4)

> பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. (யாக்கோபு 3:17)

கொள்கை 1 உங்களுடைய வாழ்வில் எப்படி பொருந்துகின்றதென்று விவரிக்கவும்.

**கொள்கை 2: அக்கறையுள்ள தாய் தன் குழந்தைகளை வளர்க்கிறார்.**

> உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல, (1 தெசலோனிக்கேயர் 2:7)

**உண்மை கோப்பு**

செவிலி – செவிலி என்பவர், பாலூட்டுதல், போஷித்தல், பயிற்சி செய்தல்; ஊட்டமளிக்கும், ஊட்டமளிக்கும் ஒன்று; கல்வி கற்பது அல்லது வளர்ப்பது, சிலவற்றின் வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவது.

ஒரு தாய் தனது குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் சித்திரத்தை காண்கிறோம். தாய்க்கும் குழந்தைக்கும் இது ஊட்டச்சத்து, அன்பு, கவனம் செலுத்தும் பகுதியென்பது தெரியும், தேவன் அவ்வாறாகவே இவ்வுறவினை வடிவமைத்திருக்கிறார். அன்பான கரிசனைகொண்ட தாய் குழந்தைக்கு கொடுப்பதில் கவனம்செலுத்தினாலும், வளரும் தருணத்தில், இவ்வாறான தியாகமும் நெருக்கமாகவோ மந்தமாகவோ வாய்ப்புள்ளது.

தேவன், பவுலடியாரின் பராமரிப்பின்கீழ் கொடுத்தவர்களிடம் அவருடைய நடவடிக்கைகளை நினைவுக்கு கொண்டுவருகிறார். அவர்களுக்கு நேராய் தனது உள்ளம் உண்மையுள்ளதாய் மேன்மையுள்ளதாய் ஒரு பாலூட்டும் தாயைப்போல இருந்ததாக வெளிப்படுத்துகின்றார். தாயின் அன்பைக்குறித்து பவுலடியார் பல உதாரணங்களை உபயோகிக்கின்றனர். கலாத்தியார் 4:19ல் "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்." 1 கொரிந்தியர் 4:14ல் "உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்." அவர் கிறிஸ்துவை பின்பற்றுவதுபோல, அவரை பின்பற்ற விசுவாசிகளிடம் அறிவுறுத்தினார்.

கருவில் உற்பவிப்பதுமுதல், குழந்தையின் வாழ்வு முழுவதும் வளர்க்க அழைக்கப்படுகிறார். குழந்தை முதிர்வடையும்போது முறைகள் மாறலாம், ஒரு தாயின் உள்ளம் எப்பொழுதுமே வளர்ப்பதிலேயே கவனமிருக்க வேண்டும். சொல்லினாலும் செயலினாலும் ஒரு தாயின் பொறுப்பு தனது பிள்ளைகளிடம் அன்போடும் அரவணைப்போடும் நடந்துகொள்ளுவதே. ஊக்குவிக்கும் ஒரு தாய் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்துவதில்லை, புறக்கணிப்பதில்லை, புறம்பே தள்ளிவிடுவதில்லை அல்லது அவர்களிடமிருந்து பாசத்தைத் தடுத்துநிறுத்துவதில்லை. மன விளையாட்டுக்களையோ அல்லது பாவத்தை கையாளுதலிலோ தன்னை ஈடுபடுத்திக்கொள்ளுவதில்லை.

நினைவில் கொள்ளுங்கள், அன்பென்பது, உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளை நிரூபிக்க மட்டுமல்லாமல், மிகவும் சக்திவாய்ந்த உந்துதல். சுயநலமற்ற அன்பானது இயேசுகிறிஸ்துவினோடு உள்ள உறவோடு மாத்திரமே சாத்தியம், அவரோடு நிலைத்திருப்பதன் மூலம். தேவனுடைய வார்த்தையை தெரிந்துகொள்வதும் அவரிடம் ஞானத்திற்காகவும் பெலத்திற்காகவும் ஜெபிப்பதும் அடங்கும். பாலூட்டும் குழந்தையை நேசிக்கும் குழந்தையைப்போல ஒன்றுமே எதிர்பாராமல் தொடர்ச்சியாக கொடுக்க அவர் பெலனளிப்பார். ஒரு எழுத்தாளர் இவ்வாறாக கூறுகிறதை கவனியுங்கள்:

> ஒரு பாலூட்டும் தாய் தனக்கென்று உணவளிக்காதபொழுது, தனது குழந்தைக்கு பாலூட்டமுடியாது. சிலவகையான உங்கவுகளை உண்ணுவதினாலே குழந்தையுடைய உடல்நலக்குறைவேற்படும். அதுபோலவே, ஒரு கிறிஸ்தவ பெற்றோரின் ஆவிக்குரிய உணவு ஒரு புதிய கிறிஸ்தவருக்கு மிகவும் முக்கியம். இவ்விளக்கத்தின்மூலமாக ஆவிக்குரிய தந்தையான பவுலடியாரின் மென்மையும் சுயநலமின்மையும் ஒளிர்கின்றது.

**சுய பரிசோதனை 4**

கிறிஸ்துவுடனான உங்கள் நிலையான உறவில் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

________________________________________

________________________________________

________________________________________

கொள்கை 2 உங்களுடைய வாழ்வில் எப்படி பொருந்துகின்றதென்று விவரிக்கவும்.

________________________________________

________________________________________

________________________________________

**கொள்கை 3: அக்கறையுள்ள தாய் தன் குழந்தைகளை நேசிக்கிறார், அல்லது மென்மையாகக் கவனித்துக்கொள்கிறார்.**

> பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல (1 தெசலோனிக்கேயர் 2:7)

**உண்மை கோப்பு**

காப்பாற்றுதல் - ("மென்மையான கவனிப்பு") - கவனம் செலுத்த, கவனம் செலுத்த, ஊழியம், வெப்பத்தால் மென்மையாக்க, பறவைகள் தங்கள் குஞ்சுகளை இறகுகளால் மூடுவது போல சூடாக வைத்திருக்க. (உபா.22:6) மென்மையான அன்புடன் போற்றுதல், மென்மையான கவனிப்புடன் வளர்ப்பது

தளாப் *thalop* என்னும் கிரேக்க வார்த்தையை பவுலடியார் பயன்படுத்துகிறார், காப்பாற்றுகிறார் என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. "தன் பிள்ளைகளை" என்ற வார்த்தைகளை சிறப்புக் குறிப்பெடுக்கவும். விசுவாசிகளை தேவனுடைய ராஜ்யத்திற்கு அவருடைய போதனையின் மூலம் கொண்டுவருவது மாத்திரமல்லாமல் அவர்களை பவுலடியாருடைய ஆவிக்குரிய குழந்தைகளாக பாவிக்க பொறுப்பளித்திருந்தார். அந்தப் பொறுப்பையும் அக்கறையையும் பெரிய ஒரு காரியம் அதனாலேயே அப்பொறுப்பை தாய்மையோடு ஒப்பிட்டார். "தனது சொந்த குழந்தைகளை நேசிக்கிறார்" என்ற சொற்றொடர், அவ்வாறு கருத முடியாத குழந்தைகள் மீது பாதுகாப்பு, மென்மையான கவனிப்பு பற்றிய எண்ணங்களைத் தூண்டுகிறது. மென்மையான அக்கறை தொடர்ச்சியான செயலைக் குறிக்கிறது. அது உண்மை அல்லவா? ஒரு அம்மாவின் வேலை ஒருபோதும் தனது குழந்தைகளுக்குப் போற்றிப் பராமரிக்காமல் நிறைவேறாது.

ஒரு கிறிஸ்தவத் தாய் தன் மனதை மென்மையாக வைத்திருப்பார், அது எப்போதும் எளிதல்ல. ஏனெனில் இத்தகைய அன்பு பாதிப்பை தருகிறது, குழந்தைகளின் புறக்கணிப்பு, நிராகரிப்பு அல்லது கலகத்தின் ஏமாற்றங்களிலிருந்து தாய் கடினமாக்கப்படவோ அல்லது கடினமானவர்களாக மாற தூண்டப்படலாம். விரக்தி, சோர்வு மற்றும் கவலை ஆகியவை தாயின் மனநிலையை பாதிக்கும் பிற அழுத்தங்களாகும். வலிமையுடன் இருக்க, ஒரு தாய் தொடர்ந்து கீழ்ப்படிந்து, தன் இதயத்தைக் காக்கும்படி பரிசுத்த ஆவியைக் கேட்க வேண்டும் (எபேசியர் 4:30; 5:18). ஒரு மென்மையான தாய் தன் குழந்தைகளை மன்னித்து, அவள் தவறு செய்யும்போது அவர்களிடம் மன்னிப்பு கேட்கிறார் (மத்தேயு 6:12, 14-15).

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கீழ்காணும் வசனங்கள் உங்களை எப்படி இன்னும் ஒரு சிறந்த தாயாக இருக்க உதவும்.

> ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (எபேசியர் 4:32)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

> ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மை யானவர்களாக எண்ணக்கடவீர்கள். (பிலிப்பியர் 2:3)

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

கொள்கை 3 உங்களுடைய வாழ்வில் எப்படி பொருந்துகின்றதென்று விவரிக்கவும்.

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

**கொள்கை 4: அக்கறையுள்ள தாய் தன் குழந்தைகளுக்காக பாசத்துடன் ஏங்குகிறார்.**

> நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம். (1 தெசலோனிக்கேயர் 2:8)

"பாசத்துடன் ஏங்குகிறார்" என்பது உடல் தொடர்பு மற்றும் தயவின் செயல்கள் மூலம் வெளிப்படுத்தபடும் அன்பு. உண்மையிலேயே அன்பான தாய் தன் குழந்தைகளை அரவணைப்புகள், முத்தங்கள், ஊக்குவிக்கும் வார்த்தைகள் மற்றும் பாசத்தின் பிற தொடர்புகளால் உறுதிப்படுத்த வேண்டும் என்பதை மிகைப்படுத்த முடியாது. ஒரு பாசமுள்ள தாய் தன் குழந்தைகளை தனித்தனியாக அறிவார் மற்றும் ஒவ்வொரு குழந்தையையும் எப்படி சிறப்பான குழந்தையாக உணர வைக்கிறார் என்று படிக்கின்றார். ஏக்கம் என்பது அவர்களை தொடர்ந்து உங்கள் எண்ணங்களில் வைத்திருப்பதையும், அவர்களின் தோழமையை விரும்புவதையும், உங்கள் அன்பை நினைவூட்டுவதற்கு ஆக்கப்பூர்வமாக இருப்பதையும், ஒருவேளை பலகாரம் செய்வதின் மூலமோ, மதிய உணவில் குறிப்புகளை விட்டுவிடுவதன் மூலமோ அல்லது ஒவ்வொரு குழந்தையுடனும் தனித்தனியாகச் செயல்படுவதன் மூலம் நேரம் ஒதுக்குவதைக் குறிக்கிறது.

**உண்மை கோப்பு**

பாசத்துடன் ஏங்குகிறார் - இந்த கிரேக்க வார்த்தை, அன்பு கலந்த பாசம் என்று மொழி பெயர்க்கப்பட்டு (ஹீமோய்ரோமாய்; *homeiromai* புதிய ஏற்பாட்டில் உபயோகிக்கப் பட்டுள்ளது) ஆர்வத்துடன் மற்றும் தீவிரமாக ஒருவருக்காக ஏங்க என்று பொருள். தாயின் அன்போடு இணைக்கப்பட்டது, மீறமுடியாத அளவுக்கு ஆழமான மற்றும் கட்டாயமான ஒரு பாசத்தை வெளிப்படுத்த இங்கு நோக்கமாக உள்ளது.இறந்த குழந்தைகளின் கல்லறைகளில் உள்ள பண்டைய கல்வெட்டுகள் சில நேரங்களில் பெற்றோர்கள் மிக விரைவில் பிரிந்த குழந்தைக்கு தங்கள் சோகமான விருப்பத்தை விவரிக்க விரும்பும் போது இந்த வார்த்தையைக் கொண்டுள்ளன.

*செயல் திட்டம் 2*

உங்கள் குழந்தைகள் மீது பாசமாக இருக்க உங்களைத் தடுக்கும் எந்தவிதமான தடைகளையும் உங்களுக்கு வெளிப்படுத்த தேவனிடம் கேளுங்கள். நீங்கள் பாசம் காட்டும் சிலவற்றையும் காண்பிக்கக்கூடிய சிலவற்றையும் பட்டியலிடுக.

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கீழ்காணும் வசனம் உங்கள் குழந்தைகளுக்கான புதிய அணுகுமுறைகள் அல்லது செயல்களை செய்ய எப்படி ஊக்குவிக்கின்றது.

> சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். (ரோமர் 12:10)

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

கொள்கை 4 உங்களுடைய வாழ்வில் எப்படி பொருந்துகின்றதென்று விவரிக்கவும்.

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

**கொள்கை 5: அக்கறையுள்ள தாய் தன் குழந்தைகளுக்கு சிறந்ததைச் செய்ய தன்னையே கொடுக்கிறார்.**

> நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம். (1 தெசலோனிக்கேயர் 2:8)

**உண்மை கோப்பு**

வழங்க - இந்த வினைச்சொல் எதையாவது பகிரும் எண்ணத்தைக் கொண்டுள்ளது, இது ஏற்கனவே ஒரு பகுதியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

பவுலடியாரும் அவரது தோழர்களும் தெசலோனிகேயாவில் துன்புறுத்தப்பட்டது மட்டுமல்லாமல், அவர்கள் கிறிஸ்துவுக்காக தங்கள் உயிரையும் கொடுத்தனர்.இந்தச் சூழலில், "தெசலோனிக்கேயரின் பொருட்டு அவர்கள் தங்கள் ஆன்மாக்களை - தங்கள் உண்மையான உள்ளங்களை - விட்டுவிடுகிறார்கள். தாய்மைக்காக வேதாகம பாத்திரத்தை நிறைவேற்றும் ஒரு பெண், தன் அன்புக்குரிய குழந்தைகளின் நலனுக்காக தன் வாழ்க்கையை சுயநலமின்றி தாராளமாக ஒதுக்கும் போது பவுலடியார் தெசலோனிக்கேயருக்கு செய்தது போலவே அதையே செய்கிறார். ஒரு தெய்வ பக்தியுள்ள தாய் தன் குழந்தைகளின் அன்பையும் பயிற்சியையும் சுயநலத்திற்கு முன்னால் வைப்பதே தனது முன்னுரிமை என்பதை புரிந்துகொள்கிறார். அவர் தன் குழந்தைகளின் தவறுகள், தோல்விகள் மற்றும் பாவங்கள் இருந்தபோதிலும், தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட அன்புடன் அவர்களை நேசிக்கிறார்.

**கொள்கை 5 உங்களுடைய வாழ்க்கைக்கு எப்படி பொருந்துகின்றதென்று விவரிக்கவும்.**

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

**சுய பரிசோதனை 5**

தாய்மார்களே, இவ்வைந்து கொள்கைகளிலிருந்து என்ன கற்றுக்கொண்டிருக்கின்றீர்கள்?

1.____________________________________________________________________________

2.____________________________________________________________________________

3.____________________________________________________________________________

4.____________________________________________________________________________

5.____________________________________________________________________________

6.____________________________________________________________________________

7.____________________________________________________________________________

8.____________________________________________________________________________

9.____________________________________________________________________________

10.___________________________________________________________________________

***செயல் திட்டம் 3***

தாய்மார்களே, உங்களுடைய தற்போதைய பெற்றோர் பாணியானது வேதாகம பாணியிலிருந்து வேறுபடுகின்றதா, அப்படியெனில் என்னென்ன மாற்றங்கள் செய்ய விரும்புகிறீர்கள்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இக்கொள்கைகளை ஒவ்வொருநாளும் ஜெபத்தின் வாயிலாக உங்களுடைய வாழ்வில் கிரியை செய்ய தேவனிடம் மன்றாடுங்கள்.

**பாடம் 6**

**வேதாகம சாத்தியத்தை கற்பித்தல்**

கிறிஸ்துவில் ஒரு வலுவான அடித்தளத்தை உருவாக்கவும், தேவனின் மேலாண்மை பாணியில் வேலை செய்யும் போது குழந்தைகளை சரியாக நேசிக்கவும் கற்றுக்கொண்டதால், நாம் நம் குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்க தயாராக இருக்கிறோம். நல்ல குழந்தைகளை வளர்ப்பது ஒழுக்கத்தினாலேயே அமையும் என்று பலரும் நம்புகின்றனர், ஆனால் அவர்களை முதிர்ச்சிக்குநேராய் கொண்டுசெல்வதற்கு இரண்டு செயல்முறைகள் அவசியம் தேவை என்பதை புரிந்துகொள்ள வேண்டும். முதலாவது சீடராக்குவது (ஆவிக்குரிய அறிவுறுத்தல்), மற்றொன்று ஒழுங்குபடுத்தல் (நல்ல பாத்திரத்தன்மைகளை புகுத்துதல்).

**சீடத்துவத்துக்கு முன்னுரை**

நம்முடைய குழந்தைகளுக்கு ஆவிக்குரிய அறிவுறுத்தல் அளித்தால் சீடராக்குதல். உங்களுடைய குழந்தைகளை கிறிஸ்துவுக்கு நேராய் வழிநடத்துவதென்பது மிகப்பெரிய ஆசீர்வாதம், அதேபோல ஆவிக்குரிய சத்தியத்தை கற்பித்தலுமே ஒரு இன்றியமையாத பொறுப்பு. அன்பாக தேவனை குழந்தைக்கு அறிமுகம்செய்வதென்பதற்கோ அவர்களோடு தேவன் ஒரு உறவை கட்டமைக்க விரும்புகிறார் என்றும் அவர்களிடம் கூற துவக்க நேரம் என்று எதுவும் கிடையாது. ஒரு குழந்தை கற்றுக்கொள்ள மிகவும் இளமையாக இருக்கிறது அல்லது இந்த பயிற்சி ஓய்வுநாள் பள்ளியில் செய்யப்பட வேண்டும் என்று பெற்றோர் தவறான கண்ணோட்டத்தையுடையவர்களாக இருக்கலாம். அவருடைய திருச்சபைக்காகவும், நம்முடைய குழந்தைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பங்களிப்பவர்களுக்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம், ஆனால் குழந்தைகளை சீடராக்கும் முக்கிய பொறுப்பு பெற்றோருக்கானது. இப்பகுதியில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் ஒரு குழந்தையை கிறிஸ்த்துவுக்கென்று வழிநடத்துதல் என்ற பின் இணைப்பு K வை பார்க்கவும்.

மற்ற கிறிஸ்தவர்களைக் சீடராக்குவது ஒரு விருப்பப் பொறுப்பு அல்ல, தேவனிடமிருந்து கிடைத்த அழைப்பு என்பதை அனைத்து கிறிஸ்தவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். அவருடைய உயிர்த்தெழுதலும் பிறகு, இயேசு அவருடைய சீடர்களுக்கு தரிசனமானார். பரத்திலிருக்கும் அவருடைய பிதாவிடம் செல்ல புறப்படும்போது, அவர் அவர்களுக்கு நாம் அழைக்கும் மிகப்பெரிய வேலை எனும் ஒரு கட்டளையை வழங்கினார். இயேசுவின் அறிவுறுத்தல் அன்றைய சீடர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து விசுவாசிகளுக்கும் உபதேசிக்கப்படுவதேயாகும். இது நமக்கு தெரியும் ஏனென்றால் அவருடைய கட்டளை என்னவென்றால் "அனைவரையும் சீடர்களாக்குங்கள்" என்பதே. பின்வரும் இந்த வேதப்பகுதி உங்களிடம் அனைவரையும் சீடராக்க பிரத்யேகமாக உங்களுடைய பிள்ளைகளை சீடராக்க உங்களுக்கு வேட்கையை அளிக்கட்டும்:

> ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். (மத்தேயு 28:19-20)

இவவசனத்தின் அசல் மொழி கிரேக்கமாகும், மிகவும் திட்டமாக உள்ளது. "சீடர்களாக்குங்கள்" என்பது முக்கிய கட்டளை, அந்த வசனத்தின் மற்ற வாக்குகளெல்லாம் ஆக்குங்கள் என்ற வினைச்சொல்லிற்கு ஊக்கமளிக்கின்றது. இயேசுவின் கட்டளையின் வலியுறுத்தல்

"சீடராக்குவதே', அப்படியென்றால் "சீடராக்குவதும் தொடர்ந்து அப்பணியை செய்வதுமே" ஆகும். சீடத்துவத்தைக்குறித்து வேண்டிய ஒன்றாக நாம் கருத்தில்கொள்ள வேண்டும். அனைத்து விசுவாசிகளுக்கும் இது ஒரு தொடர்ச்சியான ஒழுக்கமாக இருக்க வேண்டும், அதில் நம் குழந்தைகளையும் சீடராக்குவதும் அடங்கும். இந்த தரிசனத்தை மேற்கொள்ள நாம் மூன்று காரியங்களை புரிந்துகொள்ள வேண்டும்.

**முதலாவது, சீடன் என்றால் என்ன?**

ஒருவரை சீடனாக்க, நாம் முதலில் வேதாகம விளக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். கிரேக்க செம்மொழியில், மத்தேட்டஸ் *Mathetes* (சீடன்) என்பது நாம் இன்றைய காலத்தில் புரிந்துகொள்ளும் "ஒரு பயிற்ச்சியாளர்," என்று பொருள், ஒருவரை தனது ஆசிரியரிடமிருந்து உண்மைகளை மாத்திரமல்லாமல், அவருடைய அணுகுமுறைகளையும், தத்துவங்களையும் கற்க வேண்டும். இதனடிப்படையில் Mathetes என்னும் சொல்லை நாம் "மாணவர்-துணைவன்" என்று புரிந்துகொள்ளலாம், வகுப்பறையில் பாடங்களை கற்பதில் கவனம் செலுத்துவது மாத்திரமல்லாமல், ஆசிரியரை பின்தொடர்ந்து வாழ்க்கையையும், உண்மைகளையும் கற்கிறார், காலப்போக்கில் ஆசிரியரின் பாத்திரத்தை தரித்துக்கொள்கின்றார்.

> **உண்மை கோப்பு**
>
> சீடன் (பெயர்ச்சொல்) - மெத்தேட்ஸ் *Mathetes* (கிரேக்கம்). ஒரு மாணவன், கற்பவர், புதிய ஏற்பாட்டிலோ இதன் பொருள் இவற்றைவிட மேலானது. அவருக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை ஒப்புக்கொண்டு அதன்படி நடந்து, நடத்தையின் விதியாக மாற்றுபவர்.

நமது வீடுகளோ, அல்லது நாம் எவ்விடங்களுக்கு நமது குழந்தைகளுடன் செல்கின்றோமோ அவ்விடங்களில் எல்லாம் அவர்களை கிறிஸ்துவின் சீடராக வகுப்பறைகளாகலாம். அவ்விடங்களில் அவர்கள் உண்மையான கிறிஸ்தவ நடத்தை, அணுகுமுறைகள் மற்றும் தத்துவங்களைக் கற்கின்றனர். "பல விஷயங்கள் கற்பதைவிட பிடித்துக்கொள்வதே" என்பது போல, உங்களுடைய குழந்தைகள் உங்களை கவனித்து, நீங்கள் சொல்வதை உள்வாங்கி, உங்களைப் போன்றே அவர்களும் பிரதிபலித்துக்காண்பிப்பார்கள்.

நாம் சுவிசேஷங்களை வாசிக்கும்பொழுது, கிறிஸ்து தனது பன்னிரு சீடர்களை எப்படி வழிநடத்தினாரென்பதை பார்க்கின்றோம். அவர்கள் அவரோடு மூன்று வருடம் செலவழித்து அவரிடம், கற்று, கவனித்து, கேள்விகள் கேட்டு, அவருடைய போதனைகளை கேட்டு, அவரை பின்பற்றவும் (தங்களுடைய நடை, உடைய, பாவனைகள் மூலம்) செய்தார்கள். சீடர்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள், அவர் எங்கெல்லாம் சென்றாரோ அவ்விடடங்கலெல்லாம் அவர்களுடைய வகுப்பறை. ஒரு வாழ்க்கை பாடத்திலிருந்து மற்றொன்றுக்கு போகும்பொழுதெல்லாம், அவர் தன பயணத்தை நிறுத்தி அவர்களுக்கு விளக்கமளித்தார் (மாற்கு 4:34) அல்லது சந்தேகங்களை தீர்த்தார் (மாற்கு 8: 15-21), அவர்கள் விசுவாசமற்றவர்களாய் காணப்பட்டபோது, அவர்களை கடிந்துகொண்டார் (மாற்கு 9: 19-29). இயேசுவின் பொது ஊழியத்தின்போது, அவர்களை அணுகியவர்களிடமெலாம் அவர் பதிலளித்தபோது, அவர் தொடர்ந்து சொன்னது, "என்னை பின்பற்றி, என்னிடம் கற்று என் சீடர்களாயிருங்கள்" என்றே.

உங்களுடைய சொல்லாலும் செயலாலும் உங்களுடைய குழந்தைகள் இயேசுவின் சீடர்களாக உங்களிடமிருந்து கற்கலாம். அவர்கள் அந்நியமான காரியங்களிலும், உலக இச்சைகளிலும், நடக்கையில் சீடர்களாக கற்க முடியும். நல்லதோ, தீயதோ, அவர்கள் உங்களுடைய முன்மாதிரியையே பின்பற்றுவார்கள்.

**சுய பரிசோதனை 1**

கணவனாக/ தகப்பனாக, துணைவியாக/ தாயாக, உங்கள் குடும்பம் என்னும் வகுப்பறையை எப்படி எண்ணுகின்றீர்கள்? தீய பழக்கங்களோ, நடக்கைகளோ நிறுத்துவது தேவைப்படுகின்றதா? அப்படியல்ல தருணத்தில், நீங்கள் மாறவேண்டுகிறீர்கள் என்ற உறுதியுடன், கர்த்தருக்கு ஒரு அறிக்கை கடித்தை எழுதவும்.

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

**இரண்டாவது, எப்படி "சீடர்களாக்குவது"?**

> **உண்மை கோப்பு**
>
> சீடராக்குங்கள் (வினைச்சொல்) - Matheteuo (கிரேக்கம்). ஒருவரை சீடராக்குதல் (மத்தேயு 28:19); அப்போஸ்தலர் 14:21); அறிவுறுத்த (மத்தேயு 13:52) சீடராக நோக்கத்தோடு.

சீடத்துவத்தைக் குறித்து விளக்கம் புரிந்த இத்தருணத்தில், இதனை கருத்தில் கொண்டு எப்படி சீடர்களாக்குவது? கிறிஸ்துவின் மாதிரியை நாம் பின்பற்ற வேண்டும். என்ன செய்ய வேண்டுமென்பதை அவரே நமக்கு வாக்களித்துள்ளனர். இயேசுவின் ஆணையான "சீடர்களாக்குங்கள்" என்பதும் :விடாமுயற்சியுடன் அவர்களுக்கு கற்பித்தல்" (உபாகமம் 6:7), எல்லாருக்குமான அறிவுரையென்னும், நம்முடைய தேவைக்காக நாம் பெற்றோராயிருப்பதில் மாத்திரம் கவனம் செலுத்துகின்றோம். தங்களுடைய பிள்ளைகளுக்கு மற்றவர்களைவிட பெற்றோருக்கே செல்வாக்கு அதிகம். நன்றியுள்ளவிதமாக, நம்முடைய பிள்ளைகளை சரியான திசையில் வழிநடத்த தேவன் போதுமான அளவு தகவல்களை வழங்கியுள்ளார்.

சீடராக்குங்கள் என்பது மதம்மாற்றுங்கள் என்றல்ல, ஆகிலும் அவ்வாறே அதனை புரிந்துகொள்ளவேண்டும். சீடராகுங்கள் என்பது மிக அழுத்தமாக ஒருவருடைய மனம், இருதயம் மற்றும் சித்தம் ஆகியவை தேவனுக்காக வெல்லுவதில் முக்கியத்துவம் செலுத்துவதாகும். புதிய விசுவாசிகளை இயேசுவை பின்பற்றவும், இயேசுவினுடைய இறையாண்மைக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய பணியை இரக்கமுள்ள சேவையாக எடுக்கும்பொழுது அது சாத்தியம். எப்படியெனில், மக்களை இயேசுவோடு உறவாட அழைத்து (ஆசிரியர் மாணாக்கரைப்போல) அவருடைய அறிவுறுத்தல்களை கட்டளையாக ஏற்க அவர்களை ஒன்றுபடுத்தும் (மத்தேயு 11:29), அவருடைய வார்த்தைகளை உண்மை என்று ஏற்றுக்கொள்ளவும், அவருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து சரி என்று எண்ணச்செய்வது இவைகளேயாகும்.

இந்த வரையறை கிறிஸ்து தனது சீடர்களிடம் பின்பற்ற நோக்கத்தையும் செயல்முறையையும் விளக்குகின்றது. இதை தியானித்து, பின் வரும் கேள்விக்கு பதிலளியுங்கள். இப்பாடத்தைக் குறித்து பெரும்பாலான மக்கள் எந்தவிதமான சிந்தனையும் இல்லாதவர்களாயிருக்கின்றனர். எனவே பெற்றோராயிருப்பதின் ஒரு முன்னுரிமையாக இது காணப்படவில்லை. உண்மையென்னவென்றால், பெரும்பாலான தகப்பன்மார்களோ தாய்மார்களோ அவர்களுடைய பெற்றோர் இவ்விதமாய் சீடர்களாக்க தவறியதினால் முன்மாதிரியில்லாத

நிலை காணப்படுகின்றது, கிறிஸ்தவ குடும்பங்களில் வளர்க்கப்பட்டவர்களும் இதில் உட்படுவர்.

**சுய பரிசோதனை 2**

சீடராக்குவதற்கான அத்தியாவசிய காரியங்கள் எவை என்பதை விவரிக்கவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

பவுலடியார் பிலிப்பு பட்டணத்து விசுவாசிகளை எப்படி உற்சாகப்படுத்தினார் என்பதனை கவனியுங்கள். தம்முடைய பிள்ளைகளை சீடர்களாக்க என்னென்ன முக்கிய கொள்கைகள் கீழுள்ள வசனத்தில் உள்ளன?

> நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார். (பிலிப்பியர் 4:9)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**மூன்றாவது, சீடராக்குதல் (சீடத்துவம்) என்றால் என்ன?**

**உண்மை கோப்பு**

சீடராக்குதல் அல்லது சீடத்துவம் - சீடராக்குதல் என்பது வேண்டுமென்ற ஒரு உறவு, அதில் கிறிஸ்துவில் முதிர்ச்சியை நோக்கி வளர, ஒருவருக் கொருவர் ஊக்குவிக்கவும், சித்தப்படுத்தி சவாலாக ஏற்றுக்கொண்டு அன்புகாட்டுவதும் ஆகும். இதில் சீடர்களை மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்க சித்தப்படுத்துவதுமேயாகும்.

"சீடராக்குவது" என்பது மற்றொரு நபரை கிறிஸ்துவை பின்பற்ற உதவுவது. இதை செய்வதற்கு, கிறிஸ்துவின் கட்டளைக்கு நாம் கீழ்ப்படியும் சீடராக்குதல் (சீடத்துவம்) என்னும் செயல்முறையை பின்பற்றுகின்றோம். அக்குறிப்பிட்ட வார்த்தைகள் வேதாகமத்தில் உபயோகிப்படவில்லையென்றாலும், இக்கருத்தானது இயேசு தனது சீடர்களுக்கு போதித்தவைகளிலும், புதிய ஏற்பாடு முழுவதும் தெளிவாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இது அணைத்து சீடர்களோடு தொடர்புடையது மற்றும் கிறிஸ்து தனது சீடர்களுடன் என்ன செய்தார் என்பதை வரையறுக்கின்றது. எனினும், நம் குழந்தைகளை எப்படி சீடராக்குவது என்பதனையும் இது விளக்குகின்றது. தொடர்ந்து காணப்படும் பகுதிகம் அவர்களுடன் பயன்படுத்த உதவும் வேதாகம கருத்துக்களை அடையாளம் காட்டுகின்றது.

நம்முடைய பிள்ளைகளை உண்மையாக சீடராக்குதலென்பது அவர்களுடனான உறவு மிகவும் வேண்டிய ஒன்றென்பதன் அர்த்தமாகும். இது நம்முடைய பொறுப்பு. இயேசு அவருடைய சீடர்களிடம் தன்னை பின் தொடர அறிவுறுத்தினார் அல்லது அவரோடு சேர்ந்து பயணிக்க அறிவுறுத்தினார், ஆனால் வேண்டுமென்று அவரே முதலாவது படியை எடுத்துவைத்தார். சில இன்றியமையா உறவுகள் எதார்த்தமாக அமைகின்றன என்பதனை நாம் உணரவேண்டும்.

முன்னதாகவே தீர்மானித்து ஒரு திட்டத்தை நடத்துவதும் தொடர்ச்சியாக கொண்டு செல்வதும் அத்தியாவசயமானது.

நாம் "அன்பில் சத்தியத்தை [பேச வேண்டும்]" என்பதை வேதாகமம் வலியுறுத்துகின்றது (எபேசியர் 4:15). நம் குழந்தைகளை சீடராகும்போது சரியான அணுகுமுறையைக் கொண்டிருப்பதால், கிறிஸ்துவில் முதிர்ச்சியை நோக்கி வளர அவர்களுக்கு அன்புடன் உதவ வேண்டும். அன்பு மிகவும் சக்திவாய்ந்த உந்துதல். அன்பின் சூழல் உங்கள் குழந்தையின் மனதில், குறிப்பாக சரியானதை செய்ய நீங்கள் அவர்களுக்கு சவால் விடும்பொழுது அறிவுறுதலைப்பெற தயார்படுத்துகின்றது. இயேசு தனது சீடர்களிடம் நேரடியாகவும் சமரசமின்றியும் சவால்களை அளித்தார், ஆனால் அவர் எப்பொழுதும் அன்புடனே அதைச் செய்தார். ஒரு குழந்தை அன்பின் பாதுகாப்பில் வளரும்போளுது, அக்குழந்தை உங்களுக்கு செவிகொடுத்து நீங்கள் கூறுபவர்களை கீழ்ப்படிதலுடன் கேட்கும்.

கிறிஸ்துவைப்போல இருக்க பிள்ளைகளை ஒழுங்குபடுத்துங்கள். இந்த கிழக்கிலிருந்து நாம் ஒருபோதும் வழி மாறக்கூடாது: இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவர்களுக்கு போதிக்க வேண்டும் அப்பொழுது அவர்கள் அவருடைய அன்பையும் அவருடைய வழியையும் ரசிப்பார்கள். பெரும்பாலான பெற்றோர் தங்களது பிள்ளைகளை அவர்களுடைய நகல்களாகவோ, அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் வளர்கின்றனர். "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல, நீங்களும் என்னை பின்பற்றுங்கள்" (1 கொரிந்தியர் 11:1) என்று அப்போஸ்தலராகிய பவுல் தேவனுடைய சித்தத்தைக் குறித்து வெளிப்படுத்துகின்றார். சீடத்துவத்தைக்குறித்து வேதாகம இலக்கு இதுவே: கிறிஸ்துவுக்குள் அவர்கள் யாரென்று நம் பிள்ளைகளுக்கு உதவவேண்டும். இக்கொள்கையைக்குறித்து இயேசு மத்தேயு 10:25ல், "சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும். வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொல்வார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" அதேபோல லூக்கா 6:40லும், "சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்." என்று கூறுகின்றார். மேலோட்டமான முதன்மை உண்மை என்னவென்றால் ஆசிரியரை சீடர் பின்பற்றுவதே.

"முற்றிலுமாக பயிற்சிபெறுவது" என்பது காடர்டைசோ என்னும் கிரேக்க வார்த்தையாகும், அதன் பொருள் "ஒரு பொருளை அதன் பொருத்தமான நிலையில் வைக்க, நிறுவ, அது எப்பகுதியிலும் குறைபடாமலிருக்க. பெற்றோர்-ஆசிரியராக, நம்முடைய பிள்ளைகளோடு சுவிசேஷத்தைப் பறிமாறி, இயேசுவை அவர்களுடைய இரட்சகராக வழிநடத்துவதே சீடத்துவத்தின் நோக்கம்; தினந்தோறும் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதெப்படி என்று காண்பிப்பதுமே; வேதாகமத்தை எப்படி கர்ப்பதெப்படி என்று கற்பிப்பதும்; அவருடைய சாயலை மறுரூபமடைவது என்னும் கருத்தை புரிந்துகொள்வதுமேயாகும் (ரோமர் 8:29).

தொடர்ச்சியான காரியமாக தேவன் நம்மை சீடர்களாக ஆணையிட்டிருப்பதினால், நம் குழந்தைகளை ஒழுங்குபடுத்தும் முன்னுரிமை, அவர்கள் வீட்டை விட்டு வெளியில் செல்லும்போதும் முடிவடைவதே இல்லை. அவர்களுக்கு நாம் தேவைப்படும்பொழுது அவர்களை உற்சாகப்படுத்துவதும், அவர்களுக்காக எப்பொழுதும் இருக்கவும், அவர்களுக்காக எப்பொழுதும் ஜெபித்தும், தேவ ஞானத்தை அவர்களிடம் பகிரவும், அறிவுறுத்தவும் நமது கடமை. ஒழுங்குபடுத்தல் என்பது ஒரு வாழ்க்கை முறை, நாம் முதலாவதாக கிறிஸ்துவை எப்பொழுதும் பின்பற்றி, தேவனின் நற்குணத்தைக் குறித்து மற்றவர்களிடம் அனுதினமும் பேசவும், எல்லாவற்றிலும் அவரை நாம் பின்பற்றும் தேவையாகும்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கீழ்காணும் வசனம் சீடத்துவத்தின் செயல்முறையை எவ்வாறு விளக்குகின்றது?

> நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். (2 கொரிந்தியர் 3:18)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

**சுய பரிசோதனை 3**

உங்களை சோதித்தறிய நேரம் ஒதுக்கவும். இம்மாற்றத்தை நீங்கள் அனுபவிக்கின்றீர்கள்? அப்படியென்றால், தேவனிடம் ஒரு பாராட்டு அறிக்கையை எழுதவும். இல்லையென்றால், தேவனின் உதவிக்காக ஒரு ஜெபத்தை எழுதி, உங்களுடைய வாழ்வில் இது மெய்யாக மன்றாடுங்கள்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

**உங்களுடைய வலுவான அடித்தளமும் சீடத்துவமும்**

கிறிஸ்துவுடனான நெருக்கத்தை அடித்தளமாக கொண்டு வாழ்வை கட்டமைப்பதில் முக்கியத்துவத்தை இரண்டாம் தொகுப்பில், 6ஆம் பாடத்தில் கற்றுக்கொண்டோம். இவ்வுறவினாலேயே ஸ்திரத்தன்மை, வலிமை, வல்லமையினால் தேவனின் விருப்பத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்ற முடியும். உபாகமம் 6:1-6ழும் நாம் கற்றுக்கொண்டது, அவருடனான அன்பினாலே அவருடைய கட்டளைகளை கவனமாக ஆசாரிக்க தேவன் இஸ்ரவேலின் பிள்ளைகளிடமும், அவருடைய மகன்களிடமும், பேரக்குழந்தைகளிடமும் (சந்ததி சந்ததியாக) கூறுகின்றார். தகப்பன்மார்களுடைய விசுவாசம் தலைமுறைதோறும் நீட்டிக்க கட்டளைக்கொடுத்தார். பிள்ளைகளின் ஆவிக்குரிய பயிற்சியானது (சீடராக்குதல்) பெற்றோர்களுக்கு தேவன் அருளினை முன்னுரிமையும் பொறுப்புமாகும். இவ்வேத உத்தரவுகள் மாறவேயில்லை. நாம் "சீடர்களாக்க வேண்டும்"(மத்தேயு 28:19) அதே சமயம் "தேவனுடைய பயிற்சியிலும் அறிவுரைகளிலும் அவர்களை வளர்க்க வேண்டும்" (எப்சியர் 6:4). நம்முடைய பிள்ளைகளை தீவிரமாக சீடராக்க மறுப்பதும் புறக்கணிப்பதும் கீழ்ப்படியாமையாகும்.

முதலாவது நம்முடைய முன்மாதிரியான நடக்கையினாலும் அதன்பிறகு அறிவுரைகளினாலும் நம் பிள்ளைகளை சீடர்களாக்குகின்றோம். நம் பிள்ளைகளை நாம் வளர்த்தும்பொழுது, நாம் என்ன செயகிறோம் என்பது அதைவிட வல்லமையானது. நம்முடைய உதாரணங்கள் அவர்களை தேவனை பின்பற்றவோ - அல்லது எதிர்க்கவோ உந்துகின்றது. நம்மிடம் போலித்தனத்தை காண்பார்களேயென்றால், அது எதிர்ப்பிற்கு வித்தாகும்.

**சுய பரிசோதனை 4**

இத்தொடரினை துவங்கியதிலிருந்து உங்களுடைய வல்லமையான அடித்தளம் எவ்வழிகளில் வளர்ந்துள்ளது? நீங்கள் ஜெபத்திற்காகவும் தியானத்திற்காகவும் எப்படி நேரத்தை ஒதுக்கியுள்ளீர்கள்? இது உங்களுடைய தினசரி முன்னுரிமையா? இல்லையென்றால், ஏன்? என்ன மாற்றம் தேவைப்படுகின்றது?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

**போலித்தனம் எதிர்ப்பை உருவாக்குகின்றது**

நம்முடைய பிள்ளைகள் கர்த்தரோடு நடக்க வேண்டுமேயானால், நாம் மாதிரிகளை இருக்க வேண்டும். சார்லஸ் ஸ்டான்லி இவாறாக எழுதினர், "தேவனின் ராஜ்யம் அவ்விசுவாசிகளுக்கு (அல்லது கிறிஸ்தவர்களுக்கு) ஆவிக்குரிய வாழ்வை தங்களுக்காக நிரூபித்துக்காட்டும் கிறிஸ்தவர்களை விட கட்டாயமாயிருக்கின்றது". மேலும் கிறிஸ்தவம் போதிக்கப்பட்ட, கடைபிடிக்கப்படாத குடும்பங்களில் வாழ்வதைவிட நமது பிள்ளைகள் தேவனுடைய ராஜ்யத்தின் மீது அளவில்லாத விருப்பத்தையும் வாஞ்சையையும் உடையவர் களாயிருக்கின்றார்கள். உங்களுடைய பிள்ளைகள் இரட்டைத்தரத்தை பார்க்கும்பொழுது - நீங்கள் ஒன்றை கூறி மற்றொன்றை கடைபிடிக்கும்பொழுது - அவர்களும் அதையே செய்ய கற்றுக்கொண்டு, உங்களை மாதிரிகளை வைத்து, உங்கள் மீதும் நீங்கள் அறிவிக்கும் தேவன் மீதும் மரியாதையை இழக்கின்றனர்.

"நான் சொல்வதை செய், நான் செய்வதை செய்யாதே" என்பது சரியாக போலித்தனத்தை வரையறுக்கின்றது. பெரும்பாலான கிறிஸ்தவ பெற்றோர் இத்தத்துவத்தின்படி வாழ்கின்றனர். இயேசு, வேதபாரகர்களிடமும், பரிசேயர்களிடமும் கடும்வார்த்தைகளைக் கொண்டு பேசினார் ஏனென்றால் அவர்கள் சரியானவற்றை கூறி, அதன் நேர் எதிராக நடந்துகொண்டனர்.

> மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. (மத்தேயு 15:7-8)

போலித்தனமான ஒரு நபர் போலியாக செயல்பட்டு, ஏமாற்றி; பாசாங்காய் அனுமானித்து பேசும் அல்லது செயல்படும் மனிதன். ஒரு நடிகன் தனக்கு கொடுக்கப்பட்டுள்ள பங்கை நடித்தோ, ஒரு பகுதியை நடித்தோ, தனக்கென்று எழுதப்பட்டு கொடுக்கப்பட்ட ஒரு

கதாபாத்திரத்தை தரிப்பவர்களை, இயேசு இவர்களை போலித்தனமானவர்களென்று அழைத்தார். அவர்கள் அவர்களுடைய பாத்திரங்களை நடித்தனர், சொல்வது ஒன்றாக இருந்தது, இயேசு அவர்களின் எண்ணங்களை அறிந்திருந்தார். நாமும் மிக ஜாக்கிரதையாக பொதுவெளியில் அல்லது சபையில் ஒருவராகவும் வீட்டில் வேறொருநபராகவும் காணப்படக்கூடாது. பெரும்பாலான நாம் சபையில் நல்லவர்களைப்போல நடிக்க உற்சாகமாய் காணப்பட்டு, தேவனுக்கேற்ற வேடத்தை தரித்து, கிறிஸ்தவர்களைப்போல காணப்பட்டு, வீட்டிலும் அப்படியே நடிக்க மிகவும் சிரமப்படுகின்றோம்.

நம்மில் பலரும் மற்ற கிறிஸ்தவர்களிடம் இப்போலித்தனத்தை கண்டுள்ளோம், ஆனால் நம்மில் எத்தனை பேர் நம்மையே உள்நோக்கிப் பார்த்திருக்கின்றோம்? இன்னொருவரின் நடத்தையினால் நீங்கள் தொடப்பட்டவர்களாய் இவ்வாறாக நினைத்திருக்கலாம் "ஒரு கிறிஸ்தவர் எனக்கு இதை செய்துவிட்டார் என்று என்னால் நம்பமுடியவில்லை".

**சுய பரிசோதனை 5**

அத்தருணங்களில் நீங்கள் என்ன உணர்ந்தீர்கள் என்று விளக்கவும்.

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

இப்பொழுது உங்களுடைய பிள்ளைகளின் ஸ்தானத்தை தரித்துக்கொள்ளுங்கள். நீங்கள் போலியால் நடந்துகொள்ளும்பொழுது அவர் எப்படி உணர்வார்கள் என்று நினைக்கின்றீர்கள்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

தேவனின் அன்பும், உண்மையான கிறிஸ்தவமும் கொண்டு வாழப்படும் வீடுகளில் வளரும் பிள்ளைகள், உலகப்பிரகாரமான கார்யநாளுக்கு சுலபமாக ஈர்க்கப்படமாட்டார்கள். (சத்தியம் சமரசம் செய்யப்பட்டு நீதி கேலி செய்யப்படும் தருணங்களில்) பெற்றோர்களே ஜாக்கிரதையாயிருங்கள். நம்முடைய பிள்ளைகளை எதைக்கொண்டு வேண்டுமேயானாலும் கிறிஸ்தவத்திலிருந்து ஈர்க்க, நம்முடைய தீய நடக்கையைக்கொண்டு எதிரி முற்படுவான்.

**சுய பரிசோதனை 6**

உங்கள் பிள்ளைகளிடம் ஒன்டாரிக்கூறி, அதே நடக்கையில் நீங்கள் சாக்குப்போக்கு சொல்கின்றீர்களா? தேவன் நம்மை நாமே நியாயம் விசாரிக்கவும், மற்றவர்களை நியாயம் விசாரிக்க வேண்டாம் என்கின்றார். இப்படத்தை வாசிக்கும்பொழுது தேவன் உங்களிடம் காணப்படும் போலித்தன்மைகளை வெளிப்படுத்தினார்? அப்படியென்றால் இப்பொழுதே அதைப்பற்றி எழுதவும். தேவனிடமும் உங்கள் பிள்ளைகளிடமும் உங்களை மன்னிக்கக்கோரி, மாற்றத்திற்கு ஒப்புவியுங்கள். ஒவ்வொரு முறையும் நீங்கள் தோல்வியுறும் மன்னிப்புக்கோருங்கள் (1 யோவான் 1:9).

____________________________________________________________________________

____________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

பவுலடியார் மற்றவர்கள் தன்னைக்குறித்ததான நற்சாட்சியைக்குறித்து கூறுவதை விளக்கவும்.

> இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன். (அப்போஸ்தலர் 24:16)

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

28வது அமெரிக்க ஜனாதிபதியான தாமஸ் வுடரோ வில்சன் (1913-1921) ப்ரின்ஸ்ட்டன் பல்கலைக்கழகத்தின் தலைவராக பணியாற்றினார் (1902-1910). ப்ரின்ஸ்ட்டன் தலைவராயிருந்தபோது, அவர் பெற்றோர் குழுமத்தில் இவ்வாறாக பேசினார்:

> உங்கள் பிள்ளைகளைப்பற்றிய அநேக கடிதங்களை உங்களிடமிருந்து பெறுகிறேன். ப்ரின்ஸ்ட்டனில் இருக்கும் நாங்கள் ஏன் நீங்கள் வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியவில்லை என்று தெரிந்துகொள்ளவேண்டுமா? நாங்கள் ஏன் செய்ய முடியாது என்பதின் காரணத்தை உங்களுக்கு கூறுகின்றேன். இது உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம், ஆனால் நான் மூர்க்கம்கொண்டு பேசுகிறேன் என்று எண்ணவேண்டாம், காரணம் அவர்கள் உங்களுடைய மகன்கள், உங்களது வீட்டில் வளர்க்கப்படுகின்றன, உங்கள் இரத்தத்தின் இரத்தமாகவும், சதையின் சதையாகவும் இருக்கின்றனர். வீட்டின் இலட்சியங்களை உள்வாங்கியுள்ளனர். அவர்கள் உங்களது மகன்கள். இணக்கமான, வடிவமைக்கக்கூடிய எ=காலங்களில் உங்களுடைய நீங்கா முத்திரையை அவர்களிடம் பதித்திருக்கின்றீர்கள்.

வீட்டில் பெற்றோருடைய செல்வாக்கு பிள்ளைகளிடம் அதிகமாயிருப்பதை குறைத்து மதிப்பிடமுடியாது.

**பாடம் 7**

**உங்கள் குழந்தைகளை ஒழுங்குபடுத்தல்**

பெற்றோர்கள் பிள்ளைகளை எப்படி ஒழுங்குபடுத்தவேண்டுமென்று மோசே விளக்கினார். அவர் இஸ்ரவேலர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, பெற்றோரின் இருதயத்திலிருந்தே தேவனுடைய அன்பும் அவருடைய வார்த்தையும் துவங்குகின்றன என்று விளக்கினார். அதன் பிறகு விடாமுயற்சியுடன் ("நீங்கள் - வேண்டும்") பிள்ளைகளுக்கு கற்பிக்க கட்டளையிடப்படுகின்றனர்.

> நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகளை உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக. (உபாகமம் 6:5-9)

இவ்வேதப்பகுதி இன்றும் நமக்கு தொடர்புடையதாயிருக்கின்றது, நம்முடைய பிள்ளைகளுக்கு விடாமுயற்சியுடன் தேவனின் கட்டளைகளையும் பிரமாணங்களையும் கற்பிக்க வேண்டும் என்று - அறிவுறுத்தல் மற்றும் நற்செய்தியின் வழி தொடர்ந்து வாழ்வதாலும் - அறிவிக்கின்றது. என்னுடைய அனுபவத்தில், 10 சதவிகிதத்திற்கும் குறைந்த கிறிஸ்துவின் சபையின் அங்கமாயிருக்கின்ற பெற்றோரே தங்களுடைய பிள்ளைகளை ஒழுங்குபடுத்துகின்றனர். மாறாக, தேவன் தந்தருளிய இப்பொறுப்பினை பள்ளிகளிடமும் தேவாலயங்களிலிடமும் விட்டுவிட்டுள்ளனர்.

காலப்போக்கில் எப்படியோ, பிள்ளைகளை ஆவிக்குரிய காரியங்களில் அறிவுறுத்துவது வேறொருவருடைய பொறுப்பென்று பெரும்பாலான பெற்றோர் தீர்மானித்துள்ளனர். எனினும், வாலிபப் பிள்ளைகளின் மத்தியிலோ சிறுவர் மத்தியிலோ ஊழியம் செய்யும் ஒரு நபரைக் குறித்து வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடவில்லை. நான் வாலிபர் மத்தியில் ஊழியம் செய்யும் ஒரு போதகராயிருந்தேன், எனவே நாம் வாலிபர் மத்தியில் ஊழியம் செய்யும் போதகர்களாகவும், நான் நமது பிள்ளைகள் மத்தியில் அவர்கள் செய்யும் வேலைகளுக்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றேன். ஆனால் பெற்றோராகிய உங்களிடமும் என்னிடமும் தேவன் கூறுவதென்னவென்றால், நம் பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவது நம்முடைய பொறுப்பாகும். நாம் அவர்களிடம் கொண்ட ஆழமான செல்வாக்கு வேறு எந்த கிறிஸ்தவர்களிடமும் கிறிஸ்தவ ஸ்தாபனங்களிடமும் காணப்படுவதில்லை. அவர்கள் இங்கிருப்பது நமக்கு உதவவே மாத்திரமல்லாது - நம் இடத்தை பிடிக்க அல்ல. உங்கள் பிள்ளைகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சியினைக்குறித்து ஒரு ஆசிரியரிடமோ, வாலிப குழுத்தலைவரிடமோ அணுகிப் பேசியதுண்டா? பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்கும் நபர்களுடன் சேர்ந்து தெரிந்துகொள்வதும் வேலைசெய்வதும் அவசியம். உதாரணத்திற்கு, ஞாயிறு பாடத்தை வாரநாட்களில் எவ்வாறு வலுப்படுத்தமுடியும் என்று நீங்கள் கேட்க முடியும். நீங்கள் உங்கள் பிள்ளைகளை இதுவரை ஒழுங்குபடுத்தவில்லையேயானால், துவங்குவதற்கு இது ஒரு வழியாக அமையலாம்.

**சுய பரிசோதனை 1**

உங்களுடைய பிள்ளைகள் ஆவ்விக்குரிய வளர்ச்சியடைய உதவும் நபர்கள், இடங்கள் மற்றும் நடைமுறைகளை பட்டியலிடவும்.

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

**ஒழுங்குபடுத்தல் பெற்றோரின் இருதயத்தில் துவங்குகின்றது**

உபாகமம் 6:5ல் ஒழுக்கத்தின் ஒரு முக்கிய அம்சத்தை காண்கிறோம்: "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக." (முழுமனத்தோடும்), ஆத்ம மற்றும் பெலன் (உங்களுடைய முழு வாழ்வும்). உபாகமத்தில் தேவனை நேசிக்கவேண்டும் என்கிற கட்டளை மிக அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது (7:9; 10:12; 11:1, 13, 22; 13:3; 19:9; 30:6, 16, 20). இந்த அறிவுறுத்துதலானது உங்கள் குழந்தைகளை வெற்றிகரமாக ஒழுங்குபடுத்துவதற்கு அடிப்படையும் மிகமுக்கியமான ஒன்றென்று நிறைவு செய்துகொள்ளலாம். 6ஆம் அதிகாரம் 6ஆம் வசனம் தேவனுடைய வார்த்தை "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக." அல்லது உங்கள் இருதயத்தினுள் என்று கூறும்பொழுது, அவரோடு நெருக்கமான, அன்பின் உறவாய் இருக்க வேண்டுமென்று சுட்டுகின்றது.

ஒரு பிரசித்திபெற்ற கிறிஸ்தவ எழுத்தாளர் இவ்வாறாக எழுதினார்:

> தேவனுடைய அன்பு சரியான வகையில் இருப்பதற்கு, தேவனுடைய கட்டளைகளை இருதயத்தில் செலுத்தி, அவற்றிலே அனுதினமும் எண்ணி சம்பாஷிக்க வேண்டும். "உங்களுடைய இதயத்திற்குள்" அதாவது, தேவனுடைய கட்டளைகளை வெறும் நினைவாக அல்லாமல் இருதயத்தின் அங்கமாக்கிக் கொள்ளவேண்டும். நிலைத்திருக்கும் ஒரு உறவு அவசியம். நம்முடைய இருதயமானது மாறுதலடைந்து, அன்றாடம் மாறி, தேவனோடு நெருங்கி வளரவேண்டும். நாம் கற்று வளரும்போது, தேவன் நமக்கு என்ன அருளுகின்றார் என்பதை நாம் தொடர்புகொள்ளமுடியும். என்ன ஒரு அற்புதமான சிறப்புரிமை. நீங்களும் நானும் நம்முடைய குழந்தைகளுடன் தேவ வார்த்தையை பகிரும்போளுது, நாம் நேசித்து ஊழியம் செய்யும் தேவனிடம் அவர்களும் அன்புகொள்வார்கள்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

தேவனுடைய வார்தையைக் குறித்து சங்கீதக்காரன் எவ்வாறு விவரித்தார்? இது அவருடைய வாழ்க்கையை எவ்வாறாக பாதித்தது?

> நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன். (சங்கீதம் 119:11)

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

> உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம். (சங்கீதம் 119:97)

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

> என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன். (சங்கீதம் 40:8)

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

கீழ்காணும் இவ்வசனத்தில் தேவன் நம்மிடம் என்ன செய்ய விரும்புகிறார்? நாம் அவரிடமிருந்து என்ன எதிர்பார்க்க முடியும்?

> என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். (எரேமியா 33:3)

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

**நாம் நம் குழந்தைகளை விடாமுயற்சியுடன் ஒழுங்குபடுத்த வேண்டும்**

உபாகமம் 6:7 நம் குழந்தைகளை ஒழுங்குபடுத்தும் போது நாம் கொண்டிருக்க வேண்டிய அர்ப்பணிப்பு மனப்பான்மை பற்றி பேசுகிறது. நமது வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலம் தகவல்தொடர்புக்கான ஒரு முனைப்பான அணுகுமுறையை அவர்களுக்கு விடாமுயற்சியுடன் கற்பிப்பதைக் குறிக்கிறது.

**உண்மை கோப்பு**

விடாமுயற்சியுடன் - விடாமுயற்சியுடனான கவனத்துடன்; ஒரு பொருள் அல்லது நோக்கத்தில் நிலையான விண்ணப்பத்துடனும் ஆர்வத்துடனும் இருப்பது; கவனத்துடனும் முயற்சியுடனும் வழக்குத்தொடுப்பது; கவனக்குறைவாக அல்லது அலட்சியமாக இல்லாமல்.

உபாகமம் தேவனின் குழந்தைகளான யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட தகவலைக் கொண்டுள்ளது, ஆனால் இன்று நமக்காக அவர் வைத்திருக்கும் சித்தத்தை சமமாக விவரிக்கிறது. கூர்மையான பொருளைக் கொண்டு ஒரு கல் பலகையில் வார்த்தைகள் வெட்டப்படுவது போல, ஒவ்வொரு தலைமுறையின் குழந்தைகளின் இதயத்திலும் சட்டம் ஈர்க்கப்பட வேண்டும் என்பதை இவ்வொப்புமை குறிக்கிறது. அவருடைய

சட்டம் நம் இதயங்களில் எழுதப்பட வேண்டும்/மறைக்கப்பட வேண்டும் என்று தேவனின் வார்த்தை நமக்கு கற்பிக்கின்றது (சங்கீதம் 119: 11). இது ஒரு கற்றல் செயல்முறை, இது ஒரே இரவில் நடக்காது. நாம் நமது சொந்த கற்றலில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும், பின்னர் நம் குழந்தைகளுக்கு விடாமுயற்சியுடன் கற்பிக்க வேண்டும். தேவனின் வார்த்தையை நாம் கற்பிக்கிறோம், ஏனென்றால் அது உண்மையிலேயே உயிருள்ளதாகவும் சக்திவாய்ந்ததாகவும் இருக்கிறது, மேலும் இது இருதயத்தின் எண்ணங்களையும் நோக்கங்களையும், நல்லது மற்றும் தீயதை வெளிப்படுத்த முடியும்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

தேவனுடைய வார்த்தையின் வல்லமையை விவரித்து அதை அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுத்துங்கள்.

> தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரேயர் 4:12)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

தேவனைத் தேடுவதற்கும் அவருடைய வார்த்தையைப் பின்பற்றுவதற்கும் விடாமுயற்சியுள்ள தனிப்பட்ட அர்ப்பணிப்பு அவசியம் என்பதை நாம் காண்கிறோம், மற்றவர்களை சீடராக்கும் நமது முயற்சிகளுக்கு முன்னதாக இருக்க வேண்டும். நமது வார்த்தைகள் மற்றும் செயல்கள் வேறுபடும் போது நம் குழந்தைகளுக்கு தெரியும், இது பாசாங்குத்தனம் என வரையறுக்கப்படுகிறது. பெற்றோர்களாகிய நமது குறிக்கோள், தேவனின் அன்புக்கும் அவரது வார்த்தைக்கும் நம் குழந்தைகளை அறிமுகப்படுத்துவதாகும். நமது வல்லமைவாய்ந்த தாக்கங்கள் அன்பு மற்றும் உண்மை. பாசாங்குத்தனம் கலகத்தை உருவாக்குகிறது, ஆனால் தேவனுடைய ஆவியின் கனியை நம் வாழ்வில் பார்ப்பது அவர்கள் கிறிஸ்துவின் மீது நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வைக்க வழிவகுக்கும்.

எங்களுடைய பிள்ளைகள் வீட்டில் இருந்தபொழுது, அன்றாடமும் நாம் வாழும் வாழ்வைக்கொண்டே நமது பிள்ளைகள் மீது செல்வாக்குடையவர்களாகவும் தேவனைப்பற்றி கற்பிப்பதற்கான சிறந்த கருவிகள் என்று நானும் எனது மனைவியும் கண்டறிந்தோம். கிறிஸ்துவுக்கு முன்மாதிரிகளாக எங்களை நாங்கள் ஒப்புக்கொடுத்து, தேவன் காட்டும் வழியில் நடக்க தீர்மாணித்தோம். எந்த ஒரு பெற்றோரும் பூரணமானவர்களல்ல, நமது குழந்தைகள் நம்மை கவனிக்கும் பொருட்டு, தேவனின் பரிசுத்த ஆவியினாலே அச்செயல்முறையினாலே மாறுபடுவதற்கு நம்மை நாமே ஒப்புக்கொடுப்போமேயானால், சீடத்துவத்திற்கான ஒரு மிகப்பெரிய கருவியாக மாறும்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

பெற்றோருக்கு எச்சரிக்கைகள் மற்றும் அறிவுரைகளை பட்டியலிடுங்கள். எத்தனை தலைமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன?

> ஓரேபிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ நிற்கும்போது, கர்த்தர் என்னை நோக்கி: ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச்செய்து, என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன்; அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள் என்று சொல்லிய நாளில், (உபாகமம் 4:9)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

**ஒழுங்குபடுத்துதல் மற்றும் சித்தப்படுத்துதல்**

ஒரு தனிநபரை ஒழுங்குபடுத்துவது நல்ல வேதாகம அறிவுரைகளை விட அதிகம் தேவை. அவர்கள் ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு வழிகாட்ட உதவுவதே குறிக்கோள், அதன்மூலமாய் அவர்கள் மற்றவர்களை சீடராக்க முடியும். "ஒவ்வொருவரும் ஒருவருக்கு கற்பிக்கிறார்கள்" என்பது பெருக்கத்தின் ஒரு செயல்முறையாகும், மேலும் இது இறுதியில் உலகம் முழுவதையும் பாதிக்கும். நம்முடைய கிறிஸ்து போன்ற மனப்பான்மை மற்றும் நடத்தை மூலம் நம் குழந்தைகளுக்கு கிறிஸ்துவை பெருகச் செய்கிறோம். இயேசு தனது சீடர்களுடன் செய்ததைப் போலவே, அவர்கள் உலகில் சந்திக்கும் ஆவிக்குரிய போராட்டங்களை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் அவர்களுக்கு ஆயுதங்களை வழங்குகிறோம். வேதாகமம் நம் குழந்தைகளுக்கான இந்தத் தரிசனத்தைப் பற்றிய நுண்ணறிவைக் கொடுக்கிறது:

> நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா; அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார். இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். (சங்கீதம் 127:3)

நமது பிள்ளைகள் தேவன் நமக்கு கொடுத்த பரிசுகள், அவருடைய ஆசீர்வாதம், நம் குடும்பங்களுக்கு அளவில்லா மகிழ்ச்சி தரும் தருணங்கள். தேவன் பிள்ளைகளை "வெகுமதி" என்று அழைக்கின்றார், எனவே நாம் அவர்களை விலைமதிப்புள்ள பரிசுகளாக மதிப்பிடவேண்டும், அவர்களை சுமையாக பாவிக்கக்கூடாது. தேவன் அறிவுறுத்தியபடி அவர்களை இக்காலத்தின் நல்ல பொறுப்பாளர்களாகவளர்க்க வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது. பிள்ளைகள் குவியல் மட்டுமல்லாமல் "ஒரு வீரனின் கையிலும் அம்புகளாக" சித்தரிக்கப்படுகின்றனர். இது தகப்பனையே பிரதானமாக குறிப்பிடுகின்றது, ஏனென்றால் தேவன் வீட்டின்மீது அவரிடம் இறுதியான பொறுப்பை வழங்கியுள்ளார்.

தற்போது நாம் வில் மற்றும் அம்புகளை விட துப்பாக்கிகள், வெடிகுண்டு, ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை போருக்கு பயன்படுத்தும் கலாச்சாரத்தில் வாழ்கிறோம். வரலாற்றில் உங்களை மீண்டும் கற்பனை செய்து பாருங்கள் அல்லது எதிரிகளை தூரத்திலிருந்து தாக்க அம்புகள் பயன்படுத்தப்பட்ட ஒரு படத்தைப் பற்றி சிந்தியுங்கள். ஒரு திறமையான வீரர் தனது அம்புகளை குறிவைத்து இலக்கை அடைந்தார்; எனவே "ஒரு வீரனின் கையில் அம்புகள்",

திறமையாக சரியான திசையை நோக்கி என்று பெற்றோரின் கையில் ஒரு குழந்தையை விவரிக்கிறது. இவ்வேத வசனத்தைக் குறித்து ஒரு எழுத்தாளர் இவ்வாறாக கூறுகின்றார்:

> அம்புகளை வடிவமைக்கவேண்டும். எந்த ஒரு அம்பும் சரியான திசையில் உடனடியாக யுத்தத்திற்கு தயார்நிலையிலிருப்பதில்லை. நேராக அம்பை எடுக்கும் ஒரு வீரன், கிளையை நன்கு வடிவமைத்து அம்புக்குறியாக வடிவமைப்பதில் நேரத்தை செலவிட வேண்டும். குழந்தைகளை வளர்ப்பதுவும் அதுபோலவே. சிறு வயதிலேயே மகன்களும் மகள்களும் நீதியில் நடக்க சிறு வயதிலேயே பயிற்றுவிக்கப்பட வேண்டும்.... இதில் வேதாகம அறிவுறுத்தல், தார்மீக திருத்தம், உறுதியான ஒழுக்கம் மற்றும் அன்பான உறுதியும் அடங்கும்.

நம் குழந்தைகளை நீதிக்கான ஆயுதங்களாக உணர்வது முக்கியம். அம்பு என்பது உங்களிடமிருந்து விலகிச் செல்லும் ஒன்று. இது ஒரு தாக்குதல் ஆயுதம், நாம் வாழும் உலகின் அநியாயத்தை தாக்குவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அம்புகள் ஒரு தற்காப்பு ஆயுதமாகவும் காணப்படுகின்றன: குழந்தைகள் உலக சோதனைகள் மற்றும் சக மனிதரின் அழுத்தத்தின் தேவபயமற்ற தாக்கங்களை சமாளிக்க தயாராக உள்ளனர்.

குழந்தைகள் தேவனுக்காக தங்களுடைய உலகத்தை சித்தப்படுத்துவதற்கு பெற்றோர் பிரயாசப்படவேண்டும்.

> அவர்கள் பெரும் ஆற்றலுடன் வீசப்பட்ட அம்புகள், குடும்பத்திற்கு அப்பால் சென்று - கர்த்தர் அவர்களை சேவை செய்ய அழைக்கும் இடத்திற்கு செல்லப்போகிறவர்கள். சில சமயங்களில் சமூகம், நகரம், மாநிலம் மற்றும் தேசத்திற்கு அப்பாற்பட்டு அவர்களின் செல்வாக்கு பெரியதாக அமையலாம். நம்முடைய சொந்த ஆசைகளுக்காகவும் ஆறுதலுக்காகவும் சுயநலத்துடன் அவர்களைத் தடுத்து நிறுத்துவதை விட, இதுவே நமது குழந்தைகளுக்கான சரியான நோக்கமும் பிரார்த்தனையும் ஆகும்.

என் குழந்தைகளை நான் உயர்நிலைப் பள்ளிவரை போதைபொருட்களுக்கோ பாலியலுறவுகளுக்கோ அடிமையாகாமல் வளர்க்க முடிந்தால், நான் வெற்றி பெற்றேன் என்று பல பெற்றோர்கள் நினைக்கிறார்கள். உங்கள் குழந்தைகளை நீதிக்காக அவர்களின் உலகத்தை பாதிக்கும் வகையில் தீவிரமான ஆயுதங்களாக நீங்கள் உணர வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். "நீங்கள் எதையும் குறிக்கவில்லை என்றால், நீங்கள் ஒவ்வொரு முறையும் அதை அடிப்பீர்கள்" என்ற பழமொழிக்கேற்ப ஆகும். இந்த உதாரணத்தை கருத்தில் கொள்ளுங்கள், யாராவது உங்களுக்கு ஒரு அழகான நிலத்தை தருகிறார்கள், எந்த செடிகளிலிருந்தும், களைகளிலிருந்தும் அல்லது குப்பைகளிலிருந்தும் விடுபட்டு முற்றிலும் தெளிவான மண்ணைக் கொண்டு, "இதோ, இது உங்களுடையது. நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள்" என்று கூறுகிறாரென்று வைத்துக்கொள்ளுவோம். அதை பயன்படுத்துவதற்கு ஒரு வருடம் காத்திருக்கின்றீர்கள். நீங்கள் உங்களிடம் வாங்கியதுபோலவே இருக்குமென்று நினைப்பது எவ்வளவு முட்டாள்தனம். மாறாக அந்நிலம் விதைகளினால் மீண்டும் மீண்டும் இறைக்கப்படுவதினாலே முழுவதும் கலைகளோடு காணப்படும்.

உலகமும் இதைத் தான் செய்கின்றது: ஏமாற்றுதல் மற்றும் ஊழலின் விதைகளை நம் குழந்தைகளின் இதயத்தில் வித்திடுகின்றது. நிலத்தை உழுத்துத்தேவனுடைய வார்த்தையை அவர்களுடைய இருதயத்தில் புகுத்த, நாம் அங்கில்லையேயானால், யார் செய்யக்கூடும்? நம்முடைய பிள்ளைகள்மீது மிகப்பெரிய வல்லமையும் செல்வாக்கும் நிறைந்தவர்கள் யாருமில்லை. இச்சந்தர்ப்பத்தை கொண்டு தேவன் அவருடைய சத்தியத்தை விதைக்க எண்ணுகிறார். இது நம்முடைய பொறுப்பு. நாம் செயலற்று காணப்படமுடியாது இல்லையென்றால் எதிரி உட்பிரவேசித்துவிடுவான். நம் குழந்தையின் இதயத்தில் தேவ வார்த்தையின் விதையை நாம் விடாமுயற்சியுடன் விதைத்தால், அது நல்ல பலனைத் தரும் என்று தேவன் உறுதியளிக்கிறார் (மத்தேயு 13:23)

**சுய பரிசோதனை 2**

உங்கள் குழந்தையின் இதயத்தின் வளமான மண்ணை நீங்கள் உண்மையாக கவனித்து வருகிறீர்களா? நீங்கள் எப்படி சீர்திருத்த முடியும்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

அந்த மண்ணில் ஏதேனும் களை அல்லது ஊழலை உங்களால் அடையாளம் காண முடிகின்றதா? அகற்றப்பட வேண்டிய ஆக்கிரமிப்பாளர்களை பட்டியலிடுங்கள்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

நான் ஒரு வாலிபரின் போதகராக இருந்தபோது, பெற்றோர்கள் அடிக்கடி என்னை அழைப்பார்கள், "ஏய், ஞாயிற்றுக்கிழமை இரவுகளில் நீங்கள் என் குழந்தைகளுக்கு என்ன கற்பிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது, ஆனால் அவர்கள் தேவனைப் பற்றி பேசுகிறார்கள். நீங்கள் அவர்களைச் சந்திப்பது நல்லது என்று நினைக்கிறோம். அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்கத் தயாராக இருக்கிறார்கள் என்று நினைக்கிறோம்.

என்னுடைய பதில் எப்பொழுதுமே ஒன்றாகவே இருந்தது. "இதை என்னிடம் செய்யச்சொல்லி என்னை ஏன் அழைக்கின்றீர்கள்? நீங்கள் ஏன் அவனுடன் அமரமுற்படுவதில்லை? உங்கள் குழந்தையை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்துவது பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சிறு வயதிலிருந்தே கிறிஸ்துவுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்பதை நாம் ஏற்கனவே கற்றுக்கொண்டோம். ஆனால் இரட்சிப்பு தேவனின் கிரியை என்பதையும் நாம் உணர வேண்டும். நம் குழந்தைகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவது நமது பொறுப்பல்ல. யோவான் 6:44 ல் இயேசு இவ்வாறாக கற்பித்தார், "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்." உங்களுடைய பிள்ளை சுவிசேஷத்தை கேட்காமல் இரட்சிப்படையமுடியாத. எல்லா விஷயங்களையும் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது, எது சரி எது தவறு என்பதை நம் குழந்தைகளுக்கு தொடர்ந்து கற்பிப்பது நமது பொறுப்பு (மத்தேயு 28:20). இயேசு யாரென்றும், அவரோடு எப்படி நம்மை ஐக்கியப்படுத்திக்கொள்வதென்றும், ஒவ்வொரு நாளும் அவரிடம் நிலைத்திருப்பது எப்படியென்றும் நாம் அவர்களுக்கு விளக்கவேண்டும்.

**பாடம் 8**

## ஒழுங்குபடுத்துதலுக்கான கொள்கைகள்

நம்முடைய பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவதற்கான தேவனின் திட்டம், உபாகமம் 6:7-9 வசனங்களில் காணப்படுகின்றது, 5 கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது.

**கொள்கை 1: வீட்டிற்குள் ஒழுங்குபடுத்தல்**

உபாகமம் 6:7 ல் முதலாவது அறிவுறுத்தல் என்னவென்றால் "நீங்கள் உங்கள் வீட்டில் அமர்ந்திருக்கும்போது அவர்களைப் பற்றி பேசுங்கள்" என்பதே. ஒருவரோடு பேச நாம் அவர்களுடன் நேரம் செலவிடவேண்டும். தேவன் முதலாதவதாக கூறுவது என்னவென்றால் கற்பித்தல் உங்களுடைய வீட்டில் நடக்கவேண்டும் என்று, இங்கு தான் நாம் நம் குழந்தைகளுடன் அதிக நேரம் செலவிடுகின்றோம். வீட்டில் நடப்பவைகளை பெற்றோருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். தகப்பன்மார்களே, நீங்கள் முன்மாதிரியாய் இருந்து இது நடப்பதை உறுதி செய்யுங்கள். வீட்டில் தலைமைத்துவ பொறுப்பு உங்களுக்குரியது.

உட்காருதல் எனும் வார்த்தையின் எபிரேய பதம் யஸாப், ஒரு வினைச்சொல், செயலைக்குறிக்கும் ஒரு சொல். உட்காருதலை ஒரு செயலற்ற தன்மையாக நாம் நினைத்தாலும், இச்சூழலிலன் வழியாக தேவன் நம்மிடம் வேதாகம அறிவுறுத்தலில் பரபரப்புடன் காணச்சொல்கின்றார். ஒவ்வொரு முறையும் உங்களுடைய குழந்தைகளுடன் நேரம் செலவிடும்போது வேதாகம உரையாடளிலேயே கவனம் செலுத்தவேண்டும் என்றல்ல, ஆனால் நம்முடைய வீட்டில் நேரத்தை எவ்வாறு செல்வவிடுகின்றோம் என்று நிதானமாய் யோசிக்கவேண்டும்.

எச்சரிக்கை: ஊடகமும் மின்னணுவும் உறவுத்தொடர்பை மாற்றியுள்ள காலக்கட்டத்தில் நாம் வாழ்கின்றோம். பெரும்பாலான குழந்தைகள் தொலைகாட்சி காணுவதிலும், வீடியோ/ கணினி விளையாட்டுகள், குறுஞ்செய்தி மற்றும் சமூக ஊடகங்களில் தொடர்பு மூலமாய் தங்களுடைய நேரத்தை செலவிடுகின்றனர். பெற்றோர்கள் தங்களுடைய வேளைகளில் கவனம் செலுத்துவதில் அக்கறைகாட்டுவதால், பிள்ளைகளை கவனிக்காமல் விட்டுவிடுவதால் மணிக்கணக்கில் பிள்ளைகள் இவற்றில் ஈடுபடுகின்றனர். எனவே நம்முடைய வீடுகளில் நேரம் எப்படி செலவிடப்படுகின்றது என்று விடாமுயற்சியுடன் கவனிக்கவேண்டுவது அவசியம்.

**நேரடியாகவும் மறைமுகமாகவும்**

வீட்டில் ஒழுங்குபடுத்தும் நடைமுறையை இரண்டு வழிகளில் அணுகலாம்: நேரடியாகவும் மறைமுகமாகவும். நேரடி அறிவுறுத்தல் ஒழுங்குபடுத்தல் உங்கள் பிள்ளைகளுடன் தியானத்திற்காக நேரம் ஒதுக்குதலாகும். இது திட்டமிடப்பட்ட ஒரு முழு குடும்ப செயல்பாடாகும்.

சிறு குழந்தைகளும் பதின்மவயதினரும் உள்ள வீடாகும் பட்சத்தில், தியான வேலையை பிரிப்பது ஞானமாகும். ஒரே வேதாகம பயிற்சியில் 5 வயது குழந்தையையும் ஒரு பதின்ம வயது பிள்ளையையும் கொண்டு நடத்துவது சவால் நிறைந்த ஒன்றாகும். சில வீடுகளில், தகப்பனும் தாயும் வெவ்வேறு அறைகளில், தந்தை பதின்மவயதினருடனும், தாய் சிறு பிள்ளைகளுடனும் நேரம் செலவழித்து கற்பிக்கின்றனர்.

மறைமுக அறிவுறுத்தல் வாயிலாக ஒழுங்குபடுத்தலானது எதிர்பாராதவிதமாகவோ திட்டமிடாமலோ நடைபெறும் ஆவிக்குரிய கருத்தாடலை தேவன் தந்த வாய்ப்பாகக்கொள்ள வேண்டும். இவ்வகையான சூழலில் பெற்றோர் தங்களது வேலைகளை உடனடியாக ஒடுக்கவேண்டியதாகும். இது நடப்பதற்கு, பெற்றோர் முதலாவதாக வேலைகளில்லாமல் காணப்படவேண்டும்.

என்னுடைய பிள்ளைகள் சிறார்களாய் இருந்தபோது, அவர்களோடு தொடர்புகொண்டு பேசுவதற்கு சமயம் இல்லாமலோ வேலையின் நிமித்தமாக வீட்டில் இல்லாத சூழ்நிலை காணப்பட்டது. காரியங்களை சீர்படுத்தும் நோக்கம் கொண்ட நான், எனது வேலைகளிலேயே கவனம் செலுத்துவதும் சிந்தித்துக்கொண்டிருப்பதுமாக காணப்பட்டேன். திருமணமாகி நான்கு வருடங்கள் வரையிலும் வீட்டிற்கு வரும் வழியில் என்னென்ன வேலைகள் பாக்கி உள்ளன என்றும் இவற்றை முதலில் முடிக்கவேண்டும் என்றுமான யோசனைகளில் கவணம் செலுத்தினேன். வீட்டிற்கு வந்தவுடன் அவ்வேளைகளில் கவனம் செலுத்தத்துடங்கும் தருணங்களில் எனது சிறுபிள்ளைகள் என்னை சுற்றி எனது கவனத்தை ஈர்க்க முற்படுவர், ஆனால் நான் கவனத்தை அவர்கள் பக்கம் திருப்பாத பொழுதோ அவர்கள் தங்களுக்குள்ளே விளையாடுவதிலோ அவர்களுடைய தாயை தொந்தரவு செய்வதில் நாட்டம் கொள்வர், ஏனென்றால் நான் என்னுடைய வேளைகளில் மூழ்கியிருந்தேன்.

இம்மாதிரி பாதைகளில் சிக்கி நம்மில் பலர் மூழ்கும் நிலை உண்டு, நாட்கள் வாரங்களாகவும், வாரங்கள் மாதங்களாகவும் கடந்துகொண்டே போவதுண்டு. பின்னர் ஒருநாள் நம்முடைய பிள்ளைகள் நம்மிடம் ஒன்றும் பேசவிருப்பமில்லாமல் அவர்களுடைய சக நண்பர்களுடனும் ஆரோகியமற்ற உறவுகளை ஆறுதலுக்காக நாடும் தருணம் அமைந்துவிடும். எப்பொழுதுமே அவர்களை பதின்ம வயதினராகும்போது அவர்களோடு நேரம் செலவிட ஆர்வமுடையவர்களாய் காணப்படுகின்றோம், ஆனால் அது மிகவும் தாமதமான தருணம். என்னுடைய இந்த நடவடிக்கையை நான் வெகு தூரம் எடுத்துச்செல்லவில்லை. என்னுடைய குடும்பத்தில் எனது தலையாய கடமை குடும்பத்தை பராமரிப்பதே என்று நான் கற்றுக்கொண்டேன்.

**நேரம் ஒதுக்குதல்**

எனது மூத்த பிள்ளை 5 வயதாகியபொழுது, எனது தலையாய ஊழியம் எனது குடும்பத்திற்கே என்று நான் கற்றுக்கொண்டேன். தினமும் நான் ஜெபிப்பேன், "சரி, தேவனே, நான் வீட்டிற்கு வருகிறேன். ஒரு ஊழியனாக இருக்க எனக்கு உதவும்; எனது மனைவி மற்றும் பிள்ளைகளுக்காகவும் நான் இருக்க எனக்கு உதவும்." எனது மனைவி பிள்ளைகளைத் தவிர எனக்கு வேறு வேலை கிடையாது. என்னுடைய வேலை மற்றும் எனது பொழுதுபோக்கல்ல மாறாக எனது குடும்பமே எனது முன்னுரிமை என்று கற்றுக்கொண்டேன். ஒரு புதிய திட்டத்தில் நுழைந்துவிடாமல், அவர்களிடம் பேசுவதற்கு நேரத்தை முழுவதுமாக செலுத்தினேன். எனது வீட்டில், சிறந்த இடம் அடுப்பறையாக இருந்தது. எனது இரு மகன்களும் ஓடிவந்து எனது கவனத்தை ஈர்ப்பார்கள். அங்கு ஒரு மணி நேரம் வரை என்னோடு செலவழித்து தினந்தோறும் நடந்தவைகளை என்னிடம் கூறுவார். அவர்களுக்கு தெரியும் அவர்களுடைய தகப்பன் கேட்பதற்கு உண்டென்று. உரையாடல் தொடர்புக்கு அதுவே முதல் அதியவிஷயம்: காணப்படுதல். இந்நேரம் உண்டாக்கப்படுவதே - காணப்படுவதல்ல.

நான் என்னைப் அவர்களுக்காக நேரம் செலவளிக்க ஒதுக்கிக் கொண்ட பிறகு, நான் நன்றாகத் தொடர்பு கொள்ளக் கற்றுக்கொண்டேன். முக்கியமான பாடங்களில் ஒன்று இந்த நேரத்தில் அவர்களுக்கு விரிவுரை வழங்காமலிருப்பதே. இது அம்மாக்கள் மற்றும் அப்பாக்கள் இருவருக்கும் பொருந்தும்: விரிவுரை வேண்டாம். எனது மகன் நிக் ஒரு கதை சொல்ல துவங்கும்போது, நான் எனது கருத்துக்களை திணிப்பதில் உடனடி ஆர்வமுடையவனாய் காணப்பட்டேன். அவர்கள் பேசும்பொழுது நான் கேட்கவேண்டும் என்பதை எனது மனைவி

என்னிடம் அணுகி புரியவைத்தார். அவர்களுக்கு நான்கு அம்ச பிரசங்கம் தேவைப்படவில்லை. அவர்களுக்கு கேட்கும் அப்பா தேவைப்பட்டது.

ஒரு தருணத்தில், நிக் தனது பள்ளியில் வேறொரு மாணவனுடனான ஒரு பிரச்னையை பகிர்ந்துகொண்டான். அவன் முடித்தப்பின்பு, நான் வெறுமனே கூறினேன், "நிக்கோலஸ், இங்கே என்ன செய்வது சரியாக இருக்கும்? ஒருவேளை அந்தப்பிள்ளையினுடைய தந்தையிடம் நாம் பேசவேண்டும்" என்று.

"அப்பா, இதை நானே செய்துவிடுவேன்." அவன் அந்த நேரத்தில் எந்த உள்ளீட்டிற்கும் இணங்கவில்லை.

மூன்று நாட்கள் கழித்து, நிக்கும் அந்த மாணவனும் சண்டை இட்டுக்கொண்டனர், இரண்டு நாட்கள் இருவரும் பள்ளியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டனர். "பார்த்தாயா, நான் இவ்வாறு கூறினேனே" என்பதற்குபதிலாக அவனோடு அமர்ந்து பொறுமையாக, "நிக், அந்த பையனுடைய தந்தையிடம் நாம் பேசியிருந்தால் இப்படி அவனோடு சண்டை போட்டிருக்க அவசியமில்லாமலிருந்திருக்குமே?"

"இல்லை," என்றான் அவன்.

நான் தொடர்ந்து பேசினேன், " சரி உனக்கு பள்ளியிலிருந்து இரண்டு நாட்கள் இடைநீக்கம் கிடைத்துள்ளது. இவ்விரண்டுநாட்களிலும், உன்னை ஒழுங்குபடுத்திக்கொள்வதற்கு என்னிடம் சில திட்டங்கள் உள்ளன."

சிறார்கள் எப்பொழுதும் நாம் கூறும் அறிவுரைகளை கேட்பதில்லை. ஆனால் அத்தருணங்கள் வாழ்க்கை பயிற்சிகளுக்கு அற்புதமான வாய்ப்புகள். எனினும், அவற்றை சாதிக்க, நீங்கள் அவர்களுக்காக இருக்க வேண்டும், அணுகக்கூடியவர்களாய், அவர்களோடு தொடர்புகொள்வது அவசியம்.

உங்களுடைய பிள்ளைகள் பதின்ம வயதை எட்டும்போழுது, அவர்கள் வாதிடுவதற்கு உங்களை அணுகுவதில்லை என்பதை உணர்வீர்கள். நீங்கள் பேச விரும்பும்பொழுது அவர்கள் பேச விருப்பமில்லாதவர்களாக காணப்படலாம். உங்களிடமிருந்து புரிந்துகொள்வதற்கு முற்படுவார்கள், அப்பொழுது உங்களை சரிசெய்துகொள்வதற்கு கற்க வேண்டும்.

எனது மகன்கள் முதிர்ந்த பதின்ம வயதை எட்டியபொழுது, நான் வாரத்திற்கு 2 இரவுகள் ஆலோசனை வழங்குவேன். நான் சோர்வாக இருந்தபோதிலும், எனது பிள்ளைகளுக்காக நான் இருக்க வேண்டும் என்பதை கற்றுக்கொண்டேன். எனது முதல் ஊழியம் என்னை காண வரும் மக்களோ, நான் பேசும் மக்களோ அல்லாமல் - எனது குடும்பமே என்று உணர்ந்தேன். அவர்களுக்கு கற்றுக்கொடுப்பதற்கு தியாகம் தேவை. பெரும்பாலான பதின்ம வயதினருக்கு, அவர்கள் பேச ஆரம்பிக்கும் தருணம் நாம் நித்திரைக்கு கடந்துசெல்லும் நேரமாகும்.

அன்பான தொடர்பு ஆரோக்கியமான தகவல்தொடர்புக்கான அடித்தளம். (பாடம் 1 ஐ பார்க்கவும் அல்லது கூடுதல் விவரங்களுக்கு தொகுதி 2 ஐ மதிப்பாய்வு செய்யவும்.) இது நம் சொந்த நடவடிக்கைகளில் குறுக்கிட தயாராக இருப்பது, நேர்மறையான அணுகுமுறையுடன், இந்த நேரங்களை குழந்தைகளுக்கு எளிதான மற்றும் மிகவும் சுவாரஸ்யமாக்குகிறது என்பதை கண்டறிவது. சிறந்த இடம் சமையலறை மேஜையில், வாழ்க்கை அறையில் அல்லது கொல்லைப்புறத்தில் அமர்ந்திருக்கலாம். ஒவ்வொரு குழந்தையும் வித்தியாசமானது, ஒவ்வொருவரையும் தனித்தனியாக தெரிந்துகொள்ள நீங்கள் நேரம் ஒதுக்க வேண்டும்.

**சுய பரிசோதனை**

மறைமுக அறிவுறுத்தல் கொள்கை மற்றும் அவர்களுக்காக நீங்கள் இருக்கும் முக்கியத்துவத்தை கற்றுக்கொண்ட பிறகு, நீங்கள் செய்ய வேண்டிய மாற்றங்கள் ஏதேனும் உள்ளதா? அப்படியென்றால், மாற்றத்திற்கான விருப்பு ஜெபத்தை எழுதவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**கொள்கை 2: வீட்டிற்கு வெளியில் ஒழுங்குபடுத்தல்**

உபாகமம் 6:7ல் தொடர்ந்து பிள்ளைகளை ஒழுங்குபடுத்தும் மற்றொரு அம்சத்தை காண்பிக்கின்றது: "நீங்கள் வழியில் நடக்கும்போது," நடப்பதென்பது செயல்பாட்டைக் குறிக்கின்றது. காரை ஓட்டும்போது, முற்றத்தில் வெளியே வேலை செய்யும் போது, முகாமிடும் போது, உலாவும்போது அல்லது நாம் எங்கிருந்தாலும் நம் குழந்தைகளுக்கு அறிவுறுத்த தேவன் நிறைய வாய்ப்புகளைத் தருகிறார்.

தேவனுடைய அறிவுறுத்தல் எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் அவருடைய ஆவிக்கு உணர்திறன் உடையதாக இருக்க வேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றார். நாம் தேவனைத் தேடும் போது, அவர் மிகவும் அசாதாரண நேரங்களில் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பின் "ஜன்னல்களை" திறக்கிறார். இந்த வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்ளும்போது, நாம் நமது பயிற்சியில் விடாமுயற்சியுடன் இருக்கிறோம்.

நிக்குடன் உலாவும்பொழுது நாங்கள் நீண்ட நேரம் பேசிக்கொண்டது எனது நினைவுகளில் உள்ளன. தேவனின் படைப்பு மற்றும் அவர் எவ்வளவு அற்புதமானவர் என்பதைப் பற்றிய கருத்துக்களைப் பகிரும்போது நாங்கள் உலாவலை மறந்துவிட்டோம். என் மகன் ஜஸ்டினுடன் முகாமிட்டு டேட்டிங் பற்றிய கருத்து பற்றி மணிக்கணக்கில் பேசியது எனக்கு நினைவிருக்கிறது.என் மகள், கேட்டியுடன், நாங்கள் டிராம்போலைனில் படுத்திருப்போம், இவ்வளவு நேரம் குதித்த பிறகு என் முழங்கால்கள் என்னைக் கொன்று, பேசிக்கொண்டிருந்தோம்.

தேவனின் அற்புதமான உண்மைகள் மற்றும் வாக்குறுதிகளை நம் குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்ள பல அற்புதமான வாய்ப்புகள் உள்ளன. என் குழந்தைகளுடன் சில சிறந்த வேதாகம தியானங்கள் திட்டமிடப்படவில்லை; அவை அன்றாட வாழ்க்கையின் போக்கில் நடந்தன. ஒவ்வொரு வாய்ப்பையும் நாம் உண்மையிலேயே கவனத்தில் கொள்ள வேண்டும்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கீழேயுள்ள வேதப்பகுதியில் இயேசு என்ன செய்து கொண்டிருந்தார், அவர் எப்படி அவருடைய சீடர்களுக்காக எப்பொழுதும் இருந்தார், மற்றும் வார்த்தையைப் பகிர்வதை அவர் எவ்வாறு அணுகினார் என்பதை விவரிக்கவும்.

இயேசு அன்றையதினமே வீட்டிலிருந்து புறப்பட்டுப்போய், கடலோரத்திலே உட்கார்ந்தார். திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், அவர் படவில் ஏறி உட்கார்ந்தார்; ஜனங்களெல்லாரும் கரையிலே நின்றார்கள். அவர் அநேக விஷேசங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்; கேளுங்கள்,

விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். (மத்தேயு 13:1-3)

____________________________________________

____________________________________________

____________________________________________

***செயல் திட்டம் 1***

எந்த வெளிப்புற நடவடிக்கைகளின் போது நீங்கள் உங்கள் குழந்தைகளுடன் வேதாகம கொள்கைகளைக் பகிர முடியும்? இந்த வாய்ப்புகள் உங்கள் வழியில் வரும்போது உங்களுக்கு நினைவூட்டும்படி தேவனிடம் கேளுங்கள். உங்கள் குழந்தையுடன் நீங்கள் செய்யும் செயலில் கிறிஸ்துவையும் அவரது முன்னோக்கையும் கொண்டுவர தைரியத்தையும் ஞானத்தையும் அவரிடம் கேளுங்கள்.

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

**கொள்கை 3: காலையிலும் மாலையிலும் ஒழுங்குபடுத்தல்**

"நீங்கள் நித்திரைக்கு செல்லும்போதும், காலையில் எழும்போதும்" உங்களுடைய பிள்ளைகளை ஒழுங்குபடுத்துதலில் கவனம்செலுத்தவேண்டுமென்று உபாகமம் 6:7 கூறுகின்றது. உங்கள் படுக்கைக்கு செல்லும் முன்பும் யோசித்த கடைசி காரியத்தைக் குறித்தும் காலையில் எழும்பொழுதும் யோசித்த முதல் காரியத்தைக் குறித்தும் எண்ணிப்பாருங்கள். இவ்வுலகத்தின் காரியங்கள் நம்மை ஆட்கொண்டு தேவனை நம்முடைய மனதிலிருந்து வெளியேற்றி, அவர் நமது முன்னுரிமை பட்டியலில் தன்னிச்சையாக கடைசியாகின்றார். தேவனை நினைவுகொள்ளும் விதமாய் காலையிலும் மாலையிலும் குறைந்தபட்சம் வேதத்தை ஒப்பிக்க யூதர்கள் அறிவுறுத்தப்பட்டனர். இச்சூழலில், பெற்றோர் முன்மாதிரிகளாய் விளங்கலாம். தேவனிடமான நம்முடைய அர்ப்பணிப்பை வளர்த்து, அதே பழக்கங்களை வளர்க்க நம் குழந்தைகளுக்கும் உதவுவதே குறிக்கோள்.

*செயல் திட்டம் 2*

காலையிலும் மாலையிலும் உங்கள் குழந்தைகளுடன் நீங்கள் பிரார்த்தனை செய்கிறீர்களா? நீங்கள் அவர்களுடன் எத்தனை முறை பிரார்த்தனை செய்கிறீர்கள்? உங்களுக்கு நேரம் இல்லை என்று நீங்கள் நினைத்தால், அவர்களை பள்ளிக்கு அழைத்துச் செல்லும்போது அவர்களுடன் பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் எப்போது அவர்களுடன் பிரார்த்தனை செய்ய ஆரம்பிக்கலாம், நாட்கள் அல்லது நேரங்களை பட்டியலிடுங்கள்.

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

நான் பள்ளி செல்லும் வழியில் மற்றும் ஒவ்வொரு மாலையும் படுக்கைக்கு செல்லும் முன் என் குழந்தைகளுடன் பிரார்த்தனை செய்தேன். அவர்கள் எங்கள் அறைக்குள் வருவார்கள், படுக்கையைச் சுற்றி கூடுவார்கள், நாங்கள் அனைவரும் ஒன்றாக பிரார்த்தனை செய்வோம். என் சிறுவர்கள் பதின்வயதினர் ஆனபோது, எங்கள் பிரார்த்தனை நேரத்திற்குப் பிறகு இரவு 10:30 அல்லது 11:00 வரை நாங்கள் அடிக்கடி சிறந்த விவாதங்களை நடத்துவோம். குழந்தைகள் பெரும்பாலும் தங்கள் நண்பர்கள், அவர்கள் கடந்து செல்லும் போராட்டங்கள் அல்லது மோசமான தேர்வுகள் பற்றி பேச விரும்பினர். உங்கள் பதின்மவயது பிள்ளைகள் உங்களுடன் பேச விரும்புவது ஒரு பெரிய விஷயம். கர்த்தரை நம்புவதன் மூலமும், இந்தக் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதன் மூலமும், தேவன் என் குழந்தைகளில் ஒரு அற்புதமான வேலையைச் செய்வதை நான் கண்டேன். இந்த ஆசீர்வதிக்கப்பட்ட காலத்தின் பலன்களை நான் இன்னும் அறுவடை செய்கிறேன், இது உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் கடவுள் விருப்பம் என்று எனக்குத் தெரியும்.

வேதாகமம் கூறுகின்றது "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் " (2 தீமோத்தேயு 4:2). நாம் எப்பொழுதும் வாய்ப்புகளைத் தேட வேண்டும், தேவனின் கட்டளையை கவனத்தில் கொண்டு நாம் நம் குழந்தைகளுக்கு விடாமுயற்சியுடனும் தொடர்ச்சியாகவும் கற்பிக்க வேண்டும்.

***செயல் திட்டம் 3***

இந்த வாரம், உங்கள் குழந்தைகளுடன் கவனமாக இருங்கள். உதாரணமாக, அவர்களை எங்காவது கூட்டிச்செல்லும் போது அல்லது ஒரு பயணத்தின் போது, ஒரு கற்பிக்கும் வாய்ப்பை தேவனிடம் கேளுங்கள். வேதாகம கொள்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் இந்த நேரங்களை நீங்கள் எவ்வாறு திறம்பட பயன்படுத்தத் தொடங்கலாம் என்பதை கணவன் மனைவியாக விவாதித்து அவற்றை இங்கே எழுதுங்கள்.

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

கொலோசேயர் 1:10 கூறுகின்றது, "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்". இது நடப்பதற்கு, நாம் நமது அடித்தளத்திற்கு திரும்பி செல்ல வேண்டும். நம்முடைய தியான வேளையிலும் கீழ்ப்படித்தலிலும், தேவனின் மீதுள்ள நமது அறிவை பெருக்கி, அவரிடம் கிட்டிச்சேர்ந்து, நற்கிரியைகளை செய்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றோம்.

நான் வேதாகமப் பகுதியை நினைவுபடுத்துவதற்கு சிரமப்படும், எனது நினைவிலிருந்து மேற்கோள் காண்பிக்க முடியாத நிலையில், கொள்கைகளை தெளிவாக நினைவுகூருவேன்.

அன்று காலையில் என் தியான நேரத்தில் நான் படித்ததை நாள் முழுவதும் என்னால் எளிதாக நினைவில் கொள்ள முடியும். பல சமயங்களில், என் குழந்தைகளுடன் நான் காலையில் கற்றுக்கொண்ட விஷயங்களுடன் நேரடியாக தொடர்புடைய விஷயங்கள் வந்தன. வாய்ப்புகள் கிடைக்கும்போது, நான் படித்ததை நினைவில் வைத்து அதை என் குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்வேன். இதன் விளைவாக, நான் ஒரு அற்புதமான இறையியல் வல்லுனராக இருக்கிறேன் என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். உண்மை என்னவென்றால், நான் இல்லை. எனக்கு சரியான அடித்தளம் உள்ளது.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

சங்கீதக்காரரின் அணுகுமுறையை காலையிலும் மாலையிலும் அடையாளம் காணவும். அவர் என்ன செய்து கொண்டிருந்தார், அது உங்கள் தியான நேரத்திற்கு எப்படி உதவும்?

> கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன். (சங்கீதம் 5:3)

___

___

___

> அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான்
> தியானம்பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார். (சங்கீதம் 55:17)

___

___

___

> பத்துநரம்பு வீணையினாலும், தம்புருவினாலும், தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும். (சங்கீதம் 92:2)

___

___

___

> அதிகாலையில் நான் எழுந்து சத்தமிட்டேன்; உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன். (சங்கீதம் 119:147)

___

___

___

**கொள்கை 4: சுய மாதிரியின்வழியாக ஒழுங்குபடுத்தல்**

அவருடைய போதனைகளை நாம் தொடர்ந்து மனதில் வைத்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். உபாகமம் 6: 8 கூறுகிறது, "அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது." இஸ்ரவேலர்கள் வேதாகமத்தை வார்த்தைக்கு வார்த்தை மனப்பாடம்

செய்ததுமாதிரமல்லாமல், அதை உள்வாங்குவதற்காக அதை மீண்டும் மீண்டும் ஒத்திகை பார்த்து, அவர்கள் காணக்கூடிய நினைவூட்டல்களையும் அணிய வேண்டுமென்பதே. மறக்கும் மற்றும் புறக்கணிக்கும் நமது மனித போக்கு தேவனுக்கு தெரியும்.

எல்லாவற்றிற்கும் நாம் நம் கைகளைப் பயன்படுத்துவதால், ஏதாவது ஒன்றைக் கட்டுவது நாள் முழுவதும் தொடர்ச்சியான நினைவூட்டலாக இருக்கும். முகப்புப் பை என்பது நெற்றியில் அணியப்படும் ஒரு சிறிய தோல் பை, வேதாமத்தில் நிலையான தியானத்தைக் குறிக்கிறது. உங்கள் முகத்திற்கு முன்னால் தொங்கிக்கொண்டிருக்கும் ஒன்றை நீங்கள் மறந்திருக்க வாய்ப்பில்லை. இந்த தொடர்ச்சியான நினைவூட்டல்கள், பெற்றோர்களாகிய நம்மிடமிருந்து தேவன் என்ன விரும்புகிறார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு: தனிப்பட்ட உதாரணம் மற்றும் தேவனின் அன்பையும் வார்த்தையையும் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளைத் தேடுவதன் மூலம், நம் குழந்தைகளை ஒழுங்குபடுத்தும் நமது பொறுப்பிருப்பதினால் எல்லா நேரங்களிலும் கவனத்துடன் இருக்க வேண்டும்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

சங்கீதக்காரருடைய வார்த்தைகள் நீங்கள் என்ன கற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பது பொருந்துகின்றன என்று விவரிக்கவும்.

> துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங்கீதம் 1:1-3)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

நீங்கள் தேவனுக்கு முதலிடம் கொடுத்தால், கஷ்டம் மற்றும் சோதனையின் போது அவர் உங்களை ஆசீர்வதிப்பார். உங்கள் இலைகள் பச்சை நிறமாக இருக்கும் மற்றும் வறட்சி காலங்களில் கூட நீங்கள் கனிகொடுப்பீர்கள்.

உங்கள் குழந்தைகளுக்கு ஒரு தெய்வீக முன்மாதிரியாக இருக்க உதவும் பின்வரும் வேத வசனங்களிலிருந்து வேதாகம கொள்கைகளை பட்டியலிடுங்கள்.

> நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்துக்குள் பிரவேசித்து அதைச் சுதந்தரிக்கும்படிக்கும், கர்த்தர் உங்கள் பிதாக்களுக்கும் அவர்கள் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீங்கள் நீடித்து வாழும்படிக்கும், இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வீர்களாக. (உபாகமம் 11:9)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள். (நீதிமொழிகள் 3:3)

**கொள்கை 5: தேவபக்தியுள்ள வீட்டினாலே ஒழுங்குபடுத்தல்**
இவ்வைந்தாவது கொள்கை அடுத்த பாடத்தில் தியானிக்கப்படும்.

**பாடம் 9**

**தெய்வீக வீட்டினை அமைத்தல்**

உபாகமத்தில் நமது வேதப்பகுதியில் இருந்து ஐந்தாவது கொள்கை தேவனின் பிரமாணங்களைப் பற்றி கூறுகிறது, "அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக." (6:9). மெசுவா என்ற எபிரேய வார்த்தையிலிருந்து கதவு கம்பங்கள் என்பது, அதன் பொருள் "ஒரு கதவின் நிமிர்ந்த கட்டமைப்பு அல்லது ஒரு வாயில் அல்லது ஜன்னலின் பக்க இடுகைகள்". டிண்டேல் வேதாகம அகராதியானது பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றது:

> உபாகமம் 6:9லும் 11:20லும் வீடுகளின் கதவுகளிலும் நகர வாயில்களிலும் கட்டளைகளை எழுத எபிரேயர்கள் அறிவுறுத்தப்பட்டனர். இன்றுவறையிலும் யூத சமுதாயத்தில் இப்பயிற்சி பின்பற்றப்படுகின்றது. ஒவ்வொரு யூத வீட்டிலும் ஒரு சிறிய உலோகம் அல்லது மரக் கொள்கலன் வீட்டின் வாசலில் தோள்பட்டை உயரத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இந்த கொள்கலன், மெசுசா என்று அறியப்பட்டது, ஒரு சிறிய துண்டு காகிதத்தின் உள்ளே ஒரு பக்கத்தில் உபாகமம் 6: 4-9, மற்றும் 11: 13-21 வசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன, மறுபுறம் ஷடாய் என்ற வார்த்தையுடன், எல்லாம் வல்ல தேவனின் எபிரேய பெயர் காணப்பட்டது.

வேதத்தின் இந்த பகுதிகள், ஷெமாவின் ஒரு பகுதி என்றும் அழைக்கப்படுகின்றன, அவைகள் கீழ்ப்படிய வேண்டிய அடிப்படை உண்மைகள். இந்த வேதப்பகுதிகளை கதவுகம்பங்களில் சரி செய்ய தேவன் விரும்பினார் என்று நாம் முடிவு செய்யலாம், அதனால் வீட்டிற்குள் நுழையும் ஒவ்வொருவரும் தேவனுக்கு சமர்ப்பணம் செய்யவும் மற்றும் அந்த வார்த்தையை அந்த வீட்டின் அர்ப்பணிப்புடன் நினைவுபடுத்துவார்கள். எல்லாம் அவரது ஒப்புதலை சந்திக்க வேண்டும்.

உங்கள் வீட்டிற்குள் நுழையும் அனைவரும், உங்கள் நண்பர்கள் மற்றும் உங்கள் குழந்தைகளின் நண்பர்கள், உங்கள் பொருட்கள் மற்றும் உங்கள் குழந்தைகளின் பொருட்கள் அனைத்தும் கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும். நமது வீட்டிற்குள் என்னென்னவற்றை அனுமதிக்கின்றோம் என்று கண்காணிப்பது நமது பிள்ளைகளை ஒழுங்குபடுத்துதலில் ஒரு பகுதியாகும். தேவன் அவரை மகிமைப்படுத்தும் ஒரு நேர்மையான சூழலாக நமது வீடுகள் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார். உபாகம புஸ்தகத்தை மோசே எழுதி சுமார் 40 வருடங்களுக்கு பிறகு, இஸ்ரவேல் ஜனங்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் நுழைவதற்கு தயாராகின்றனர். அவர்களுடைய தலைவனான யோசுவா ஒரு தேர்வு வடிவத்தில் ஒரு சவாலை அமைத்தான்.

> கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான். (யோசுவா 24:15)

தனது வீட்டின் தலைவனாக, தனக்கு முன்னாள் தேர்வுகள் இருக்கும் என்று யோசுவா அறிந்திருந்தான். இன்றைய உலகத்தைப்போலவே, கர்த்தரை சேவிக்காத, அறியாத, அவர் கோரிய ஒழுக்கங்களும் மதிப்புகளும் இல்லாமல் அநேக ஜனங்கள் இருந்தனர்.

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

கீழுள்ள வசனத்தில் என்னென்ன தேர்வுகள் அளிக்கப்பட்டன என்று பட்டியலிடவும். சரியான தேர்வினை எடுப்பது ஏன் முக்கியம்வாய்ந்ததாயிருந்தது?

> நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு. (உபாகம 30:19)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

> அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை. (1 ராஜாக்கள் 18:21)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

> இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து ஒருவனைச் சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. (மத்தேயு 6:24)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**உலகப்பிரகாரமான செல்வாக்குகள்**

ரோமர் 1ல் 1 அந்த காலக்கட்டத்தில் நடந்து கொண்டிருந்த பாவமான நடத்தைகளின் நீண்ட பட்டியலை உள்ளடக்கியது, அவை இன்றும் நடந்து கொண்டிருக்கின்றன. அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு கடுமையான முடிவிற்கு வருகின்றார்: "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்." (ரோமர் 1:32). வீட்டினுள் என்ன நடந்தாலும் அவற்றின் பொறுப்பு பெற்றோர்களாகிய நமதே. இந்த வேதாகம்ப் பகுதியின்படி, நாம் நம்முடைய சுய தேர்வுகளுக்காகவும் மற்றும் நமது குடும்பத்தில் எவற்றை அங்கீகரிக்கிறோம் என்பவைகளுக்காக நியாயம்தீர்க்கப்படுகிறோம். நீங்கள் இந்த பாவங்களைச் செய்தால் மட்டுமல்ல, அவற்றை அங்கீகரிப்பதில் மகிழ்ச்சியடைந்தாலும் நீங்கள் குற்றவாளிகளே உங்கள் வீட்டில் அனுபவிக்கும் பொழுதுபோக்கு பற்றி சிந்தியுங்கள்:

தொலைக்காட்சி, திரைப்படங்கள், வீடியோ கேம்கள், இசை, பத்திரிக்கைகள் மற்றும் பிற ஊடகங்கள்.

பெற்றோர் அடிக்கடி கூறுகிறார்கள், "உங்களுக்கு பதினெட்டு வயதாகும்போது, இந்த வகை திரைப்படத்தை நீங்கள் பார்க்கலாம்." ஆனால் வயது பாவத்திற்கு தகுதியானது அல்ல என்பதை நாம் உணர வேண்டும். இது எந்த வயதிலும் பொருத்தமற்ற ஒன்றைக் குறிப்பது போல் தெரிகிறது - இது நமக்கும் நம் குழந்தைகளுக்கும் உண்மை. ஒழுக்கக்கேடு எந்த வயதிலும், எந்த நேரத்திலும் பொருத்தமற்றது, அது நிறுத்தப்பட வேண்டும்.

நான் ஒரு பெற்றோர் வகுப்பைக் கற்பித்த பிறகு ஒரு தந்தை என்னிடம் வந்தார், அவரும் அவரது பதின்ம வயது மகனும் இசையைப் பற்றி ஒரு பெரிய வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்று விளக்கினார். அவரது மகன், "அப்பா, உங்கள் பிங்க் பிலோய்ட் ஆல்பங்களைப் பற்றி என்ன? நான் அந்தப் பாடல்களின் வரிகளைப் படித்தேன், அவை மோசமானவை. நான் கேட்பதை விட அவை சிறந்தவை அல்ல." அந்த தந்தை என்னிடம் சொன்னார் அந்த பிங்க் பிலோய்ட் ஆல்பங்கள் குப்பைத்தொட்டியில் முடிந்தன, ஏனென்றால் கபடத்தன்மை கிளர்ச்சியை உருவாக்குகிறது என்று அவர் அறிந்திருந்தார்.

இன்று பல கிறிஸ்தவர்கள் தசமபாகத்தை விட கேபிள் டிவிக்கு அதிக பணம் செலுத்துகிறார்கள். நாம் அவர் முன் நிற்கும்போது தேவன் நமக்கு என்ன சொல்வார் என்று கற்பனை செய்து பாருங்கள்: "உங்களுடைய மற்றும் உங்கள் குழந்தைகளின் மனதை விஷமாக்கிய கேபிளுக்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் கிட்டத்தட்ட 3600 ரூபாய் செலுத்தினீர்கள், நீங்கள் என் தேவாலயத்திற்கு எவ்வளவு கொடுத்தீர்கள்?" ஐயோ!

ஆச்சரியப்படும் விதமாக பல கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் அருகில் அமர்ந்து, பாலியல் நுணுக்கங்கள் மற்றும் அழிவுகரமான உலக தத்துவங்கள் நிறைந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து சிரிக்கிறார்கள். இன்று நாம் இளம் பெண்கள் ஆண்களுடன் "அறை" பங்கிட்டுக்கொள்ளும் ஒரு தொற்றுநோய் இருப்பதில் ஆச்சரியமில்லை - ஒரு பேரழிவு நடக்க காத்திருக்கிறது. இதற்கிடையில், நமது ஊடகங்கள் இந்த வகையான தத்துவத்தை நம் குழந்தைகளின் மனதில் செலுத்துகின்றன, நாம் கதவைத் திறந்து உள்ளே அனுமதிக்கிறோம். நாம் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

என் மனைவி ஒரு மகளிர் பத்திரிகையைப் பெற்றார், நான் அதை சாதாரணமாகப் பார்த்தேன். உங்கள் "மனிதனை"-உங்கள் கணவரை அல்ல-ஆனால் உங்கள் மனிதனை எப்படி மகிழ்விப்பது என்பது பற்றிய ஒரு கட்டுரையில் நான் காண நேரிட்டது. அந்த கட்டுரை ஒரு நிலையான மகளிர் இதழில், அச்சடிக்கப்பட்ட ஆபாச புத்தகமாக இருந்தது.

பெண்களே, நீங்கள் அந்த வகையான கட்டுரைகளைப் படிக்கலாம் மற்றும் அத்தகைய இதழ்களில் உள்ள எந்த உள்ளடக்கத்தையும் பார்த்து அவை உங்களை பாதிக்காது என்று நினைக்கலாம், ஆனால் அவை பாதிக்கின்றன. ஆண்களைவிட பெண்கள் பெரும்பாலும் பெண்களைப் உற்றுப் பார்க்கிறார்கள். நீங்கள் ஒரு அழகான பெண்ணின் உடலைப் பார்க்கும்போது, ஆண்களைப் போல் நீங்கள் சிந்திக்கவில்லை, நீங்கள் இச்சிப்பதில்லை. நீங்கள் நினைக்கின்றீர்கள், நான் அவளை வெறுக்கிறேன். அவள் 3 குழந்தைகளை பெரும் வரை காத்திருங்கள் என்று. முதிர்ந்த ஆண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் கூட ஒரு பெண் தொலைக்காட்சியிலோ அல்லது ஒரு பத்திரிகையிலோ ஈர்க்கும் வகையில் ஆடை அணிந்திருப்பதைக் காணும்போது, அவர்களின் எதிர்வினை வேறுபடுகின்றது. இன்றைய உலகில், பாலியல் வெளிப்படையான படங்கள் அல்லது எழுதப்பட்ட உள்ளடக்கம் எல்லா இடங்களிலும் உள்ளது: விளம்பர பலகைகள், செல்போன்கள், டிவி விளம்பரங்கள், ஆன்லைன் மற்றும் ஒவ்வொரு வகை பத்திரிகைகளிலும்.

காலம் மாறிவிட்டது. நான் இளமையாக இருந்தபோது, ஞாயிற்றுக்கிழமை இரவுகளில் நாங்கள் பார்த்தது டிஸ்னி. எழுபதுகளில், உங்கள் அம்மா மற்றும் அப்பாவுடன் டிஸ்னியைப் பார்ப்பது மற்றும் ஒரு விக்டோரியாவின் ரகசிய விளம்பர தொடர் வருவதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? எனது தந்தை தொலைகாட்சி பெட்டியை சுட்டுவீழ்த்தியிருப்பார், தொலைக்காட்சி நிலையத்தில் பெரிய சத்தத்தைக் கேட்டிருப்பார்கள். அன்றோடு டிஸ்னி காணும் இரவு நிறைவுற்றிருக்கும். திரைப்படங்களில் உள்ள உள்ளடக்கங்களை கூர்ந்து கவனித்தீர்களேயானால், பல திரைப்படங்களில் அதிக அளவு பாலியல், பாலியல் நுணுக்கங்களும், முணுமுணுத்தல்களும் சாதாரண திரைப்படங்களாக விளம்பரப்படுத்தப்படுகின்றன. நமது பிள்ளைகளுக்கு என்ன செயகின்றான் என்று சாத்தானுக்கு நன்கு தெரியும். நீங்கள் எச்சரிக்கையாயிருந்து, யாரை நம்புவதென்று அறியவேண்டும்.

திரைப்படம் தேர்வு செய்வதில் எனது மனைவியும் நானும் ஒரு சில கிறிஸ்தவ நண்பர்களை நம்புவதுண்டு. நான் பிள்ளைகள் காணக்கூடாது திரைப்படங்களை பார்த்துள்ளேனா? நிச்சயமாக. ஆனால் நான் அவற்றை கவனமாக உள்ளடக்கத்தின் வாயிலாக தேர்வுசெய்வேன். அதேபோல, உங்களுக்கும் உங்கள் தம்பதிக்கிடையிலும் கர்த்தரிடத்திற்கும் மத்தியில் இவற்றை அனுமதிப்பீர்களா என்று முடிவு செய்ய வேண்டும். நினைவிருக்கட்டும், பாசாங்குத்தனம் கிளர்ச்சியை உருவாக்குகிறது.

**அவ்வளவு நுட்பமான முக்கியத்துவம் தேவையில்லை**

எனது மகன் ஜஸ்டினுக்கு பன்னிரெண்டு வயதிருக்கும்பொழுது ஒரு நாள் நான் அவனுடைய அறைக்குச் சென்றபோது, அவன் ஒரு வீடியோ கேம் விளையாடினான். அவ்வப்போது, கதாபாத்திரங்கள் ஒருவருக்கொருவர் நடக்கும்போது சிறிய தலைப்புகள் தோன்றும். நான் ஜஸ்டினின் தோலுக்குப்பின்புறமிருந்து பார்த்துக் கொண்டிருந்தபோது, சில கெட்ட வார்த்தைகள் தோன்றின, "ஜஸ்டின் அது என்ன?" என்று நான் வினவினேன்.

"ஓ அப்பா, நான் அவற்றை வாசிப்பதில்லை".

"ஆனால் ஒரு நிமிடம், எவ்வளவு வார்த்தைகள் அப்படி தோன்றுகின்றன?"

"கேம் முழுவதும் அவர்கள் உபயோகித்துள்ளனர்."

"அதை இப்பொழுதே நிறுத்து," என்று நான் சொல்லிவிட்டு, "யாருடைய கேம் இது என்று வினவினேன்.

"பள்ளிக்கூடத்தில் என்னுடைய நண்பன் கடனாக வழங்கினான்."

"இதை இனி நமது வீட்டில் நான் பார்க்கவேகூடாது," என்றேன்.

நிக் டீனேஜராக இருந்தபோது, ஒரு முறை நான் வீட்டிற்கு வந்தேன், அவனுடைய அறையில் ஐந்து குழந்தைகள் இருந்தனர், அவர்கள் தலைதெறிக்க சிரித்துக்கொண்டே விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் அவர்களுடைய நண்பன் ஒருவனின் வீடியோ கேமை விளையாடினார்கள். இந்த விளையாட்டில் ஒரு அரைகுறையான உடையில் ஒரு நல்ல பண்புள்ள பெண் உதைத்தல், படப்பிடிப்பு மற்றும் அனைத்து வகையான கெட்டவர்களையும் அடித்துக்கொண்டிருந்தார். அவர் இப்படி செய்துகொண்டிருந்தபொழுது அவருடைய மார்பகங்கள் அங்குமிங்குமாய் குலுங்கிக்கொண்டிருந்தன. இதைக்கண்டு பிள்ளைகள் குலுங்கிச்சிரித்தவண்ணம் காணப்பட்டனர். வேடிக்கையான விஷயமாக இருந்தாலும் அது சரியானதல்ல என்று நான் அவனோடு பகிர்ந்துகொண்டேன்.

"இருங்க அப்பா இருங்க". அவன் உடனே அந்த வீடியோ கேம் அமைப்புக்குள் சென்று அமைப்பை மாற்றினான், அப்பெண்மணியின் மார்புகள் குலுங்காதவண்ணமிருந்தன. இவ்விளையாட்டை மீண்டும் இயக்கி என்னிடம் காண்பித்தான்.

ஆனால் மகனே நிக், அந்த அமைப்பை ஏன் அவர்கள் வழங்கியுள்ளனர் என்று புரிகின்றதா? அதனை வலியுறுத்தும் வண்ணமாக காணப்படவேயாகும் என்று கூறினேன்.

அன்றிலிருந்து நான் ஒரு புதிய விதியை செயல்படுத்தினேன், என்னுடைய ஒப்புதல் இல்லாமல் இனி வீட்டினுள் வீடியோ கேம் இல்லையென்றேன்.

வீடியோ கேம்களை விட இணையம் ஆபத்தானது. உங்கள் குழந்தைகளை (மற்றும் அப்பாக்களை) ஆபாசத்திலிருந்து பாதுகாக்கும் மென்பொருள் உங்களிடம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். 1998 முதல் 2003 வரை, 240 மில்லியனுக்கும் அதிகமான ஆபாச வலைப்பக்கங்கள் ஒரு நாளைக்கு நூறாயிரத்திற்கும் அதிகமாக இணையத்தில் சேர்க்கப்பட்டன. ஒவ்வொரு நாளும் ஆபாசத் தொழில் உலகின் புத்திசாலித்தனமான நபர்களைப் பயன்படுத்தி உங்கள் பாதுகாப்பைச் சுற்றியுள்ள வழிகளைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறது.

ஆபாசமானது நம் பதின்ம வயது சிறுவர்களிடையே ஒரு தொற்றுநோயாகும், மேலும் இது ஹெராயின் போதைக்கு இணையாய் அடிமையூட்டக்கூடியது. நாம் இணக்கமாக இருக்க வேண்டும் மற்றும் ஈடுபட வேண்டும். அவர்களின் சமூக ஊடகங்கள், அரட்டை அறைகள் மற்றும் பிற பயன்பாடுகளை நாம் கண்காணிக்க வேண்டும். ஸ்மார்ட் போன்கள் நம் குழந்தைகளுக்கு இன்னும் பல சோதனைகளுக்கு ஒரு கதவைத் திறந்துள்ளது. பயன்பாடுகள் மற்றும் சேவை வழங்குநர்களால் வழங்கப்பட்ட பெற்றோர் கட்டுப்பாடுகளின் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கூட, அவற்றின் செயல்திறன் மற்றும் கிடைக்கக்கூடிய தகவல்தொடர்புகளை நாம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். நாம் ஈடுபட வேண்டும் மற்றும் சாத்தியமான தீமையின் இந்த வழிகளைப் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும், அது நம் குழந்தைகளை சிதைக்கும்.

**தனியுரிமைப் பிரச்சனை**

பெரும்பாலான பெற்றோர் கேட்கும் வார்த்தையானது, "என் அறையை விட்டு வெளியேறுங்கள்" அல்லது அதனை ஒத்த ஏதேனும். நான் உள்பட. நிக் 13 வயதாயிருந்தபொழுது, நான் அவனுடைய அறையில் இருந்தவனோடு இவ்வீட்டில் எவ்வகை இசைகேட்கலாம் என்ற விவாதத்தின் முடிவில், அவன் என்னிடம், "சரி, எனது அறையைவிட்டு வெளியேறுவீர்களா?" என்று.

நான் அவனது நாற்காலியில் அமர்ந்து, "என்ன? இது உனது அறை என்று யார் சொன்னது?" அவன் எனக்கு பதில் சொல்லவில்லை, அதனால் நான் தொடர்ந்தேன், "நிக், அந்த பொய் எங்கிருந்து வந்தது என்று சொல்: நரகத்தின் குழியிலிருந்து என்றேன். நான் கர்த்தருக்கு முன் நிற்கும்போது, நான் இறக்கும் போது, 'தேவனே குறுந்தகடுகளும் ஒளி நாடாக்களும் என்னுடையவை; என் தந்தை அதற்க்கு பொறுப்பல்ல' என்று கூறி, நீ என் அருகில் நிற்க மாட்டாய்.

இந்த வீட்டில் உள்ள எல்லாவற்றிற்கும் தேவன் என்னை 100 சதவிகிதம் பொறுப்பலித்துள்ளார். உனக்கு வெவ்வேறு நலன்கள் உள்ளன, ஆனால் அவைகள் என் வீட்டில் ஒரு பாதிரியாராக நான் நிர்ணயித்த தரத்தை பூர்த்தி செய்யாவிட்டால், அந்த விஷயங்கள் என் வீட்டில் அனுமதிக்கப்படாது. இந்த அறை ஒருபோதும் உன்னுடையதாக இருக்காது. இந்த அறை என்னுடையது. நான் உன்னை இங்கு வாழ அனுமதித்தது, நீ என் குழந்தை, அதனால் நான் உன்னை இங்கு வாழ அனுமதிக்கிறேன். நீ பதின்மூன்று அல்லது முப்பத்தைந்து வயதாக இருந்தாலும் பரவாயில்லை. நீ என் வீட்டில் வசிக்கிவேண்டுமென்றால், என் நிலையே இங்கிருக்கும். எனவே தயவுசெய்து, நிக்கோலஸ், அந்த பொய்யை மீண்டும் கேட்காதே."

**பதிவுகளில் ஆழமாக தேடுங்கள்**

வீட்டின் தலைவனாக யாக்கோபு என்ன செய்தார்? அவருடைய அக்கறை என்னவாயிருந்தது, அது ஏன் அவ்வளவு முக்கியம்வாய்ந்ததகக இருந்தது?

> அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடேகூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி: உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள். நாம் எழுந்து பெத்தேலுக்குப் போவோம் வாருங்கள்; எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச்செய்து, நான் நடந்த வழியிலே என்னோடேகூட இருந்த தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேன் என்றான். (ஆதியாகமம் 35:2-3)

***செயல் திட்டம்***

இந்தப் பாடத்தைப் படித்த பிறகு நீங்கள் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றி விவாதிக்க கணவனும் மனைவியும் நேரத்தை செலவிடுங்கள். தொலைகாட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், விளையாட்டுகள், சுவரொட்டிகள், புத்தகங்கள், இணையம், சமூக ஊடகங்கள், செல்போன் செயலிகள் அல்லது தேவன் உங்களுக்குக் காட்டும் எதையும் மாற்ற வேண்டும். உங்கள் மாற்றங்களை பட்டியலிட்டு, விஷயங்களைச் சரியாகச் செய்வதற்கான உங்கள் உறுதிப்பாட்டை எழுதுங்கள். இணைப்பு L ஐப் பார்க்கவும்: பொருத்தமற்ற பொழுதுபோக்கைக்குறித்ததான கூடுதல் தகவலுக்கு.

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

அவர்களின் தகவல்தொடர்புகளை கண்காணிக்க உதவும் பாதுகாப்பு மென்பொருளைப் பற்றி விசாரிக்கவும் மேலும் அறியவும் உறுதிபூண்டு கொள்ளுங்கள். எங்கள் வலைத்தளமான FDM.world இல் மேலும் தகவலைக் கண்டறியவும்.

வேதாகம அறிவு வர்ணனை உபாகமத்திலிருந்து இந்த ஐந்து சீடத்துவக் கொள்கைகளைப் பற்றிய நமது ஆய்வை முடிப்பதற்கு பெரும் நுண்ணறிவை வழங்குகிறது:

> தேவனின் மக்கள் இந்த கட்டளைகளை தியானிப்பதற்கும், அவற்றை தங்கள் இதயங்களில் வைத்திருப்பதற்கும் பொறுப்பாக இருந்தனர். இது அவர்களுக்கு சட்டத்தைப் புரிந்துகொள்ளவும் சரியாகப் பயன்படுத்தவும் உதவியது. பின்னர் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் இருதயத்திலும் அவர்களை ஈர்க்கும் நிலையில் இருந்தனர். குழந்தைகளின் தார்மீக மற்றும் வேதாகம கல்வி ஒவ்வொரு நாளும் ஒரு சாதாரண கற்பித்தல் காலத்தில் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது, ஆனால் பெற்றோர்கள் தங்கள் சொந்த வாழ்க்கை மற்றும் குழந்தைகள் மீதான அக்கறையின் காரணமாக தேவனையும் அவருடைய வார்த்தையையும் ஒரு உரையாடலின் இயல்பான தலைப்பாக ஆக்கினார்கள். இது பகலில் எங்கும் எப்போது வேண்டுமானாலும் ஏற்படும்.

**பாடம் 10**

**ஒன்று பட்டிருத்தல்**

2000 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்களின்படி, இரட்சிக்கப்படாத குடும்பத்தில் ஒரு தாய் இயேசு கிறிஸ்துவை முதலில் ஏற்றுக்கொள்ளும்போது, மற்ற குடும்பத்தினரும் கிறிஸ்துவை அறிய 17 சதவிகிதம் வாய்ப்பு உள்ளது. ஒரு குடும்பத்தில் தலைவராகிய தந்தை இயேசு கிறிஸ்துவைத் தனது எஜமானராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளும்போது, மற்ற குடும்பத்தினர் கிறிஸ்துவை அறிந்து கொள்ள 93 சதவிகிதம் வாய்ப்பு உள்ளது.

அப்பாக்களே, தேவனிடமிருந்து உங்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட, அதிகாரம் உண்டு. இதை பயன்படுத்துங்கள். உங்கள் பொறுப்பை விட்டுக்கொடுக்க ஆசைப்படாதீர்கள். இக்கொள்கைகளை நாம் கற்கும்போது, இதனை நான் செய்ய இயலாது என்று நினைக்காதிருங்கள். எனது மனைவி என்னைக்காட்டிலும் சிறந்த ஆவிக்குரிய தலைவர் என்றெண்ணாதீர்கள். என்னைவிட அவருக்கு வேதககமம் நன்கு அறிந்த ஒன்றாகியதினால் அவரே செய்யட்டும் என்று விட்டுவிடுவேன். உங்கள் பாதுகாப்பின்மையை மறந்து விடுங்கள். அதைத்தான் தேவன் நியமித்து அபிஷேகித்துள்ளார். அவர் உங்களுக்கு அதிகாரம் அளிப்பார். இயேசு அவரைப்போலவே நீங்களும் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றார். சீடர்களின் முக்கியத்துவத்திற்கும் மற்றவர்களை எப்படி சீடராக்குவது என்பதற்கும் அவர் சிறந்த உதாரணம் கொடுத்தார்.

பெற்றோர்களாக, நாம் தொடர்ந்து நம்முடைய பிள்ளைகளை வளர்க்கும் தருணத்தில் வேதாகமத்தின்வாயிலாகவும், வேதமரைகளுக்கு உத்தமமாய் கீழ்ப்படியவும் போலித்தனத்தைத் தவிர்த்தும் நம்மை நாமே மதிப்பீடு செய்யவேண்டும். தேவன் பரிபூரணத்தை அல்ல, ஒத்துழைப்பைத் தேடுகிறார், மேலும் அவர் மாற்றத்தை விரும்புகிறார். நீங்கள் ஒழுக்கத்திற்காக அலறல் மற்றும் கத்தலைப் பயன்படுத்தினால், கிறிஸ்துவை தவறாக சித்தரித்து, நீங்கள் தோல்வியடையும் போது தேவன் மற்றும் உங்கள் குடும்பத்தினரிடம் மன்னிப்பு கேட்பதன் மூலம் வழிநடத்தாமல் இருந்தீர்களேயானால், இது உங்கள் குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கும் திறனை பாதிக்கும். தேவன் நம்முடைய தோல்விகளை மன்னிக்கிறார், ஆனால் நமக்கும் மற்றவர்களுக்கும் மாற்றத்தை ஏற்படுத்த நாம் அவருடைய கொள்கைகளுக்கு தொடர்ந்து கீழ்ப்படிய வேண்டும்.

**சுய பரிசோதனை**

பெற்றோர்கள் மனதில் மற்றும் தீர்ப்புகளில், ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒற்றுமைக்கான வேதாகம கொள்கைகளைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது என்பதை விவரிக்கவும். ஒரு ஜோடியாக, நீங்கள் இன்னும் ஒற்றுமையாக இருக்க வேண்டிய இடத்தை அடையாளம் காணவும்.

சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரேகாரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும்வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். (1 கொரிந்தியர் 1:10)

நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். (பிலிப்பியர் 2:2)

________________________________________

________________________________________

________________________________________

இந்த கொள்கைகள் கலப்பு குடும்பங்கள் உட்பட அனைத்து குடும்பங்களுக்கும் பொருந்தும். அம்மா, உங்களுடைய கணவர் இரட்சிக்கப்படாதவராக இருந்தால், உங்கள் குழந்தையை சீடராக்க முடியுமா? நிச்சயமாக. நீங்கள் ஒற்றை பெற்றோராய்/ தாயாய் இருந்தால், உங்களுடைய பிள்ளையை சீடராக்க முடியுமா? நிச்சயமாக. நீங்கள் தாத்தா பாட்டி அல்லது வளர்ப்பு பெற்றோராக இருந்தால் என்ன செய்வது? நிச்சயமாக இயலும்.

**ஜெபமென்னும் வல்லமைவாய்ந்த கருவி**

பிரார்த்தனை சீடத்துவத்தின் அடிப்படை பகுதியாக இருக்க வேண்டும். தேவனின் வார்த்தை நமக்கு சொல்கிறது, "இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்" (1 தெசலோனிக்கேயர் 5:17). தேவன் தன்னிடம் தைரியமாக வரச் சொல்கிறார் (எபிரேயர் 4:16); கேட்க, தேட மற்றும் தட்டுவதற்கு (மத்தேயு 7: 7); மற்றும் ஜெபத்தில் எல்லாவற்றையும் அவரிடம் கொண்டு வர (பிலிப்பியர் 4: 6). குடும்பத் தலைவர்களாக, தந்தைகள் ஒவ்வொரு நாளும் தங்கள் மனைவி மற்றும் குழந்தைகளுடன் பிரார்த்தனை செய்ய வேண்டும். தந்தை எல்லாவற்றிலும் தெய்வீக முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஜெபத்தில் தேவன் நமக்கு வல்லமைவாய்ந்த கருவியை கொடுத்திருக்கிறார், எனவே நாம் அதை நம் அன்றாட வாழ்வில் இணைக்க வேண்டும். இறந்துபோன அல்லது தூரத்தில் வாழும் தந்தைக்கு பதிலாக, ஒற்றை அம்மாக்கள் தங்கள் குழந்தைகளுக்கு எல்லாவற்றையும் கொடுக்க முடியும்.

என் குடும்பத்தில், என் கூச்ச சுபாவமுள்ள, சிறிய மகள் பிரார்த்தனையை நான் மட்டுமே கேட்டேன். அவள் என் மனைவி அல்லது அவள் சகோதரர்கள் முன் ஜெபிக்க மாட்டாள். அவரது பதின்ம வயதிலேயே, அவள் பெரியவர்களை விட அதிக புத்திசாலித்தனத்துடனும் நோக்கத்துடனும் பிரார்த்தனை செய்தாள்: தேவனின் வலிமைக்காக, அவளுடைய பாவங்களை மன்னிப்பதற்காக, அவளுடைய நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்காக, மக்களின் இரட்சிப்புக்காக. அவளுடைய பிரார்த்தனை அடிக்கடி என் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. நாங்கள் ஒவ்வொரு இரவும் ஒன்றாக பிரார்த்தனை செய்ததால் அவள் பிரார்த்தனை செய்யும் இளம் பெண்ணாக வளர்வதை பார்க்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. என் மகளுடன் பிரார்த்தனை செய்த பிறகு, என் பதின்ம வயது பையன்கள் என்னையும் என் மனைவியையும் எங்கள் அறையில் சேர்த்துக் கொள்வார்கள், நாங்கள் அனைவரும் ஒன்றாக பிரார்த்தனை செய்வோம். அது வல்லமைவாய்ந்தது மற்றும் மிகப்பெரிய ஆசீர்வாதம்.

**தேவனின் வார்த்தையை ஊக்குவித்தல்**

நம் குழந்தைகளில் தேவனின் வார்த்தையைப் புகுத்துவது சீடத்துவத்தின் மையமாகும். "எல்லா விடாமுயற்சியையும் கொடுத்து, உங்கள் விசுவாச நல்லொழுக்கத்தையும், நல்லொழுக்க அறிவையும் சேர்க்க" (2 பேதுரு 1: 5) என்று தேவன் நமக்குக் கூறுகின்றார். தேவனின் வார்த்தையை நாமே கற்றுக்கொள்ள நாம் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும், பின்னர் நாம் நம் குழந்தைகளுக்கு வார்த்தையை கற்பிக்க முடியும். "எல்லா விடாமுயற்சியையும் கொடுப்பது" ஒரு சீரான, தடையில்லா முறையைக் குறிக்கிறது. அதற்காக, குடும்ப வேதாகம பறிச்சியானது, உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது அல்ல, தவறாமல் செய்யப்பட வேண்டும். நீங்கள் ஒரு திட்டத்தை உருவாக்கி அதில் நிலைத்திருக்க வேண்டும்.

தம்பதிகள் கடமைகளை பிரிக்கலாம், அது உங்களுக்கு உதவிகரமாயிருந்தால். என் மகன்கள் வளர வளர நான் அவர்களை ஒழுங்குபடுத்தினேன். என் மகள் வீட்டில் படித்ததால், என் மனைவி அவளை ஒழுங்குபடுத்தினார். நாங்கள் எங்கள் வாராந்திர பைபிள் படிப்பு வேதாகம பயிற்சி இரவுகளில் இருந்தபோது, அனைவரும் ஒன்றாக பங்கேற்றனர். மாலை நேரங்களில் நான் என் மகளுடன் தனிப்பட்ட நேரத்தை செலவிட்டேன், நாங்கள் ஒன்றாக பிரார்த்தனை செய்தோம். "இன்று நீ நமது வேதாகம பயிற்சியில் என்ன கற்றுக்கொண்டாய்?" என்று கேட்டு அவளை பகிர

அழைப்பேன். அவள் கற்றுக்கொண்டதை விரிவுபடுத்துவதற்கும் அவளுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை மேற்பார்வையிடுவதற்கும் இது எனக்கு வாய்ப்பைத் திறந்தது.

**வாராந்திர வேதாகம பயிற்சிக்கான ஏழு படிகள்**

**படி 1: எளிமையாக வைத்திருங்கள்**

உங்கள் குழந்தையின் இருதயத்தில் தேவனின் வார்த்தையை வைப்பதே நோக்கமேயல்லாது, ஒரு வேதாகம அறிஞரை நீங்கள் உருவாக்கவில்லை. நீங்கள் ஒரு பெரிய வேதாகம பயிற்ச்சிக்கு உதவ வயதுக்கு ஏற்ற பொருட்கள் நிறைய உள்ளன. பின் இணைப்பு Dல் உள்ள குறுகிய பட்டியலைப் பார்க்கவும்: பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்கள்.

**படி 2: சுருக்கமாக வைத்திருங்கள்**

குடும்ப உறுப்பினர்கள் கவனத்தில் வேறுபடுத்துகிறார்கள். ஒரு விரிவுரையை விட, வேதாகம பயிற்சி ஒரு உற்சாகமான குடும்ப நேரமாக இருக்க வேண்டும் என்ற உண்மையை உணருங்கள்.

நான் என் குழந்தைகளுடன் வேதாகம பயிற்சியினை தொடங்கியபோது, நான் ஒரு இளைஞர் போதகராக இருந்தேன், என் குழந்தைகள் மிகவும் இளமையாக இருந்தனர். நான் செய்த முதல் சில வேதாகம பயிற்சி நேரங்களில், நிக் உள்ளே வந்து படுக்கையில் தலைகீழாக இருந்து தலையணையை காற்றில் தூக்கி எறிவான். நான் விரக்தி அடைவேன்.

"நிக்கோலஸ், உட்கார்! அதை நிறுத்து! நாங்கள் இப்போது வேதாகம பயிற்சி செய்கிறோம்!"

நாங்கள் படுக்கைக்குச் செல்லும்போது, என் மனைவி, "எனக்கன்பான கணவரே, நீங்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கற்பிக்கும் போது, அவர்களுடன் மகிழ்கின்றீர்கள், ஆனால் ஏன், நம் சொந்தக் குழந்தைகளுடன், நீங்கள் மிக கடுமையாக இருக்கிறீர்களா?" என்று.

என்னிடம் பதில் இல்லை. எனவே நான் எங்கள் நேரத்தை ஒன்றாக களிப்புடன் செய்யக் கற்றுக்கொண்டேன், அது ஒரு சொற்பொழிவு அல்ல. சாக்லேட் குலுக்கல் மற்றும் பாப்கார்ன் இருப்பது நலம். கூடுதலாக, நிக் தலைகீழாக நேர்த்தியாக கேட்கிறான் என்பதை நான் கற்றுக்கொண்டேன்.

**படி 3: உற்சாகமாக்குங்கள்**

விசுவாசத்திற்கான உங்கள் சொந்த அன்பு மற்றும் உற்சாகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள், பின்னர் அதை உங்கள் குழந்தைகளுக்கு மாற்றவும். தேவனுடைய வார்த்தையில் இருப்பதில் நீங்கள் உற்சாகமாக இருக்கிறீர்களா? தேவன் உங்களைச் சுற்றிலும் செய்யும் வேலையைப் பார்த்து உற்சாகமாக இருக்கிறீர்களா? நீங்கள் உற்சாகமாக இல்லாவிட்டால், அது ஒவ்வொரு முறையும் ஒரு சொற்பொழிவாக இருக்கும். இன்று தேவன் உங்களுக்குச் சொன்னதைப் பற்றி நீங்கள் உற்சாகமாக இருக்கிறீர்களா?

எங்கள் சிறுவர்கள் இளமையாக இருந்தபோது, அவர்கள் வேதாகமத்தில் உள்ளவர்களைப் பற்றிய ஒரு கிறிஸ்தவ, அனிமேஷன் வீடியோ தொடரைப் பார்த்தார்கள். என் மகன் நிக்கோலஸ், இப்போது ஒரு வளர்ந்த மனிதன், அவன் குழந்தையாக இருந்தபோது அந்த வீடியோக்களில் பார்த்த விஷயங்களை இன்னும் நினைவில் வைத்திருக்கின்றான்.

நானும் என் மகளும் சிறு வயதில் பைபிள் போர்டு விளையாடுவோம். அடிக்கடி நாங்கள் அதை தொடர்ச்சியாக மூன்று முறை விளையாடுவோம். நாங்கள் வேதாகாமப் பயிற்சிகளில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக செலவிடுவோம். அவள் ஒரு கேள்வி பதில் அட்டையை இழுப்பாள். கேள்விகளுக்கான பதில்களை என்னால் விளக்க முடியும், அவள் அதை விரும்பினாள்.

**படி 4: நெகிழ்வாக இருக்க வேண்டும்**

அனைத்து குடும்பங்களும் எதிர்பாராத சூழ்நிலைகளை அனுபவிக்கின்றன. உங்கள் குழந்தைகள் கால்பந்து அல்லது பேஸ்பால் அல்லது நடனத்தைத் தொடங்கலாம், நீங்கள் சொல்ல முடியாது: இல்லை, நீங்கள் பேஸ்பால் விளையாட முடியாது, ஏனென்றால் வியாழக்கிழமை இரவு நமது வேதாகம பயிற்சி. "

எங்கள் குடும்பம் வாரத்தின் ஒவ்வொரு இரவிலும் ஏதாவது ஒரு சமயத்தில் வேதாகம பயிற்சியை நடத்தியது என்று நினைக்கிறேன். நிக் ஒரு இசைக்குழுவைத் தொடங்கினான். அவன் இசைக்குழு பயிற்சி பெற்றதால், நாங்கள் ஞாயிறு இரவுகளுக்கு மாற்றினோம். ஜஸ்டின் கைப்பந்து விளையாடினான், அவன் பயிற்சி பெற்றான். எனவே நாங்கள் அதை செவ்வாய்க்கிழமை இரவுகளுக்கு நகர்த்தினோம்.

நீங்கள் நெகிழ்வாக இருக்க வேண்டும், ஆனால் எந்தவொரு தன்னிச்சையான நிகழ்வும் வேதாகமப் பயிச்சியை ஒத்திவைக்கவோ தவிர்க்கவோ கூடாது.

**படி 5: இனக்கமாக இருக்கவும்**

நெகிழ்வுத்தன்மை சில நேரங்களில் தேவைப்படும்போது, நீங்கள் உங்கள் வேதாகம பயிற்சியில் இனக்கமாக இருக்க வேண்டும், அதன் மூலம் உங்கள் உறுதிப்பாட்டை பராமரிக்க வேண்டும். தேவன் கீழ்ப்படிதலை ஆசீர்வதிக்கிறார்.

உதாரணமாக, பெற்றோர்கள் தொடர்ந்து பல மாதங்களாக வேதாகமப் பயிற்சிக்காக குடும்பத்தை ஒன்று சேர்க்கிறார்கள், பின்னர் கோடை காலம் வந்து அட்டவணை மாறும் அல்லது குடும்பம் விடுமுறையில் செல்கிறது. வேதாகம பயிற்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது, அவர்கள் அடுத்த வாரம் அல்லது அடுத்த வாரம் மீண்டும் தொடங்குவார்கள் அல்லது அதற்குப் பிறகு இருக்கலாம் என்று அவர்கள் கூறுவார்கள். திடீரென்று அவர்களின் வீட்டில் ஒரு நெருக்கடி நடக்கிறது, வேதாகமப் பயிற்சிக்காக குடும்பம் ஒன்று கூடி பல மாதங்கள் ஆகிவிட்டதை அவர்கள் உணர்கின்றார்கள்.

**படி 6: யதார்த்தமாக இருக்கவும்**

உங்கள் தரத்தை உயர்ந்ததாக வைத்திருங்கள் ஆனால் உங்கள் எதிர்பார்ப்புகளை காரணத்திற்குள் வைத்திருங்கள். தேவனைப் பற்றி உங்கள் பிள்ளைக்கு கற்பிக்கும் செயல்முறை வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது. நீங்கள் மதிப்புமிக்க விதைகளை விதைக்கிறீர்கள், அவை வளரவும், முதிர்ச்சியடையவும், பழம் கொடுக்கவும் நேரம் எடுக்கும். அன்பு மிகவும் வல்லமைவாய்ந்த உந்துதல் என்பதை நினைவில் கொள்ளுங்கள், எனவே நீங்கள் கற்பிக்கும் போது ஒவ்வொரு குழந்தைக்கும் பயிற்சி அளிக்கும்போது அன்பிற்கும் ஒழுக்கத்திற்கும் இடையில் ஒரு சமநிலையை வைத்திருங்கள்.

ஒரு தந்தை என்னிடம் சொன்னார், அவர் தனது குழந்தைகளை தினமும் வேதாகமத்திலிருந்து ஒரு அத்தியாயத்தைப் படிக்கச் செய்தார், அது அவர்களுக்கு என்ன சொல்கிறது என்று ஒரு முழு பக்கத்தை எழுதச் செய்தார். அவர் தனது குழந்தைகளுக்கு வேதாகமத்தை கற்பிக்கிறார் என்று அவர் உறுதியாக நம்பினார், ஆனால் அவருடைய முறைக்கு அவரது மனைவி உடன்படவில்லை என்பதை அவரது மனைவியின் எதிர்வினை மூலம் என்னால் அறிய முடிந்தது. அவர்கள் முழுப் பக்கத்தையும் நிரப்பாதபோது என்ன நடந்தது என்று கேட்டேன் அல்லது அவர்கள் எழுதியது

ஏற்கத்தக்கதுதானா? அவர் அதை செய்யச் செய்கிறார் என்று அவர் மிகவும் பெருமையுடன் என்னிடம் கூறினார்.

உங்கள் மாணவர்களின் வயது மற்றும் திறன்களுக்கு ஏற்ற பொருட்கள் மற்றும் கற்பித்தல் பாணியைப் பயன்படுத்துங்கள். என்ன செய்வது, அல்லது வேதாகப்பயிற்சியை எப்படி உற்சாகத்தோடு செய்வது என்று போராடும் பெற்றோர்களுக்கு, உங்கள் குழந்தைகளுடன் அவர்கள் எப்படிப் பழகுகிறார்கள் என்பதை உங்களது ஒய்வுநாள் பள்ளியைச் சேர்ந்த ஆசிரியரிடம் கேட்கவும். குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டுவதைப் பார்த்து, ஆசிரியரிடம் ஒரு சிறிய உதவி கேட்கவும்.

**படி 7: தொடங்குக**

ஒருவேளை உங்கள் படிப்புக்கான மிக முக்கியமான படி தொடங்குவதேயாகும். மாற்றம் எப்போதுமே சற்று சங்கடமாக இருக்கும், மேலும் நீங்கள் பதட்டமாக இருக்கலாம், உங்கள் திட்டத்தின் படி விஷயங்கள் நடக்காது என்று பயப்படலாம். மேலே உள்ள விஷயங்களை மறுபரிசீலனை செய்து, உங்கள் குடும்பத்திற்காக அவருடைய சித்தத்தைச் செய்ய ஞானம் மற்றும் வலிமைக்காக தேவனிடம் மன்றாடுங்கள். பயம், பெருமை, உங்கள் வேலை அல்லது உங்கள் இயலாமை பற்றிய பாதுகாப்பின்மை உங்கள் வழியில் வர விடாதீர்கள். யாரையும் விட உங்கள் குழந்தைகளின் மீது உங்களுக்கு அதிக செல்வாக்கு உள்ளது. அவர்களுக்காக பயன்படுத்தவும். அவர்கள் ஏற்கனவே உங்களை நேசிக்கிறார்கள், அவர்கள் பெற்றோர்களாகிய உங்கள் கவனத்தையும் கவனிப்பையும் விரும்புகிறார்கள்.

ஒரு கோடையில், எங்கள் அனுதின மன்னா என்ற ஒரு தியான புஸ்தகத்தை பயன்படுத்தினோம், ஏனென்றால் விஷயங்கள் மிகவும் தீவிரமாக இருந்தன. ஜஸ்டின் வேதத்தை வாசித்தான், நிக் கதையைப் படித்தான், நாங்கள் எங்கள் உள்ளீட்டைக் கொடுத்தோம், நாங்கள் பிரார்த்தனை செய்தோம். இது எளிமையானது, ஆனால் பயனுள்ளதாக இருந்தது.

என் குழந்தைகள் பதின்ம வயதினராக இருந்தபோது, அவர்கள் வேதாகமத்தைத் திறந்து வாசித்தபோது, அது என்னை ஆசீர்வதித்தது. தேவனின் வார்த்தையை தங்களுக்காக தேடும் அளவுக்கு அவர்கள் முதிர்ச்சியடைந்தனர். நான் இளைஞனாக இருந்தபோது, நான் கடைசியாக எடுத்தது ஒரு வேதாகமத்தை தான். அது என் மனதை தாண்டியதில்லை. நான் அப்படி ஏதாவது செய்ய நேரம் ஒதுக்கியிருக்க மாட்டேன்.

இன்றுவரை, நான் என் குழந்தைகளை வார்த்தையிலும் ஜெபத்திலும் தொடர்ச்சியாக இருக்கும்படி அறிவுறுத்துகிறேன். தனிப்பட்ட, தினசரி தியான வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை நான் அவர்களுக்குக் கூறுகிறேன், ஆனால் நாம் அனைவரும் எப்போதாவது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

உங்கள் குழந்தைகள் எதை நம்புகிறார்கள் என்பதை உலகம் கட்டளையிட அனுமதிக்காதீர்கள். உங்கள் குழந்தைகளை சீஷராக்க நேரம் ஒதுக்குங்கள்.

**பின் இணைப்பு வளங்கள்**

இந்த பிறசேர்க்கைகள் கூடுதல் ஆதாரங்களாக சேர்க்கப்பட்டுள்ளன. அவை நான்கு தொகுதிகளிலும் காணப்படுகின்றன, ஆனால் ஒவ்வொரு தொகுப்பிலும் அனைத்து பிறசேர்க்கைகளும் சேர்க்கப்படவில்லை. நீங்கள் ஒரு குறிப்பிட்ட பின்னிணைப்பை மதிப்பாய்வு செய்ய விரும்பினால், அது கீழே உள்ள பட்டியலில் எங்குள்ளது என்பதைக் கண்டறிய உதவும்.


| | |
|---|---|
| பின் இணைப்பு A: பெற்றோர் அர்ப்பணிப்பு கடிதம் | தொகுதி 1 |
| பின் இணைப்பு B: கிறிஸ்துவிடம் உங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தல் | தொகுதி 1 |
| பின் இணைப்பு C: தேவனுடன் தினசரி நெருக்கத்தை வளர்த்துக் கொள்ளுதல் | தொகுதி 1 |
| பின் இணைப்பு D: பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்கள் | தொகுதி 1 & 3 |
| பின் இணைப்பு E: நம்பிக்கை மற்றும் மன்னிப்பு | தொகுதி 2 |
| பின் இணைப்பு F: திறம்பட கேட்பது சுய -மதிப்பீட்டு | தொகுதி 2 & 4 |
| பின் இணைப்பு G: உங்கள் அன்பான தகவல்தொடர்பு தொகுதிகளை | தொகுதி 2 & 4 |
| பின் இணைப்பு H: உங்கள் பிள்ளைக்கு அன்பைக் காண்பித்தல் | தொகுதி 2 |
| பின் இணைப்பு I: ஒற்றை பெற்றோருக்கான அத்தியாவசியங்கள் | தொகுதி 3 |
| பின் இணைப்பு J: கலப்பு குடும்ப தொகுதி பெற்றோருக்குரிய | தொகுதி 3 |
| பின் இணைப்பு K:  பிள்ளைக்கு கிறிஸ்து | தொகுதி 3 |
| பின் இணைப்பு L: பொருத்தமற்ற பொழுதுபோக்கு | தொகுதி 3 |
| பின் இணைப்பு M: ஒழுங்குபடுத்தும் நடத்தை | தொகுதி 4 |
| பின் இணைப்பு N: விதிகள் மற்றும் விளைவுகள் | தொகுதி 4 |
| பின் இணைப்பு O: நேர்மறை வலுவூட்டல் | தொகுதி 4 |
| பின் இணைப்பு P: வேலை பட்டியல் | தொகுதி 4 |
| பின் இணைப்பு Q: பதின்வயதினருக்கான கேள்வித்தாள் | தொகுதி 4 |
| பின் இணைப்பு R: புதிய பெரியவர்களுக்கான கேள்வித்தாள் | தொகுதி 4 |
| பின் இணைப்பு S: பெற்றோர் சுய மதிப்பீட்டு | தொகுதி 4 |
| பின் இணைப்பு T: சொற்களஞ்சியம் | தொகுதி 1–4 |

**பின் இணைப்பு D**

**பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்கள்**

தேவனுடனான உங்கள் உறவை ஆழப்படுத்த பல சிறந்த புத்தகங்கள் இருந்தாலும், உங்களுக்கு வழிகாட்டவும், கற்பிக்கவும், சவாலாகவும் கீழ்க்கண்டவற்றை பரிந்துரைக்கிறோம்.

**சீடத்துவதிற்கான புத்தகங்கள்**

க்ரெய்க் கேஸ்டரின் கிறிஸ்தவ அடிப்படை உண்மைகள்: ஒரு
சீடனுக்கான வலுவான அடித்தளம்

ஹென்றி டி பிளாக்எபய், ரிச்சர்ட் பிளாக்எபய், மற்றும் கிலாட் V.கிங் இவர்களின் கடவுளை அனுபவிப்பது: தேவனின் விருப்பத்தை அறிந்து செய்வது சார்ல்ஸ் R. ஸ்விண்டோலின்

மனிதனுக்கு மனிதன் க்ரெய்க் கேஸ்டரின்
குடும்ப வாழ்க்கை ஒரு ஊழியம் தொடர் Dr. லேரி கிரேபின்
தைரியமுள்ள மனிதர்கள்: ஆதாமின் அமைதிக்கு அப்பால் செல்ல தேவனின் அழைப்பு

**தியான புத்தகங்கள்**

தேவனுடனான அனுதின அனுபவம். - ஆண்ட்ரு மேரரி.
கிட்டிச்சேருத்தல்: ஆழ்ந்த விசுவாசத்திற்கான அனுதின தியானம். - ஜான் F. மெக்கார்தரி.
இயேசுவோடு ஒவ்வொருநாளும்: புதிய விசுவாசிகளுடனான முதற்படிகள் கிரெக் லாரி.
ஹென்றி டி பிளாக்எபய், ரிச்சர்ட் பிளாக்எபய், மற்றும் கிலாட் V.கிங்.
தேவ அனுபவம்: தேவனுடைய சித்தத்தை அறிந்து நடப்பது ப்ரெண்டா க்வின் மற்றும் பிஹிலிப் யான்சே .
வேதாகமத்தை சந்திப்பது: 366 அனுதின தியானங்களிலும் பிரதிபலிப்புகளிலும் தேவனுடைய வார்த்தையின்பறந்தக்காட்சி. - டென்னிஸ் மற்றும் பார்பரா ரெயினி .
தம்பதிகளுக்கான தருணங்கள் அவரது உயர்ந்த நிலைக்கு எனது உச்சம். - ஓஸ்வால்ட் சாம்பெர்ஸின் புகேடின்
தோட்டத்தின் மறுபக்கம், வேதாகம பெண்மை - விர்ஜினியா ரூத்
பாலைவன நீரோடைகள். - திருமதி. சார்லஸ் E. கவ்மன்
தினசரி அன்பின் தைரியம் தம்பதியினருக்கான வருடாந்திர தியானங்கள். - ஸ்டீபன் மற்றும் அலெக்ஸின்
மனைவியினுடைய ஜெபத்தின் வல்லமை, - ஸ்டோர்மி ஓமார்ட்டின்
ஒரு வருட சங்கீத புஸ்தகம். - வில்லியம் J. பீட்டர்சன் மற்றும் ரேண்டி பீட்டர்சனின்,
பதின்மவயதினரை புரிந்துகொள்ளுதல். - கிரேயிக் கேஸ்டெரின்

**குழந்தைகளுக்கும் இளம் பருவத்தினருக்கான தியான மற்றும் சீடத்துவ புஸ்தகங்கள்**

தேவனுக்காக தீவிர வாழ்வு வாழ்ந்த பதினைந்து இளம் வேதாகம வீரர்கள். - மைல்ஸ் மேக்பர்சோனின் கலகக்காரரர்கள்.

பிடித்த வேதாகமக் கதைகள் (பலதரப்பட்ட வயதினருக்கு) . - கரோலின் பஸ்சிக் ஜென்செனி.

தேவனின் நானும்! பெண்பிள்ளைகளுக்கான தியானங்கள். - லின் மாரி-இட்னர் க்ளாமர், டயேன் கோரி, லிண்டா M. வாஷிங்டன், மற்றும் ஜெனெட் டால் உட்பட பல எழுத்தாளர்கள்.

தேவன் உங்களிடம் இருக்கவேண்டும்: சிறுவர்களுக்கான கேளிக்கையான தியானங்கள், 2 இலிருந்து 5 வயதினர்கள். - லின் மாரி-இட்னர் க்ளாமரின்.

தேவன் உங்களிடம் இருக்கவேண்டும்: வாலிபர்களுக்கான தியானங்கள் (பலதரப்பட்ட வயதினருக்கு). - லெகசி பிரஸ், லிண்டா M. வாஷிங்டன், மற்றும் ஜெனெட் டால் உட்பட பல எழுத்தாளர்கள்.

வளரும் சிறு பெண்கள்: உங்கள் மகளுடன் கற்பிக்கக் கூடிய தருணங்களைக் கைப்பற்றுதல். - டோனா J. மில்லர், லிண்டா ஹோலன்டுடன்.

பேச்சு தாள்கள் (ஜூனியர் உயர் மற்றும் உயர்நிலைப் பள்ளி மானவர்களுக்கு பல்வேறு புத்தகங்கள்). - டேவிட் லின்னின்.

**பின் இணைப்பு I**

**ஒற்றை பெற்றோருக்கு அவசியமானவை**

குடும்பத்திற்கான தேவனின் அசல் திட்டம், திருமண உறவின் அன்பிலும் அர்ப்பணிப்பிலும் ஆணையும் பெண்ணையும் ஒன்றிணைப்பதாகும். அதன்பிறகு அவர் அவர்களின் அன்பையும் அர்ப்பணிப்பையும் குழந்தைகளின் வாயிலாக பரிசாக வழங்குவார். தங்கள் படைப்பாளருக்கு நெருக்கம், அன்பு மற்றும் சமர்ப்பிப்பு ஆகியவற்றின் சூழலில், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தேவனின் வழிகளில் நேசிக்கிறார்கள் மற்றும் பயிற்சி செய்கிறார்கள். திருமண உறவின் பலன் தெய்வீக சந்ததியாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

> ஏன் என்று கேட்கிறீர்கள்;
> கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்;
> உன்தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு
> நீ துரோகம்பண்ணினாயே.
> அவர் ஒருவனையல்லவா படைத்தார்?
> ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே.
> பின்னை ஏன் ஒருவனைப்படைத்தார்?
> தேவபக்தியுள்ள, சந்ததியைப் பெறும்படிதானே.
> ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு,
> உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கை யாயிருங்கள். (மல்கிய 2:14-15)

ஆணும் பெண்ணும் படைப்பாளியிடமிருந்து விலகி ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்தபோது, தேவனுடனான அவர்களின் நெருக்கம் அழிக்கப்பட்டது, அவர்கள் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர், மேலும் குடும்பத்திற்கான தேவனின் அசல் திட்டம் பாதிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சி ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஒற்றுமையின்மை மற்றும் சச்சரவை விளைவித்தது, இது ஆண் மற்றும் பெண் உறவுகள் மற்றும் திருமணங்களில் இன்றும் ஆதிக்கம் செலுத்துகிறது மற்றும் அழிக்கிறது. கூடுதலாக, திருமணத்திலிருந்து வரும் சந்ததியினர் தங்கள் பெற்றோரின் பாவ இயல்பைப் பெற்றனர் மற்றும் அவர்களைப்போலவே அவதிப்பட்டனர். ஒற்றை பெற்றோர் குடும்பங்கள், மரணம், விவாகரத்து மற்றும் திருமணமாகாத தாய்மார்களுக்கு பிறந்த குழந்தைகள் ஆகியவை மனிதனின் வீழ்ச்சியின் விளைவாகும்.

> அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடம் கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படி இருக்கவில்லை. (மத்தேயு 19:8)

வேதத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் ஒற்றை பெற்றோர் குடும்பம் ஆகார், ஆபிராம் மற்றும் சாராயின் (ஆபிரகாம் மற்றும் சாராள்) எகிப்திய பணிப்பெண். மற்றும் அவரது மகன், ஆபிராமால் பிறந்த இஸ்மாயில். சாராய் குழந்தைகளை ஈன்றெடுக்க முடியவில்லை, தனது கணவனிடம், ஹாகாரிடம் ஒரு பிள்ளை பெற்றெடுக்க வலியுறுத்துகிறார். சாராய் பிற்பாடு தனது மனதை மாற்றி ஹகாரிடமும் அவளுடைய மகன்மீதும் கோபமடைந்தார். இரண்டு தருணங்களில் தேவன் ஹகாரை சந்தித்தார்.

